www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
பெப்.16-22,1997

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 192

## ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்
## குறுக்கீடும் — தாக்குதலும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## மருத்துவமனையில் மனித வேட்டை



## இளைய நாயகி



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## உற்சாகமில்லாத திருவிழா

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

உள்ளூராட்சித் தேர்தல்
திருவிழா தொடங்கிவிட்டது!
அரசியல் கட்சிகள்
கடைவிரித்துவிட்டன!

"மார்ச் மாதத்தில்
தீர்வுத்திட்டம் பூரணமாகும்."
என்றார் நீதியமைச்சர்!

தீர்வு வரவில்லை:
தேர்தல்தான் வந்திருக்கிறது!
எதிர்க்கட்சி
கேட்டுக் கொண்டதின் பேரில்
தீர்வை ஆராய்வதை
ஒத்திப் போட்டிருப்பதாக
செய்தி ஒன்று வெளியானது!

தேர்தலை
ஒத்திப்போடும்படியும்
தமிழ்க் கட்சிகள் ஊடாக
எதிர்க்கட்சி தூதுவிட்டது.
ஆளும் தரப்பு
அதனை மறுத்துவிட்டது!
தீர்வுத் திட்ட ஆராய்ச்சி
விடயத்தில் மட்டும்
எதிர்க்கட்சியின் கருத்துக்கு
ஆளும் தரப்பு செவிசாய்த்துள்ளது!

தேர்தல் களத்தில்
எலியும்-பூனையுமாக
மோதி முடித்துவிட்டு,
தீர்வுத் திட்ட விடயத்தில்
இரு தரப்பும்
கை குலுக்கிக்கொண்டு
கருத்தொருமிப்பு
காணப்போகின்றன என்பது
கலப்படமில்லாத கற்பனை!

எதிர்க்கட்சி,
தீர்வு விடயத்தில்
உளமாற ஒத்துழைக்காது
என்று தமிழ்க் கட்சிகளிடம்
ஜனாதிபதி கூறியிருக்கிறார்.
உண்மையும் அதுதான்!

ஒத்துழைப்புக் கிடையாது,
என்று தெரிந்த பின்னரும்
தெரிவுக்குழு ஆராய்ச்சி
தொடரத்தான் வேண்டுமா?

கடந்த பொதுத்தேர்தலில்
நாட்டில் சமாதானத்தை நிறுவ
திருவாளர் பொதுஜனத்தின்
தீர்ப்பைக் கோரினார் ஜனாதிபதி!

இன்றைய உள்ளூராட்சித் தேர்தலில்
இனப்பிரச்சனைக்கான
தீர்வுத் திட்டத்தை முன்வைத்து
மக்களின் ஆதரவை
நாடும் துணிச்சல் வரவில்லை.

மக்களிடம் நேரடியாகச் சென்று
தீர்வுத்திட்டம் பற்றி விளக்க
உள்ளூராட்சித் தேர்தல் மேடைகளை
வாய்ப்பான களமாகப்
பயன்படுத்தி இருக்கலாம்!

சர்வஜன வாக்கெடுப்பில்
மட்டும்தான்
தீர்வுத் திட்டம் பற்றி
விளக்க வேண்டும் என்றில்லை!

நாட்டின் பிரதான பிரச்சனைகளை
முன்வைத்தும்-அவற்றுக்கு
தமது தீர்வை முன்வைத்துமே
அரசியல் கட்சிகள்
வாக்காளர்கள் முன்செல்வதுதான்
ஆரோக்கியமான அரசியல்!

ஆனால்- ஆளும்தரப்பும்
எதிர்த்தரப்பும்
உள்ளூராட்சித் தேர்தலில்,
கடந்த கால ஆராய்ச்சியை
தேர்தல் பிரசார தந்திரமாக
தம் கையில் எடுத்துள்ளன.

வீதிகளில் டயர்களை எரித்து,
கடந்த காலத்தை
நினைவூட்டப் போகிறதாம்
ஆளும் தரப்பு!

அதற்கு விளக்கம் சொல்லி
வெளுத்து வாங்க
வரிந்து கட்டுகிறது
எதிர்க்கட்சி!

நாடே பற்றியெரியக்
காரணமான பிரச்சனைக்கு
தங்கள் இறுதியான தீர்வென்ன
என்பதை எடுத்துச் சொல்ல
இரு தரப்பும் தயாராக இல்லை!

கடந்த பொதுத்தேர்தல்,
ஜனாதிபதித் தேர்தல்
ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில்
இந்த மினித் தேர்தல் சூழலும்
தேர்தல் பிரசாரங்களும்
கழுதை தேய்ந்து
கட்டெறும்பான கதைதான்!

இனவாதத்தை
கடந்த தேர்தலில்
இரு பிரதான கட்சிகளுமே
ஓரம் கட்டியிருந்தன!

இம் முறை
எதிர்க்கட்சி மறைமுகமாக
ஊக்குவிக்கிறது!
ஆளும் தரப்பும்
இனவாதத்தை எதிர்த்து
போதிய பிரசாரம் செய்யவில்லை!
ஆக மொத்தத்தில்
உள்ளூராட்சித் தேர்தல் திருவிழா
உற்சாகம் தருவதாக இல்லை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## கிருபை



"நாங்கள் சகலரிடமும் அன்பு செலுத்துகின்றோம், சகலரையும் நேசிக்கின்றோம், அரவணைத்து வாழ்கின்றோம்." என்று கூறுகின்ற மக்களைக் காணுகின்றோம்.

இவர்களின் அன்பு, அரவணைப்பு எல்லாமே தங்களை மதிக்கின்றவர்கள் மேலும், மரியாதை கொடுக்கின்றவர்கள் மேலும், மனம் நோக நடக்காதவர்கள் மத்தியிலுமே இருக்கின்றது. மாறாக மதியாத-மரியாதை கொடாதவர்கள், விரோதியானவர்கள் போன்றவர்களிடம் இருப்பதில்லை. ஆனால், கடவுள் பாவிகள் மீதும், துரோகிகள் மீதும், தூஷிக்கிறவர்கள் மீதும், கடவுள் இல்லை என்கிறவர்கள் மீதும், அன்பு செலுத்தி, அரவணைத்து, பாதுகாத்து, வழிநடத்தி வருகின்றார். இத்தகைய அளவு கடந்த கடவுளின் அன்பே கிருபை ஆகும். இத்தகைய அன்பை நாம், ஆண்டவர் இயேசுவில் காண்கின்றோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றி வாழ்கின்ற நாம், அன்பு செலுத்த பிறரின்- அன்பை அரவணைப்பை- மதிப்பை- மரியாதையை எதிர்பார்க்காமல் செயற்படுவோமாக.

அன்பு சகலத்தையும் தாங்கும்:
சகலத்தையும் சகிக்கும்:
அன்பு ஒருக்காலும் ஒழியாது (1 கொரி 13:7,8)

சகோ.எஸ்.யேசுநாதன், தளவாய், செங்கலடி.

## இப்படியும் காலம் வரும்

முஸ்லிம் சமுதாயத்தினரிடையே ஒரு காலம் வரும். அக்காலத்தில் உள்ளவர்கள் தமது முன்னோர்களான நபித்தோழர்கள், இமாம்கள், இறைநேசர்கள் மீது குறைகூறுவோர்கள். அந்த நல்லோர்களை மனிதர்கள் ஏச முற்பட்டுவிட்டால், சமுதாயத்தில் செம்புயலும், பூகம்பம் உட்பட பல்வேறு இயற்கை அனர்த்தங்களும் ஏற்படும். ஏனெனில் தனக்கு நெருக்கமான, தன் மீது அதிக அச்சமும் பற்றும்மிக்க தூயவர்களைப் பாவிகள் சாடும்போது அப் பாவிகளை நோக்கி இறையவன் கோபமும், சாபமும் கொள்வதால் இந்நிலை ஏற்படுமென நபிமொழி வியாக்கியானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

"உலகாசை பிடித்தவர்களும், சந்தர்ப்பவாதிகளும் அறிஞர்கள் போன்று வேடம் தரித்து, பாமர ஜனங்களிடம் உண்மையைத் திரித்துக் கூறித் தம் உலகாயத நலன்களைப் பெருக்கிக் கொள்வார்கள். உண்மையாளர்கள் உதாசீனம் செய்யப் பட்டுத் தகுதியும், அறிவாற்றலும், நேர்மையும் அற்ற பொய்யர்களும், புரட்டர் களும், மடையர்களும் பதவிகளில் அமர்வார்கள், என்பதும் நபிமொழிக்கருத்தாகும்

ஆதாரம் (தர்கிப்)

திஹாரிய-ஹாரித்.

# கவிதைப் போட்டி இல.189

### பரிசுக்குரிய கவிதை

## போர் மேகம்

போர்மேகம் கண்டு
புழுங்குவோர் பலிருக்க,
கார் மேகம் கண்டதுபோல்
கலங்காமல் ஆடுகிறாய்...!
நார் போல நம்மினமே
நன்றாகக் கிழியும் வரை
ஓயாது போர் மழைதான்-
உணர்வாரோ யாருமில்லை;
உனக்கென்ன...? நீ ஆடு!

த.கோமளராணி-ஆரையம்பதி.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### இயற்கை

சிங்கார தோகைகட்டி
வண்ண மீன்
கடை கட்டி
மயிலாட
வான் மழையாள்
நிலத்தோடு
கூடும்!

சுபா வரன்-கண்டி.

### குண்டு மழை

மழை வருவது கண்டு
மகிழ்ந்து கலாபம் விரித்த
மயிலே! மயிலே!!
வரப்போவதென்ன
குண்டு மழைதானே?

பூண்டுலோயா, மெய்யன் நடராஜ்-
கொழும்பு-4.

### கவனி!

வானம் இடியிடித்ததால்
மழைவருமென-
தோகை விரித்தாயா?
கூர்ந்து கேள்!
அது இடியா?
இல்லை வெடியா?

ஸிஹாரலி- கிண்ணியா-3.

### வாராதோ.... வாராதோ?

கார்மேகம் விண்சூழ கானமயில் ஆடும்!
போர்மேகம் மண் சூழ ஆறாய் குருதி ஓடும்!
இடி முழக்கம் செவிநுழைய மயில்தோகை விரிக்கும்!
வெடி முழக்கம் செவியதிர உடல் சிதறித் துடிக்கும்!
வசந்தத்தின் முகவுரையாம் மயிலாட்டம்
வாராதோ முகமலர சமாதான நீரோட்டம்!

பாயிஷா அலி- அலி ரைஸ் மில், கிண்ணியா-03.

### அமைதி நிலவ ஆடு!

நாட்டிலே சண்டை, பூசல்
நலிந்திடும் இந்த வேளை,
காட்டிலே 'தோகை' விரித்து,
களிப்புடன் ஆடும் மயிலே!
உன்னுடன் சேர்ந்து நாமும்
அன்புடன் கரங்கள் கோர்த்து,
அழகுடன் ஆடுவோமா?

ஸஹீனா ஸலாம்-
பொத்துஹெர.

### காலமாற்றம்



தோகை விரித்தால் என்னழகில்
சொக்கி நின்ற காலமெலாம்
எங்கோ ஓடி மறைந்தனவே...
இன்றோ மக்கள் கவலையெலாம்-
கொல்லத் துடிக்கும் துப்பாக்கிக்
குண்டுகளுக்கும் 'செல்' அடிக்கும்
எவ்வாறிங்கே தப்பிடலாம்...?
என்ற எண்ணம் ஒன்றேதான்!

ச.நிவேதிதா- ஹட்டன்.

### அமைதி இல்லை

அழகு மயிலாடும் தீவில்,
அமைதி தானிங்கு இல்லை,..

நஸபியா பஹர்தீன்- கொத்தான்தீவு, புத்தளம்.

### சூழலும் வாழ்க்கையும்

கார் மேகம் சூழ்ந்தால் உனக்குக் களிப்பு;
போர் மேகம் விலகினால் எமக்குக் களிப்பு
கார் காலம் வருஷத்தில் வருவதுண்மை!
போர் காலம் எமைவிட்டு விலகுவதுண்மையா?

திருமதி க.கதிரவேலு- பண்டாரிகுளம், வவுனியா.

### வேண்டுகோள்

கான மயிலாட
கடன் வந்து மேலாட
கடன் பட்டார் கொண்டாட
கடன் கொடுத்த நான் தின்டாட
தயவு செய்து கடன் கேட்க வேண்டாம்

திரு.க.சிவபாதம்-நம்பைக்குளம்- வவுனியா.

### கான மயில்

புக்கார விட்ட புகை குண்டில்
மிக்க மகிழ்வு கொண்டாடும்
திக்பிரமை பிடித்த கான மயிலே!
துக்கம் உன்னை தொடரமுன்
தூரத்தே ஓடு...!

கே.சிவநாயகம், தேற்றாத்தீவு-02.

### என்று வரும்?

கார்மேகம் திரண்டு வர(க்)
கண்டாடும் மயில் ஒன்று
போர் மேகம் பேரய்க் கலைந்து
நாம் ஆடும் நாள் என்று?

சி.மு.சுந்தரேசன்-மஸ்கெலியா.

# கவிதைப் போட்டி இல-192



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும்பதிவு செய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 22.02.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.192 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை



அன்பின் இனிய முரசே!

நீ தரும் ஆக்கங்கள் அனைத்தும் தேனாய்த் தித்திக்கின்றன. அதிலும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கொள்ளை ராணி பூலான்தேவியின் கதை இன்பத்தை இதயம்தனில் இதமாய்ச் சொரியும் இலக்கியநயம் என்பன வெரிபைன். மேலும் காதில பூ கந்தசாமி அண்ணனுக்கு கற்பனை ரொம்பத்தான் வருகிறதுபோலும்! அண்ணனின் கற்பனைக்குப் பாராட்டாது இருக்கவே முடியாது. இராமாயணத் தொடரை அமுதமாய் தரும் இராஜ குமாரனுக்கும், என் இனிய முரசுக்கும் மனப்பூர்வமான நன்றிகள். வளர்க முரசே!

செல்வன் மயில்வாகனம்-
மங்கேஸ்வரன், மட்/முறக்கொட்டாஞ்சேனை.

✉ ✍

திக்கெட்டும் நிகழும் செய்திகளை தீஞ்சுவையுடன் திரட்டித் தருவதில் 'முரசு' என்றும் முன்னணியில்! ரசிகன் தரும் 'பூலான் தொடர்' அற்புதன் எழுதும் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' இரண்டும் விறு விறுப்பாக உள்ளன. முரசின் பணி தொடர எனது வாழ்த்துக்கள் பல கோடி!

செல்வன் கே.வின்சென்ட்,
மட்/சத்துருக்கொண்டான்.

✉ ✍

நீ வாராவாரம் சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை. அதிலும் கொள்ளைராணி பூலான்தேவி மிக விறுவிறுப்பாக போய்க்கொண்டிருக்கிறது. காதிலை பூ கந்தசாமியாருக்கு ஒரு கைகுலுக்கல்.

எ.நிலோஜன், பெரிய
நீலாவணை-01, கல்முனை.

இந்திய அரசு தம் பிரச்சனையில் இப்போது மத்தியஸ்தம் செய்ய வராது. மற்றொரு நாடு இங்கு மத்தியஸ்தம் செய்வதையும் விரும்பாது என்று முரசு (எக்ஸ்ரே ரிப்போர்ட்) கூறியிருந்தது. "இலங்கைப் பிரச்சனையை இலங்கை அரசே தீர்த்துக் கொள்ள வேண்டும்!" என்று இந்திய வெளிநாட்டமைச்சர் கூறியிருப்பதன் அர்த்தம் அதுதான். முரசுக்கும் நாரதருக்கும் சபாஷ்

ஆ.லோகநாதன், திருமலை.

### பூச்சியல்ல — வண்டு

பிரியமுரசே!

வேவு விமானம் பற்றிய செய்தியில் ஒரு தவறு. வன்னி மக்களால் 'மூட்டைப் பூச்சி' என்று அழைக்கப்பட்ட வேவு விமானம் என குறிப்பிடப்பட்டிருந்தது. 'சில்வண்டு' என்றுதான் வன்னி மக்களால் அழைக்கப் பட்டது. காரணம்: அதன் ஒலி சில் வண்டின் ஒலியைப்போல இருந்தது.

ஈ.கதிரவன், வவுனியா.

### யார்தான் காரணம்?

பீட்டர் கெனமனை பாராட்டிய கூட்டணித் தலைவருக்கு அதிரடியார் கொடுத்திருந்தது தேவையான அடி. எல்லோரும் நல்லவர்களே என்றால் இனப் பிரச்சனை தோன்றவும், வளரவும் காரணமாக இருந்தது யாராம்? கண்ணுக்குத் தெரியாத பிசாசுகளா? தமிழ்க் கட்சித் தலைவர்கள் விளக்க வேண்டும்!

ஜே.ஆரையும் பாராட்டுகிறார்கள். கெனமன் மரணமானால் அவரையும் பாராட்டுகிறார்கள். பின்னர் இனப்பிரச்சனைக்கு காரணம் தென்னிலங்கைத் தலைவர்கள் என்றும் கூறுகிறார்கள். அப்படியாயின் யார் அந்த தலைவர்கள்? தமிழ்க் கட்சிகளே! இப்படியா நம்மை குழப்புவது?

எஸ்.சுந்தரம், கொழும்பு-05.

✉ ✍

சூடு, சுவை, சுவாரசியம் அதுதான் தினமுரசு! முற்றிலும் உண்மை. அனைத்தும் அசத்தல்! விடயங்களுக்கேற்றாற்போல் படங்களை தெரிவு செய்வதில் முரசுக்கே தனியிடம். சிந்துபதில் சூப்பருங்க! என்ன, காதில பூ வாத்தியாரே, இப்படி அசத்துறீரு..? கண்ணு கிண்ணு பட்டுடப் போகுது! ரசிகா! இது ரொம்ப வேகம்பா.

ஷர்மிலா இப்றாலெப்பை,
கல்முனை-07.

✉ ✍

இனிய முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் படு சுப்பர்தான். அற்புதன் எழுதும் அரசியல் தொடர் எங்களை மிகவும் கவர்ந்தது. அதோடு ரசிகனின் 'கொள்ளை ராணி' மிக விறு விறுப்பாக போகிறது. எங்களின் இனிய தினமுரசே! உன் பணி மென்மேலும் தொடர எங்களின் நல்வாழ்த்துக்கள்.

எம்.தயாளன், ஐ.எல்.அகமட்,
குவைட்.

✉ ✍

என்னைக் கவர்ந்த முரசே...!

நீ உன் இதழ்களில் சுமந்து வரும் பூலான்தேவியின் வாழ்க்கை சம்பவம், செம விறுவிறுப்பாக நடைபோடுகின்றது. அது மட்டுமா...! அனிதா இளம் மனைவி சூப்பர்... எனதிதயத்தைக் கிள்ளிய முரசே! உனக்கு எனது வாழ்த்துக்கள்.

என்.கொன்சி,
மொரட்டுவ.

'தூக்குமேடைக் குறிப்பு' காலத்துக்கு ஏற்ற வெளியீடு.

அடுத்த முரசு வழங்கப்போகும் அசத்தல் என்னவோ? 'இலக்கிய நயம்' மிக்க இனிமை.

செல்வி தயாளினி, மன்னார்.

### மடல் அனுப்பியவர்களில் இடமுள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

* பர்லானா-முலம்மில், பைசல் நகர்.
* ந.முல்லைச் செழியன், முல்லைத்தீவு.
* எம்.ஏ.சுபைதீன், இரத்மலானை.
* அ.அரசரெத்தினம், சேனையூர்-06.
* பே.கிறிஸ்ரி அன்ரனி, கொழும்பு-06.
* ஆ.ஃபெமிலா, நுவரெலிய.
* அமீரா ஏ.ஹசன், உடதலவின்ன.
* திருமதி புஸ்பலதா தவராஜா, செட்டிபாளையம்.
* சரோஜினி செல்வம், வத்துகாமம்.
* சோ.சங்கரலிங்கம், திருப்பழுகாமம்.
* எச்.அனுபா, அக்கரைப்பற்று.
* எஸ்.சரவணேஸ் டெய்சி, பத்மா டெய்சி, கலவானை.
* கு.உமாகாந், யாழ்ப்பாணம்.
* கே.புவனலோஜினி, இறக்குவானை
* சுகுணா முத்துக்கிருஷ்ணா, பம்பலப்பிட்டி.
* செல்வி எஸ்.யுவராணி, பிட்டகந்தை.
* ஜெ.ஜெகதீஸ்வரி, திருமலை.
* ஏ.எல்.மஹறியா, ஏறாவூர்-01.
* கல்லடி மூர்த்தி, மட்டக்களப்பு.
* இ.ஐங்கரன், மண்டூர்.
* கே.ஏ.பாரிஸ், புல்மோட்டை-03.
* ஆ.ஜெகசோதி, கனடா.
* எஸ்.திருச்செல்வம், சென்றல் கேம்ப்.
* ஜி.கிஷோகுமார், இறக்குவானை.
* கே.சுப்பிரமணியம், மடுள்கல.
* க.தர்ஷன், பெரிய நீலாவணை-1
* ஆர்.துஷ்யந்தினி, கந்தப்பளை.
* தி.வேந்தன், கொழும்பு-05.
* ஏ.சிவக்குமார், ஜெர்மன்.



படிப்பகம்

www.padippakam.com

# காட்டுக்குள் இழுத்துத் தாக்கத் திட்டம்!

## எல்லைக் கிராமங்களுக்கு ஷெல் அடி அபாயம்!

வன்னியில் நடவடிக்கையில் ஈடுபடும் படையினரை காட்டுப்பகுதிக்குள் இழுத்து தாக்குவதற்குப் புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

அதேவேளை, படையினர் வன்னியில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது கடற்பகுதியிலும், கிழக்கிலும் தமது தாக்குதலைப் புலிகள் தீவிரப்படுத்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வன்னியில் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டால் கிழக்கில் உள்ள புலிகள் வன்னி நோக்கிச் செல்லுவர் என்று படையினர் எதிர்பார்த்தனர்.

அதனால் கடற்பகுதியில் கடற்படை வலை விரித்துக் காத்திருந்தது. ஆயினும் புலி களின் கிழக்கு மாகாண அணிகள் வடக்கே செல்லவில்லை.

வன்னியை நோக்கிய படை நகர்வை புலிகள் முன்னரே எதிர்பார்த்தனர். அதனால் வன்னியை நோக்கிய படை நடவடிக்கை மேற்கொள்ளப்படும்போது கிழக்கில் உள்ள அணிகள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை முன்கூட்டியே புலிகள் திட்டமிட்டு விட்டதாகத் தெரிகிறது.

அதன் ஒரு கட்டமாகவே பொலனறுவையில் பாரிய தாக்குதல் ஒன்றை கிழக்கு மாகாண அணிகள் நடத்தியுள்ளன.

வன்னியில் படை நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டாலும் கிழக்கில் உள்ள அணிகள் வடக்கே செல்லாது என்று அங்குள்ள புலிகள் வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

"வன்னியில் என்ன நடந்தாலும் சரி நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். கிழக்கில் தாக்குதல்களைத் தொடரவேண்டியது உங்கள் வேலை!" என்று பிரபாகரன் கட்டளையிட்டு அனுப்பியதாக கிழக்கில் உள்ள புலிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### ஷெல்லுக்கு ஷெல

வவுனியாவில் உள்ள படை முகாம்கள் தொடர்ந்தும் புலிகளின் ஷெல் விச்சுகளுக்கு உள்ளாகக்கூடும் என்று நம்பப்படுகிறது.

அதேவேளை, எல்லைப்புறக் கிராமங்களை நோக்கியும் புலிகள் ஷெல் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதலில் ஈடுபடும்போது புலிகள் பதிலடியாக எல்லைப்புறக்கிராமங்களை நோக்கி ஷெல்லடிக்கலாம் என்று அங்குள்ள மக்கள் பீதியடைந்துள்ளனர். புலிகளிடம் வன்னியில் உள்ள 120 எம்.எம். ரக ஆட்டிலெறிகள் மூலமாக 20 கிலோ மீட்டர் தூரம்வரை ஷெல் அடிக்க முடியும்.

வன்னியில் மக்களின் குடியிருப்புக்கள் ஷெல் வீச்சுக்களாலும், விமானத் தாக்குதல்களாலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிவருவதாக புலிகளின் சர்வதேச செயலகம் குற்றம் சாட்டியுள்ளது. அதனை பொய்யான குற்றச்சாட்டு என்று அரசாங்கம் மறுத்துள்ளது.

இதேவேளை, மடு அகதி முகாம் இடம்பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகிறது. வன்னியில் போதியளவு உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை நிலவிக்கொண்டிருந்தது.

தற்போதைய நிலை காரணமாக மேலும் நெருக்கடிகளுக்குள் வன்னியில் உள்ள மக்கள் சிக்கிக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, காட்டுப்பகுதிக்குள் படையினர் பிரவேசித்த பின்னர் பாரிய பதிலடி நடவடிக்கை ஒன்றில் புலிகள் ஈடுபடலாம் என்று கருதப்படுகிறது.

படையினரின் தரை நகர்வுக்கு புலிகள் பாரிய எதிர்ப்புக் காட்டாமையால் படைத்தரப்பினரும் உஷாராகியுள்ளனர்.

## மோதலின் பின்னணியில் தீய சக்திகள்?

### தமிழ் – முஸ்லிம் பிரமுகர்கள் கண்டனம்!

மட்டக்களப்பு-வாழைச்சேனையில் நோன்புப் பெருநாள் அன்று ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் பலியானார். புலிகளே அவரைச் சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்பட்டது. எனினும் புலிகள் இது வரை உரிமை கோரவில்லை.

எனினும், படைகளில் உள்ளவர்கள் மீதான தாக்குதலின்போது இன, மத வேறுபாடு பார்க்க முடியாது. அத் தாக்குதல்களை இன, மத உணர்வுகளோடு நோக்கக் கூடாது என்று புலிகள் முன்னர் பிரசுரம் வெளியிட்டிருந்தனர்.

மருதமுனையில் முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட பதட்ட நிலை தொடர்பாகவே புலிகள் அவ்வாறு தெரிவித்திருந்தனர்.

நோன்புப் பெருநாள் அன்று ஊர்காவல் படையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் பல்வேறு சந்தேகங்களைக் கிளப்பிவிட்டுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர், முஸ்லிம் மக்கள் புலிகளுக்கு ஆதரவு வழங்கக் கூடாது, என்று அநாமதேயத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் மக்களின் ஆதரவைக் கோரி புலிகள் வெளியிட்ட பிரசுரங்களுக்குப் போட்டியாகவே அப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அப்பிரசுரங்கள் எழுதப்பட்ட முறைகளில் இருந்து அவை முஸ்லிம் மக்களால் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை என்று சந்தேகம் நிலவியது.

முஸ்லிம் மக்கள் புலிகளுக்கு ஆதரவு வழங்கிவிடக்கூடாது என்று கருதும் சக்திகள் தான் மோதல்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்களா? என்று சந்தேகம் வளர்ந்து வருகிறது.

"தமிழ்-முஸ்லிம் மக்கள் புலிகளை ஆதரிக்கக் கூடாது என்று பிரசாரம் செய்வது பிழையல்ல. ஆனால் புலிகளைச் சாட்டாக வைத்து தமிழ்-முஸ்லிம் மக்களை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதுதான் கண்டிக்கப்படத்தக்கது. கிழக்கில் இரு சமூகங்களின் ஒற்றுமை தான் பலம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது" என்று கிழக்கில் உள்ள தமிழ்-முஸ்லிம் பிரமுகர்கள் பலர் ஒரேவிதமான அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

முஸ்லிம்களின் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதும் மோசமான விஷமச் செயல். அப்பாவி மக்கள்மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் கண்டிக்கப்படத்தக்கவை என்று தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகள் தனித்தனியாக கண்டனம் தெவித்துள்ளன.

"புலிகள் தமிழ் பொலிசாரையும்தான் சுடுகிறார்கள். அப்படியானால் தமிழர்கள் யாரைப்போய்த் தாக்குவது? திட்டமிட்டுக் கலவரத்துக்கு தூபம் போடும் சக்திகளிடம் இரு சமூக மக்களும் விழிப்பாக இருக்க வேண்டும்" என்று தமிழ் அரசியல் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

## மாட்டிக்கொண்ட அந்நியக் கப்பல்

### தாக்கப்பட்ட மீனவர் படகு!

(அலுவலக நிருபர்)

முல்லைத்தீவுக் கடலில் வைத்து கடற்படையினரால் பிடிக்கப்பட்ட கப்பல் தொடர்பான செய்திகள் தவறானவை என்று அறியப்பட்டுள்ளது. அக் கப்பலை புலிகளின் ஆயுதக் கப்பல் என்று முக்கியத்துவம் கொடுத்து வெளியான செய்திகள் ஆதாரம் அற்றவையாகக் காணப்பட்டன.

முதலில் இலங்கை வானொலி மற்றும் அரச செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட செய்திகளின்படி குறிப்பிட்ட கப்பல் இலங்கை கடற்பகுதிக்குள் உள்நோக்கி சென்றபோதே கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் கண்களில் பட்டுவிட்டது.

அப்படியானால் ஆயுதங்களை இறக்கியிருக்க சந்தர்ப்பம் இல்லை. எனவே ஆயுதக் கப்பல் என்றால் கப்பலுக்குள் ஆயுதங்கள் இருந்திருக்கவேண்டும். ஆனால் கப்பலில் ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை.

அதுதவிர புலிகளின் ஆயுதக் கப்பல் வரக்கூடிய நேரமும் இதுவல்ல. 'எடிபல' இராணுவ நடவடிக்கையை முன்னிட்டு வடபகுதிக் கடற்பகுதியில் கடற்படை ரோந்து தீவிரமாக்கப்பட்டுள்ளது. விமானப்படை கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கிழக்கில் இருந்து புலிகளின் அணிகள் வன்னிக்குச் சென்று ஒன்று குவிவதைத் தடுக்கவே கடும் கடற் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

அவ்வாறான நிலையில் கடற்படையினர் மற்றும் விமானப்படையினரின் கண்களில் படாமல் கப்பலைக் கொண்டுவரலாம் என்று புலிகள் நினைத்திருப்பர் என்று படையினர் கருதியதுதான் வியப்பாக இருக்கிறது.

கடற்படையினர் கண்காணிப்பு இருந்தாலும் புலிகள் படகில் போக்குவரத்து நடத்தலாம். எனெனில், படகில் படுவேகமாக ஒடித் தப்பிவிடலாம். ஆனால் கப்பல் போக்குவரத்து நடத்த முடியாது.

கப்பலை நெருங்கிச் சென்ற புலகளின் விசைப்படகை விமானப்படையினர் தாக்கி அழித்தனர் என்றும் செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் அவ்வாறு தாக்கப்பட்டது புலிகளின் படகல்ல என்பது தெரியவந்துள்ளது. திருக்கோணமலையைச் சேர்ந்த சிங்கள மீனவர் ஒருவருக்குச் சொந்தமான மீன்பிடிப் படகு (றோலர்) ஒன்றே தாக்கப்பட்டுள்ளது.

ஆழ் கடல் சென்று மீன்பிடிக்கும் அந்த இயந்திரப் படகில் ஐந்து மீனவர்கள் இருந்தனர். அதில் மூன்றுபேர் சிங்கள மீனவர்கள்; இருவர் தமிழ் மீனவர்கள்.

தாக்குதல் காரணமாக இரண்டு சிங்கள மீனவரும், ஒரு தமிழ் மீனவரும் கடலில் பலியாகினர். இரண்டு மீனவர்கள் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்.

எனவே புலிகளின் ஆயுதக் கப்பல் தொடர்பான செய்திகள் புஸ்வாணமாகியுள்ளன. தற்போதைக்கு புலிகளின் ஆயுதக் கப்பல் இலங்கை கடற்பகுதிக்குள் வரப்போவதில்லை என்பதை முரசு முன்கூட்டியே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### எட்டுமாத வாடகை 30 கோடி

கொழும்பு-யாழ்ப்பாணம் விமான சேவைக்காக ஸ்ரீலங்கா விமானப்படையால் ஈடுபடுத்தப்பட்டுள்ள 'லயன் எயார்' விமானங்களுக்கு கடந்த வருடம் முதல் 8 மாதங்களில் வாடகையாக 30 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

உக்ரைனைச் சேர்ந்த விமானிகளால் செலுத்தப்படும் அன்ரனோவ்-26 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானங்களுக்கு ஒரு முறை கொழும்பில் இருந்து யாழ் சென்று திரும்ப ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (55 ஆயிரம் ரூபா) வழங்கப்படுகின்றது.

'லயன் எயார்' விமான சேவையில் 4 விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 8 மாதங்களில் இந்த விமானங்கள் 5 ஆயிரத்து 304 தடவைகள் யாழ் சென்று திரும்பியுள்ளன.

விடுதலைப்புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களால் வடபகுதியில் அடுத்தடுத்து விமானங்கள் அழிக்கப்பட்டதால், ஸ்ரீலங்கா விமானப்படையைச் சேர்ந்த விமானிகள் வடபகுதிக்கு விமானங்களைச் செலுத்த மறுத்து வந்துள்ளனர். இதன் காரணத்தினாலேயே இவ்வாறு கூலிக்கு விமானங்களை ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது எனத் தெரிய வருவதாக 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது.

## இலங்கையில் அமைதி முயற்சி!

### கனடாப் பிரதமருக்கு வேண்டுகோள்!

"இலங்கையில் அமைதியை ஏற்படுத்த கனடா அரசு ஆக்கபூர்வமான முயற்சியில் ஈடுபடவேண்டும்!" இவ்வாறு கோரும் மகஜர்கள் கனடா பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளன. கனடாவில் இயங்கிவரும் 'இலங்கையில் அமைதிக்கும், மனித உரிமைக்குமான செயலணி' இம் மகஜரை அனுப்பி வைக்க உள்ளது. மகஜரில் கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர்களின் கையொப்பங்களைப் பெறும் முயற்சியில் அந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது.

கனடா பிரதமருக்கு அனுப்பப்பட உள்ள மகஜரில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"மாண்புமிகு கனடா பிரதமர் அவர்களுக்கு,

இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து இலங்கையில் உருவான இன மோதல்களின் காரணமாக இந்நாட்டிலுள்ள பல்லின மக்களும் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

சகல இன மக்களும் பெரும்தொகையான உயிரிழப்புக்களைக் கண்டுள்ளனர். சொத்துக்கள் மற்றும் கலாசார சிதைவுகள், மத நிறுவனங்களின் அழிவுகளையும் சந்தித்துள்ளனர். தொடர்ந்து நடைபெறும் கொடிய வன்முறைகளால் இதுவரை 100,000த்துக்கும் அதிகமான அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டன.

மனித உரிமை மீறல்கள் மிக அதிகமாக இடம் பெற்றுள்ளன; நாகரிகமடைந்த எந்த சமுதாயமும் அச்சமடையத்தக்க அளவில் இடம் பெறும் இச்சம்பவங்கள் பல, மனித உரிமை அறிக்கைகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான அகதிகள் உள்நாட்டிலும் அந்நிய நாடுகளிலும் பல இன்னல்களை அனுபவித்துவருகின்றனர். தொடர்ந்து பல தசாப்தங்களாக நடைபெறும் இந்த யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் முழுமையாகச் சீர்குலைந்து போய்விட்டது.

ஆகவே மனிதாபிமானம் மற்றும் அமைதி ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் ஒருவரான தாங்கள், இலங்கைத் தீவில் நிலையான அமைதி கிட்டுவதற்குத் தங்கள் செல்வாக்கினைப் பிரயோகித்து ஆவன செய்யுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## உடப்பில் புலிகளின் மறைவிடம்

### பலியான பெண்புலியிடம் வாகன இலக்கங்கள்

உடப்புப் பிரதேசத்திலுள்ள முந்தல் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு பொலிசார் நடத்திய தேடுதலின்போது புலிகளின் மறைவிடமெனச் சந்தேகிக்கப்பட்ட ஒரு வீட்டிலிருந்து பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக அப்பிராந்தியப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அவையாவன:

தற்கொலைப் படையினர் அணியும் ஆடைகள்-4

ரி-56 ரக துப்பாக்கி- 1

றொக்கட் லோஞ்சர்-1

கைக்குண்டுகள்-பல

கைப்பற்றப்பட்ட பொருட்கள் தொலைக்காட்சியிலும் காண்பிக்கப்பட்டன. கொழும்புக்குள் உரிய நேரத்தில் கொண்டு வருவதற்காகவே உடப்பில் இப் பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதேவேளை, கொழும்பில் சோதனை அரணில் சயனைட் உட்கொண்டு மரணமான ஜெகதீஸ்வரி தொடர்பாக மேலும் பல தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்துள்ளன.

கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் அருகில் உள்ள தங்குவிடுதி ஒன்றில்தான் ஜெகதீஸ்வரி தங்கியிருந்தார். அவரிடம் இருந்து கைப்பற்றப்பட் ஆவணங்களில் இருந்தும் பல தகவல்கள் கிடைத்துள்ளன.

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சித் தலைவர்கள் சிலரது வாகன இலக்கங்கள் மற்றும் சில விபரங்களும் ஜெகதீஸ்வரியால் திரட்டப்பட்டிருந்தன. ஜெகதீஸ்வரி தற்கொலைப்போராளி என்று பொலிசார் தெரிவிக்கின்றனர். முப்பது வயதான ஜெகதீஸ்வரி புலிகளின் உளவுப் பிரிவில் நீண்டகால அனுபவம் உள்ள ஒருவர் என்று வேறு சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இழப்பில்லை என்று தெரிவிப்பு

வாழைச்சேனையில் 03.02.97 அன்று நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்திருந்த பொலிஸ் காவல் நிலைகள் மீது பேருந்தில் சென்ற புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். 10 நிமிடம் மட்டுமே நடைபெற்ற இந்த அதிர்ச்சித் தாக்குதலில் ஆறு பொலிசார் பலியாகினர். ஏனையோர் தப்பிச் சென்றனர். காவல் நிலைகளைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்த புலிகள் அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றனர். இத் தாக்குதலில் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை," என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தகவல் கொடுத்த புலி உறுப்பினர்!

### வீட்டுக் கிணற்றுக்குள் ஆயுதம்

யாழ்ப்பாணத்தில் புலிகள் இயக்கப் பெண் உறுப்பினர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டார்.

ராஜறெட்ணம் சாந்தினி என்னும் (வயது 33) புலிகள் இயக்கப் பெண் உறுப்பினரே கைது செய்யப்பட்டவராவார். அவரது ஆடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சயனைட் குப்பியும் கண்டுபிடிக்கப்பட்டது.

அவர் கொடுத்த தகவலை அடுத்து யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் உள்ள வீடொன்றில் இருந்து நான்கு கைக்குண்டுகள் எடுக்கப்பட்டன. கொட்டடியில் உள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் இருந்து பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்ட நிலையில் ரி.56 துப்பாக்கி ஒன்று, ரவைக்கூடுகள், தோட்டாக்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. அந்த வீட்டின் உரிமையாளரான தியாகராசா என்பவரும் கைது செய்யப்பட்டார். அவர் யாழ் மக்கள் வங்கியில் கடமை ஆற்றுபவர்.

முன்னர் இடம் பெயர்ந்து சென்றபோது தனது வீட்டின் கூரையில் புலிகள் ஆயுதங்களை மறைத்து வைத்தனர் என்றும், தான் திரும்பி வந்த பின்னர் அந்த ஆயுதங்களை எடுத்து கிணற்றில் போட்டுவிட்டதாகவும் தியாகராசா தெரிவித்துள்ளாராம். படையினரிடம் எடுத்துக் கொடுத்தால் புலிகளால் பிரச்சனை, வீட்டில் வைத்திருந்தாலும் படையினரிடம் மாட்டினால் ஆபத்து, அதனால்தான் கிணற்றில் தூக்கிப் போட்டாராம்.

## மரண விசாரணை இழுபறி

(காரைதீவு நிருபர்)

கல்முனையில் கரும்புலிகளென குற்றஞ் சாட்டப்பட்டு கொல்லப்பட்ட இரு தமிழ் இளைஞர்களின் மரணவிசாரணை கடந்த 5 மாதகாலமாக ஒத்திவைக்கப்பட்டு வருகிறது.

15.8.96ல் அமைச்சர்களான அஷ்ரப், பௌசி ஆகியோர் கல்முனைக்கு விஜயம் செய்தபோதே இவ்விளைஞர்கள் இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மரணவிசாரணை இப்படி இழுபட்டு வருவதால் "உண்மை" பிசுபிசுத்துப் போகலாமென பலர் கூறுகின்றனர். கண்ட சாட்சியும் பயத்தினால் நழுவிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை கல்முனை பாரதி வீதியில் எருவிலைச் சேர்ந்த இன்னுமொரு இளைஞர் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். அவரும் புலியென கூறப்பட்டுள்ளது. ரோந்து சென்ற பொலிஸார் மீது கிரனைட் வீச முற்பட்டபோதே சுட்டுக் கொன்றதாக பொலிஸ் தரப்பு கூறுகின்றது. ஆனால் மக்கள் சிலர் வேறுவிதமாகக் கூறுகின்றனர். யாரை நம்புவது?

சொறிக்கல்முனையைச் சேர்ந்த தமிழ் வாலிபர் ஒருவர் இதேவிதமாக புலியென்று கூறிக் கொல்லப்பட்டுள்ளார்.

## நேர்முகப் பரீட்சை ஆரம்பம்

(கண்டி நிருபர்)

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற தோட்டப்பாடசாலை ஆசிரியர் நியமன போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தகைமை பெற்ற பரீட்சார்த்திகளுக்கு இம் மாதம் 13ம் திகதி வியாழன் தொடக்கம், அந்தந்த மாகாண கல்விப் பணிமனைகளில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற இருக்கின்றன.

ஏற்கனவே முதலாம் கட்டத்தில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மேலதிகமாகவே இந் நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் இரண்டாயிரத்திற்கும் மேலாக இருப்பதாக தோட்டப் பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே 500 பேருக்கு மாத்திரமே இந் நியமனங்கள் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்பட்டன.

இதேவேளையில் கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் உள்ள 105 முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களையும், பரீட்சையில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் நிரப்ப உதவுமாறு பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் ஜனாப் றவூப் ஹக்கீமை கண்டி பிரதேச முஸ்லிம் இளைஞர்களும் யுவதிகளும் கேட்டுள்ளனர்.

## புத்தூரில் படைமீது தாக்குதல்

### பதிலடியில் பொதுமக்கள் காயம்!

யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்கில் 10.02.97 அன்று புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள்.

இதனையடுத்து புத்தூர் கிழக்கில் இராணுவ காவலரண் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த பொதுமக்கள் தாக்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிச் சூடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் மூன்று பெண்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்துள்ளனர். மற்றும் மூன்று பேரின் உடல்கள் யாழ் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இறந்துள்ளவர்களில் ஒருவருக்கு 15 வயது. புத்தூர் கிழக்கில் பாண் வியாபாரம் செய்து கொண்டிருந்தவர் என்று கூறப்படுகிறது.

ஈ.பி.டி.பி. யாழ் மாவட்ட பா.உ. பாஸ்கரன் மருத்துவமனைக்குச் சென்று காயமடைந்தவர்களைப் பார்வையிட்டார். படையினரால்தான் தாம் தாக்கப்பட்டதாக காயமடைந்தவர்கள் தெரிவித்தனர் என்று பாஸ்கரன் எம்.பி. தெரிவித்துள்ளார். தம்மைத் தாக்கிய இராணுவத்தினரை அடையாளம் காட்ட முடியும் என்று காயமடைந்த சிலர் தெரிவித்துள்ளனராம்.

இச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பி. யினர் யாழ்ப்பாணத்தில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

## புலிகளின் பொறுப்பாளர் பலி

(காரைதீவு நிருபர்)

புலிகள் இயக்க கல்முனைப் பிரதேச இராணுவப் பொறுப்பாளர் பாபு பலியாகியுள்ளார். விசேஷ அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலின்போதே அவர் பலியாகியுள்ளார்.

ரோந்து சென்ற அதிரடிப்படையினரை எதிர்பாராத விதமாக சந்திக்க நேர்ந்தபோதே அவர் பலியானதாகத் தெரிகிறது. அவரிடம் இருந்து இரண்டு சயனைட் குப்பிகள், ஒரு பிஸ்டல் என்பன படையினரால் கைப்பற்றப்பட்டன. இச் சம்பவம் 9.02.97 அன்று பாண்டிருப்பில் நடைபெற்றது.

11.02.97 அன்று கல்முனை சுழியோடைப் பாலம் அருகே உள்ள கடையொன்றில் புலிகளின் பார்சல் குண்டு ஒன்று வெடித்தது. சுழியோடைப் பாலம் அருகே காவல் பணியில் ஈடுபட்டுள்ள பொலிசார் வழக்கமாக அக் கடைக்குள்தான் இருப்பார்களாம். ஆனால் குரங்கு ஒன்றைக் கண்ட பொலிஸ்காரர்கள் கடைக்கு வெளியே சென்று அதனுடன் வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தனராம். அப்போதுதான் கடைக்குள் பார்சல் குண்டு வெடித்துள்ளது. அதனால்தான் பொலிசார் உயிர்தப்பியதாகக் கூறப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கில் மாவடிவேம்பு முகாம் தாக்குதல்!

## 15 புலிகள் பலியானதாக தெரிவிப்பு!

மட்டக்களப்பு-மாவடிவேம்பு இராணுவமுகாம் 02-02-97ல் தாக்குதலுக்குள்ளானபோது, பதின்மூன்று இராணுவத்தினர் பலியாகினர்; பன்னிரண்டு பேர் காயமடைந்தனர் என்று படைத்தரப்பினர் தெரிவித்திருந்தனர். தாக்குதலின் போது காணாமல்போன ஆறு படையினரின் சடலங்கள் பின்னர் கண்டெடுக்கப்பட்டதாக செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மாவடிவேம்பு இராணுவ முகாமில் 50 முதல் 75 பேர்வரையான படையினரே நிலைகொண்டிருந்தனர். முகாம்மீது புலிகள் தாக்குதல் நடத்தியபோது, கொம்மாதுறை இராணுவ முகாம், சித்தாண்டி இராணுவ முகாம் ஆகியவற்றின்மீதும் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

மாவடிவேம்பு இராணுவத்தினருக்கு உதவிக்காகப் புறப்பட்ட இராணுவத்தினரை புலிகளின் அணியொன்று தடுத்து நிறுத்தி, தாக்கியது. மண்மூட்டைகளை அடுக்கி வைத்து அவற்றின் மறைவில் இருந்து புலிகள் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தனர்.

மாவடிவேம்பு முகாமில் இருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு புலிகள் திரும்பிச் சென்றனர். உழவு இயந்திரம் ஒன்றும் புலிகளால் எடுத்துச்செல்லப்பட்டது. பின்னர் அந்த உழவு இயந்திரத்தை சேதமாக்கி விட்டு கைவிட்டுச் சென்றுள்ளனர்.

உதவிக்கு விரைந்த படையினரை தடுப்பதற்காக புலிகள் கடுமையாகப் போரிட வேண்டி இருந்தது.

மாவடிவேம்பு தாக்குதல் தொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"மாவடிவேம்பு முகாம்மீதான 30 நிமிடத் தாக்குதலில் புலிகள், முகாமை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவ வாகனங்கள், கட்டிடங்கள் என்பவை புலிகளால் தாக்கியழிக்கப்பட்டன.

மாவடிவேம்பு முகாம்மீதான தாக்குதலில் 15 புலிகள் பலியாகியுள்ளனர். மேஜர் கருணாநிதி, லெப்டினன்ட் குமரேசன், லெப்டினன்ட் சிவநேசகுமார், லெப்டினன்ட் சாந்தரூபன், லெப்டினன்ட் கிருபா, 2ம் லெப்டினன்ட் கண்ணாளன், 2ம் லெப்டினன்ட் மலர்முடியன், 2ம் லெப்டினன்ட் சிவானந்தன், 2ம் லெப்டினன்ட் நாகராசா, மற்றும் சிவபாதம், குருதி, குமாரவேல், செம்பருத்தி, லோகேஸ்வரன், ரவிவர்மன் ஆகியோரே பலியானவர்கள் ஆவர்."

மாவடிவேம்பு முகாமில் இருந்த ஆயுதங்களும் தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

முரசுக்குக் கிடைத்த தகவலின்படி ஸ்தலத்தில் எட்டுப் புலிகள் பலியானார்கள். சமரில் காயமடைந்த புலிகளில் ஏழுபேர் பின்னர் மரணமாயினர்.

# அஞ்சல் அதிபர் நேர்முகத் தேர்வு

## வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(திருமலை நிருபர்)

முதல் தடவையாக அஞ்சல் அதிபர் நாயகத்தின் விசேட பணிப்பின்பேரில் திருக்கோணமலை மாவட்ட அஞ்சல் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வு ஜனவரி 24, 25ந் திகதிகளில் இடம்பெற்றுள்ளது.

திருக்கோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சர் அலுவலகத்தில் பிரதி அஞ்சல் மா அதிபதி (கிழக்கு) தலைமையில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வுக்கு 117 விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றபோதும், உயர் தகைமை அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களிலிருந்து இருபது பேரளவில் தேர்ந்தெடுக்கப்படவுள்ளதாகவும், அனுமதி கிடைத்ததும் ஒரு மாத காலத்துக்குள் நியமனங்கள் வழங்கப்படக்கூடியதாக இருக்கும் எனவும் திணைக்கள உயரதிகாரியொருவர் "முரசு"க்குத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அகில இலங்கை ரீதியிலான போட்டிப்பரீட்சைகள் மூலமே அஞ்சல் அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டு நாட்டின் பல பாகங்களுக்கும்-தேவைக்கேற்ப அனுப்பப்பட்டு வந்தனர். எனினும் வடக்கு கிழக்கு யுத்த நிலைமை காரணமாக வெளிமாகாணத்தவர்கள் வருவதற்குத் தயங்கியமையால் பல ஆளணிகள் நிரப்பப்படாமலேயே நீண்டகாலம் இருந்து வந்தன.

இக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் மாவட்ட ரீதியிலான நியமனங்களை மேற்கொள்ள அஞ்சல் திணைக்களம் எடுத்த முடிவுக்கமையவே நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படவிருக்கும் அஞ்சல் அதிபர்கள் மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் பெறும் உரிமை அற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் திரண்ட மக்கள் வெள்ளம்



தமிழ்நாட்டில் 01-02-97 அன்று சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சியினரால் 'ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணி' நடத்தப்பட்டது. அப்பேரணியில் கலந்து கொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களில் ஒரு பகுதியினரே படத்தில் காணப்படுகின்றனர்.

# மேய்க்கும் அதிகாரிகள்!

(காரைதீவு நிருபர்)

கல்முனை வலயத்தில் நடந்த 1996 இறுதியாண்டு வகுப்பேற்றப் பரீட்சை மீது பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. கல்முனை பிரதேச சபையினரும் இதற்குப் பலத்த ஆட்சேபத்தை தெரிவித்துள்ளனர்.

நடந்த பரீட்சையில் ஏகப்பட்ட கருத்து, சொல், எழுத்துப் பிழைகள் உட்பட நடைமுறைப்பிழைகள் விடப்பட்டது உண்மைதான். இதனை கல்வி அதிகாரிகளும் பூரணமாக ஒத்துக்கொள்கிறார்கள்.

ஆனால் அவை அச்சடிக்கப்பட்ட அச்சகம் பற்றிய பிரச்சனைதான் பெரிதாகத் தூக்கிப் பிடிக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள கல்வியதிகாரியின் உறவினரின் அச்சகத்தில் அச்சடித்ததாக ஒரு செய்தி; அது "பொய்" என அவர் மறுத்திருக்கிறார். அதுவும் உண்மைதான்.

மொத்தத்தில் பரீட்சையில் ஏகப்பட்ட குறைபாடுகள் இருந்ததை சகலரும் உணர்ந்துள்ளனர். இனிமேலாவது ஒழுங்காக நடத்த முன்வரவேண்டும். இது பெற்றோர்களினது கோரிக்கை.

இதேவேளை 'மேலதிகாரிகளை மேய்த்துவரும் கீழ் அதிகாரிகள்' பற்றி உபதவிசாளர் ஜவாத் வன்மையான கண்டனத்தை பிரதேச சபையில் தெரிவித்துள்ளார்.


1997 ம் ஆண்டுக்கான
பல நவீன நுட்பங்களுடன்
பெப்ரிக், பொட்ரி
பெயின்டிங் பாடநெறி

Pearl.
Art Painting & Fashion Studios

* மலிவான விலையில் சிறந்த போதனா ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
* பாடநெறி முடிவில் உயர் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் பாடம் சம்பந்தப்பட்ட பொருட்கள் இலவசம்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
ஹஸ்மத் ஹம்தூன்
(பேர்ல் பெய்ன்டிங் ஆலோசகர்)
"பேர்ல்"
ஆர்ட் பெய்ன்டிங் அன்ட் ஃபெசன்ஸ் ஸ்டடீஸ்
தொழில் நுட்ப வீதி, வரகாபொலை.
(வாரத்தில் எல்லா நாட்களிலும் மு.ப.9 முதல் பி.ப.5 மணி வரையில்)
078-66317



சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களில் சந்திக்கவும்.

பெப்ரவரி 16 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10. RECLAMATION ROAD. (ENTRANCE BANKSHALL ST.. Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390. கொழும்பு நாட்களில் மட்டும் செல்டல் No. 078-71101 மார்ச் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும். மார்ச் 8, 9, 10 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No: 33. TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD. BATTICALOAவிலும் சந்திக்கலாம்.



ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)





இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398



ரிவி, வீடியோ மற்றும் ஓடியோ உபகரணங்கள்,
ஸ்டில் கமெரா பழுதுபார்க்க
கொழும்பு-05 பொல்ஹென்கொடவில்
நம்பிக்கையான ஒரே இடம்
நியாயமான கட்டணத்தில்
66,விஜயகுமாரணதுங்க மாவத்தை, கொழும்பு-05
66, Vijayakumaranatunge Mawatha, Colombo-05.



COMPUTER வகுப்புக்கள்
தனித்தனியாக கற்பிக்கப்படும்.
INDIVIDUAL CLASSES
O/L,A/L மாணவ மாணவியர்களுக்கும்,
பட்டதாரி மாணவர்களுக்கும், சிறுவர்களுக்கும்,
ஏனையவர்களுக்கும் அவரவர்க்கு ஏற்றபடி கற்பிக்கப்படும்.
CONTACT: ICS COMPUTER CENTRE
32/1, GALLE ROAD, DEHIWALA.



UNION
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night
Latch & Sliding Locks,
(English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411



விளம்பரப் பகுதி



காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில்
அமைந்த காண்டம் எனும்
நாடி ஜோதிடத்தில்
உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும்
தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06
T.P: 586218, 078-63611
Fax: 503030



ஹரே கிருஷ்ணாவின்
8வது தல யாத்திரைகள்

தென் இந்திய
தல யாத்திரை : 14 நாட்கள்
புறப்படும் திகதிகள் : (20.02.97) - (10.03.97)
இச் சுற்றுலாவில் விஷ்ணு, சிவன், விநாயகர், முருகன் (ஆறுபடை வீடுகள்), சனீஸ்வரர் போன்ற 40 இற்கு மேற்பட்ட தலங்கள் அடங்கியுள்ளன.
கட்டணம் - 19,500 ரூபா மட்டுமே

வட இந்திய
தல யாத்திரை : 22 நாட்கள்
புறப்படும் திகதிகள் : (25.02.97) - (15.03.97)
மும்பாய், துவாரகை, டெல்லி, காசி, அகமதபாத், மதுரா, தாஜ்மஹால் உட்பட 20 க்கு மேற்பட்ட தலங்கள்.
கட்டணம் - 39,500 ரூபா மட்டுமே

வீசா உட்பட கொழும்பு - சென்னைக்கான விமான டிக்கட் மற்றும் தங்குமிட, புகையிரத சொகுசு பஸ் கட்டணங்கள் யாவும் இக்கட்டணத்தில் அடங்கும்.
ஆலயத் தலைவர்
சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் (ISKCON)
188, புதுச் செட்டித் தெரு, கொழும்பு -13.
தொலைபேசி - 433325




படிப்பகம்

www.padippakam.com

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப் பட்டபோதே, பாரிய இராணுவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதை 'முரசு' சொல்லியிருந்தது.

வடபகுதியில் தரைப்பாதை திறப்பதற்கான நடவடிக்கை என்று தனது புதிய நடவடிக்கைக்கு அரசாங்கம் விளக்கம் சொல்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தரைப்பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கைதான் 'எடிபல' என்பது வெளிப்படையான விஷயம்.

**அதனால் 'ஒப்பரேஷன் எடிபல'வுக்கு 'ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்' என்பதுதான் பொருத்தமான பெயராக இருக்கும்.**

உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை இரண்டு துருப்புச் சீட்டுக்களை இறக்கியுள்ளது ஆளும்தரப்பு.

பாயத்தை மாற்றிக் கொள்ளக்கூடும் என்பது சரியான கணிப்பல்ல.

ஏனெனில் நிலப்பரப்புக்களை பிடித்து வைத்திருப்பதைத்தான் போர்க்களத்தில் தாம் பெற்றுள்ள வெற்றிகளின் ஆதாரமாக அரசாங்கம் காட்டிக் கொண்டிருக்கிறது.

புலிகளின் தாக்குதல்கள் காரணமாக படைகளை அரசாங்கம் விலக்கிக் கொள்ளுமானால் அது தோல்வியாகக் கருதப்படும்.

இராணுவரீதியிலும் வடக்கில் உள்ள பிரதான தளங்களைப் பாதுகாக்க வேண்டுமானால் அவற்றை சுற்றிய இராணுவ வேலிகளாக குறிப்பிட்ட நிலப்பரப்பில் நிலை கொண்டாக வேண்டும்.

ஆனையிறவு பிரதான தளத்தை பாதுகாக்கும் தற்காப்பு தந்திரத்தோடுதான் கிளிநொச்சிவரை படையினர் நீண்டு நிலைகொண்டுள்ளனர்.

உதாரணமாக, கிழக்கில் ஒரு பாரிய தாக்குதலை நடத்த வேண்டுமானால் வடக்கில் இருந்து குறிப்பிட்டளவான படையணிகளை அங்கு அனுப்பிவைக்க வேண்டும்.

புலிகளின் பிரதான தளம் வன்னி. தமது பிரதான தளத்தை நோக்கி படைகள் முன்னேறும்போது புலிகளின் பிரதான அணிகளின் முதல் கடமை தளப்பாதுகாப்பாகத்தான் இருக்கும்.

அது மட்டுமல்லாமல் ஏனைய பகுதிகளில் உள்ள புலிகளின் அணிகளையும் தளப்பாதுகாப்பு யுத்தத்துக்காக புலிகளின் தலைமை வன்னிக்கு அழைக்க வேண்டியிருக்கும்.

**ஆக, பாரிய தாக்குதலுக்கு புலிகள் தயாராக முடியாமல், தமது தளத்தை பாதுகாக்கும் தற்காப்பு யுத்தக் கட்டுக்குள் புலிகளை வைத்திருக்கத்தான் 'எடிபல' தொடங்கப் பட்டது.**

வேண்டும் என்ற சாதாரண சிங்கள மக்களின் மனோபாவம் போன்றவை அரசாங்கத்தின் முரண்பாடான போக்குகளை மக்களிடம் இருந்து மறைத்துவிடக் கூடும்.

எனவே-உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் தரப்பு வெற்றி பெற, இன்றைய அரசியல், இராணுவ உத்திகள் உதவக்கூடும்.

நீண்டகால அடிப்படையிலான திட்டங்களைவிட உடனடியாக பயன்தரும் தந்திரங்களுக்குத்தான் இன்றைய அரசியலில் மரியாதை. எனவே உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள 'எடிபல' ஆளும் தரப்புக்கு தேர்தல் பிரசாரத்தில் விற்றுவிடும் டொனிக் மாதிரித்தான். உடனடி உற்சாகத்திற்கு நூறுசதவீத உத்தரவாதம்.

ஆனால் நீண்டகால உத்தரவாதம் உண்டா இல்லையா? வன்னிப் போர் முனையைப் பொறுத்தவரை தரைப்பாதையை திறந்து

போன்ற பகுதிகளில் நிலை கொண்டுள்ளன.

பெரிய தம்பனையை அடுத்துள்ள பகுதி பெரிய பண்டிவிரிச்சான். அங்குதான் புலிகளின் பாரிய முகாம்கள் இருக்கின்றன. அது தவிர அடர்ந்த காட்டுப்பகுதியும் அங்குதான் ஆரம்பமாகிறது.

**எனவே பெரிய பண்டிவிரிச்சான் பகுதியை படைகள் நெருங்குமானால் புலிகளின் பொறிக்குள் சிக்கும் ஆபத்து இருக்கிறது.**

**அதன்பின்னர் காடும், காடு சார்ந்த பகுதிகளுக்குள்ளும் போரைத் தொடர வேண்டியிருக்கும். அந்த காடுகளும், பூகோள சூழலும் புலிகளுக்கு அத்துப்படியானவை. படைகளுக்கோ புதிரானவை.**

எனவே அங்கு புலிகளின் காட்டுப்புற கெரில்லா தாக்குதல்களுக்கு படையினர் முகம் கொடுப்பது எளிதல்ல.

நா ர த ர்

# ஒப்பரேஷன் எலக்ஷன் றூட்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

ஒன்று: விஜயகுமாரதுங்க கொலை தொடர்பான ஜனாதிபதி கமிஷன் அறிக்கை. உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி கமிஷன் அறிக்கை வெளிவரக் கூடியதாக செய்யப்பட்டது நல்லதொரு பிரசார தந்திரம்.

இரண்டாவது: வடக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை.

உள்ளூராட்சித் தேர்தல் பிரசார மேடைகளில் சுட்டிக்காட்டிப் பேசக்கூடியளவுக்கு தேர்தல் காலகட்டம் முழுக்க போர்க்களத்தில் சண்டைக் காட்சிகள் அரங்கேறிக்கொண்டிருக்கும். புலிகளின் கட்டுப்பாட்டில் மீதியாக உள்ள சொற்ப பகுதிகளையும் விரைவில் மீட்டு விடுவோம் என்று ஜனாதிபதி தென்னிலங்கை வாக்காளர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

**உண்மையில் வடக்கு-கிழக்கில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைவிட புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளும், மக்கள் தொகையும் அளவிலும், எண்ணிக்கையிலும் அதிகமாக உள்ளது. யாழ் குடாநாட்டை படையினர் கைப்பற்றிய பின்னரும்கூட வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டில் பாரிய நிலப்பரப்பும், மக்களும் இருக்கின்றனர்.**

அது மட்டுமல்லாமல் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ் குடாநாடு உட்பட ஏனைய பகுதிகளிலும் புலிகள் நிலைகொண்டுள்ளனர்.

ஆனால், ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் புலிகளை அடித்துத் தள்ளி முடக்கி வைத்திருப்பது போலவும், அங்கிருந்தும் விரைவாக வெளியேற்றிவிடலாம் என்பதுபோலவும் தென்னிலங்கை மக்களுக்கு அரசாங்கம் சொல்லிக் கொண்டிருக்கிறது.

வன்னி யுத்தம் என்பது சுலபத்தில் முடியக்கூடிய ஒன்றல்ல.

உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் தொடங்கப்பட்ட நடவடிக்கையை அரசாங்கம் தொடர விரும்பினால் அடுத்த பொதுத் தேர்தல்வரைகூட நடத்திக் கொண்டிருக்கலாம்.

அந்தளவுக்கு வன்னி யுத்தம் நீண்டதாக இழுபட்டுச் செல்லக்கூடியது.

எனினும் யுத்தம்தான் தென்னிலங்கை அரசியலையும் தீர்மானிக்கும் பிரதான துருப்புச் சீட்டு என்றாகிய பின்னர் புதிய புதிய பெயர்களுடன் போர்க்களக் காட்சிகளை திரையிட்டுக் கொண்டிருப்பதைவிட வேறு வழியில்லை.

பரந்தனுக்குள் புலிகள் ஊடுருவி ஒரு தாக்குதலை நடத்தியபோது, அரசாங்கம் தனது போர் உத்திகளை மாற்றிக்கொள்ளப் போகிறது. நீண்ட நிலப்பரப்புக்களில் படையினர் நிலைகொள்ளும் தந்திரோபாயம் ஆபத்தானது என்று ஆங்கிலப் பத்திரிகைகள் சில விமர்சனங்களை வெளியிட்டன.

பரந்தன் தாக்குதல் என்பது நீண்ட நிலப்பரப்பில் நிலைகொள்ளும் படையினருக்கு புலிகள் விடுத்த அச்சுறுத்தல்தான்.

ஆனால் அதற்காக அரசாங்கமோ படைகளோ உடனடியாக தமது தந்திரோ

**'காடும் காடுசார்ந்த பகுதியிலும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் காட்டுக்கு புதிதான படையினருக்கு பொறிகளாக மாறக்கூடும். உள்ளே இழுத்து தாக்குவதுதான் காட்டுப்புற கெரில்லா போரின் பிரதான உத்தியாகும்'**

எனவே-அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் தெற்கில் அரசாங்கத்தின் 'இமேஜ்' பாதுகாக்கப்படவேண்டுமானால் வடக்கில் தற்போது கைப்பற்றி நிலைகொண்டுள்ள நிலப்பரப்புக்களில் படையினர் தக்கவைத்தாக வேண்டும்.

ஆனால் புலிகள் கெரில்லாப் போர்முறையில் பலமான நிலையில் இருப்பதால் எந்நேரமும் படையினர்மீது தாக்குதல் நடத்தப்படலாம்.

உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை தொடுப்பார்களேயானால் தெற்கில் தேர்தல் வெற்றியை பாதிக்கும்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல் போல படையினருக்கு பாரிய இழப்பு ஏற்படுமானால், தென்னிலங்கை போர்க்களத்தில் பாரிய அரசியல் பின்னடைவை ஆளும் தரப்புக்கு ஏற்படலாம்.

எனவே உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் புலிகளுக்கெதிராக பாரிய நடவடிக்கையொன்றை மேற்கொள்ளும் முடிவைத் தவிர வேறெந்த வழியும் அரசாங்கத்திடம் இருக்கவில்லை.

ஒப்பரேஷன் 'எடிபல' என்ற பெயரில் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கம் தற்பாதுகாப்புத்தான்.

அரசாங்கத்தின் தற்பாதுகாப்புத் தந்திரத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன.

ஒன்று: அரசியல் ரீதியான தற்பாதுகாப்பு.

இரண்டு; இராணுவரீதியான தற்காப்பு.

'எடிபல' நடவடிக்கையில் இரண்டு அம்சங்களும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கின்றன.

**உள்ளூராட்சி தேர்தல் நேரத்தில் புலிகள் ஒரு பாரிய தாக்குதல் நடத்துவார்களேயானால் நஷ்டம் இரண்டு.**

**ஒன்று: வடக்கில் புலிகளை வெற்றி பெற்று வருவதாக ஆளும்தரப்பு தன் முஸ்டியை உயர்த்தி வாக்காளர்களுக்கு முன் காட்டமுடியாமல் போகும்.**

**இரண்டு: படையினருக்கும் பாரிய இழப்பு ஏற்பட்டுவிடும். படையினர் நிலை கொண்டுள்ள நிலப்பரப்புக்களுக்குள்ளும் புலிகள் ஊடுருவி தாக்கி அழிக்கக்கூடும்.**

**எனவே தமது நஷ்டத்தை தடுக்க அரசியலும், இராணுவமும் கைகோர்த்து நின்று வகுத்துள்ள தற்பாதுகாப்பு வியூகம்தான் 'எடிபல'.**

பாரிய தாக்குதல்களை புலிகள் நடத்த வேண்டுமானால் பிரதான அணிகள் ஒன்று குவிக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தல் முடியும்வரை இத்தகைய தற்பாதுகாப்புத் தந்திர நடவடிக்கை தொடர்வதையே அரசாங்கம் விரும்புகிறது.

தரைப்பாதை திறப்பைவிட தற்பாது காப்புத் தந்திரம்தான் 'எடிபல' நடவடிக்கையின் பிரதான நோக்கம். அதனால்தான் 'எடிபல' நடவடிக்கையின் இலக்கென்ன, நோக்கம் என்ன என்பதை படைத்தரப்பு இதுவரை உறுதியாகத் தெரிவிக்கவில்லை.

தேர்தல் முடிந்த பின்னர் 'எடிபல' நடவடிக்கையில் ஈடுபட்ட படைகள் முகாம் திரும்பவும் கூடும். புலிகளின் தளத்துக்குள் ஊடுருவித் தாக்குவதற்கே சென்றோம். நோக்கம் நிறைவேறிவிட்டது என்று கூறினாலும் ஆச்சரியமில்லை.

இதேவேளை தற்பாதுகாப்புக்கான படை நகர்வை புலிகளுக்கு எதிரான பாரிய நடவடிக்கை என்று தெற்கில் பிரசாரம் செய்வதில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

**கிழக்கிலோ நாட்டின் ஏனைய பகுதிகளிலோ புலிகள் தாக்கினால்கூட 'எடிபல' நடவடிக்கை பற்றிய ஆரவாரமான பிரசாரங்கள் மத்தியில் அச்செய்திகள் அமுங்கிப் போய்விடும் என்பது அரசாங்கத்தின் கணிப்பு. அதில் ஓரளவு உண்மையும் உண்டு.**

ஆக, படைகள் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால்தான் தெற்கில் ஆளும்தரப்பு தேர்தல் பிரசாரத்தில் நிம்மதியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கலாம்.




உள்ளூராட்சித் தேர்தல் தெற்கில் நடைபெற்றாலும், தேர்தல் வெற்றிக்கான பிரதான பாதை வடக்கில்தான் திறக்கப் பட்டுள்ளது.

போர்க்களத்துக்கு செல்ல படையினரை கையசைத்து வழியனுப்பிவைத்துவிட்டுத்தான், தேர்தல் பிரசார களத்துக்கு ஜனாதிபதி சென்றாக வேண்டும். இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மட்டுமல்ல, அடுத்துவரும் பொதுத் தேர்தல்வரை இந்த நிலைதான் நீடிக்கக்கூடும். ஏனெனில் எதிர்க்கட்சியை சாட அதன் கடந்தகாலத் தவறுகளையும், தனது சாதனைகளாகச் சொல்ல போரையும்தான் அரசாங்கம் நம்பியிருக்கிறது.

ஒருகையில் விஜயகுமாரதுங்க கொலை தொடர்பான ஜனாதிபதி கமிஷன் அறிக்கையுடனும், மறுகையில் படை நடவடிக்கை ஆரம்பமான செய்தியுடனும் தேர்தல் களத்தில் இறங்கியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிக்கா.

டயர்களை வீதிகளில் போட்டுக் கொளுத்தி கடந்த கால அரசாங்கத்தின் நடவடிக்கைகளை மக்களுக்கு நினைவூட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது அரசாங்கம்.

கடந்த கால மனித உரிமை மீறல்களை தெற்கில் நினைவூட்டும் அதேவேளையில், வடக்கு-கிழக்கில் மனித உரிமை மீறல்களின் விளைநிலமாக மாறிவரும் போர்க்களம் பற்றி பீற்றிக் கொள்வதும் அரசாங்கம்தான்.

ஜனாதிபதியின் வசீகரம், பிரதான எதிர்க் கட்சியின் பலவீனம், புலிகளை அடிக்க

படையினர் நீண்டகாலம் நிலைகொள்வது அபாயகரமானவை.

அதனால் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் படையினர் திரும்பியாக வேண்டும். அல்லது புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி பலத்த இழப்புக்களை சந்தித்தாக வேண்டும்.

வன்னியில் 'ஒப்பரேஷன் எடிபல' நடவடிக்கைக்குப் பின்னர் நமக்கு கிடைத்த தகவல்களை பார்ப்போம்.

பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரதினம். ஆனால் வன்னி மக்களுக்கு மற்றொரு இடம் பெயர்வுக்கான ஆரம்ப தினமும் அன்றுதான்.

வவுனியாவில் இருந்து மூன்று முனைகளில் படைகள் முன்னேறின. செட்டிகுளத்திலிருந்து மதவாச்சி மன்னார் வீதிவழியாக ஒரு படைப்பிரிவு முன்னேறியது. பூவரசங்குளத்தில் இருந்து இரு முனைகள் ஊடாக படைகள் முன்னேறின. வவுனியா-மன்னார் வீதிவழியாக ஒரு படைப்பிரிவும், வடமேற்காக அமைந்துள்ள மடுவைநோக்கி இன்னொரு படைப்பிரிவும் முன்னேறின.

செட்டிகுளத்தில் இருந்து மதவாச்சி மன்னார் வீதியால் சென்ற படையணியும், பூவரசங்குளத்தில் இருந்து வவுனியா மன்னார் வீதிவழியாகச் சென்ற படைப்பிரிவும் பறையனாளங்குளம் என்னுமிடத்தில் சந்தித்தன.

பறையனாளங்குளம் வவுனியா மன்னர் வீதியில் அமைந்துள்ளது. அங்கிருந்து தொடர்ந்து படைகள் முன்னேறினால் மன்னார் வரை செல்ல முடியும். வவுனியாவில் இருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது மன்னார்.

வவுனியாவில் உள்ள படை முன்னரங்க நிலைகளில் இருந்து பறையனாளங்குளம்வரை இதுவரை படைகள் முன்னேறியுள்ள தூரம் கிட்டத்தட்ட 20 கிலோமீற்றர். (11.2.97வரை)

மடுவை நோக்கி பூவரசங்குளத்தில் இருந்து முன்னேறிய படையினர் 13 கிலோ மீற்றர் தூரம் முன்னேறிச் சென்றுள்ளனர்.

வவுனியா மன்னார் வீதிவழியாக மன்னார் நோக்கிச் செல்லும் படைப்பிரிவைவிட, மடுநோக்கி முன்னேறும் படைகள்தான் புலிகளின் வன்னித்தளப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்.

மடு நோக்கி முன்னேறிய படைகள் தற்போது பண்டிவிரிச்சான், பெரிய தம்பனை

அதனால்தான் மடுவை நோக்கி முன்னேறிய படைகளுக்கு பலத்த எதிர்ப்பைக் காட்டாமல் புலிகள் உள்ளுக்கு இழுக்கிறார்கள் என்ற தயக்கமும் படையினரிடம் எழுந்துள்ளது.

மொத்தம் 10 ஆயிரம் படையினர் 'எடிபல' நடவடிக்கையில் இறக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. 20 ஆயிரம் படையினர் இறக்கப்பட்டுள்ளதாகப் புலிகள் கூறியுள்ளனர்.

**எனினும் புலிகளின் காட்டுப்புற கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொள்ளவும், வன்னியில் தரைப்பாதை திறந்து படையினர் நிலைகொண்டிருக்கவும் படையினரின் எண்ணிக்கை போதுமானதல்ல.**

அதுதவிர புலிகளிடம் ஆட்டிலெறி பீரங்கிகள் இருக்கின்றன. அவைதவிர நீண்டதூர தாக்குதலுக்கு உதவும் கனரக மோட்டார்களும் இருக்கின்றன. அதனால் பெரும் நிலப்பரப்புக்களில் படையினர் தங்கியிருப்பது தொடர் இழப்புக்களை உருவாக்கும்.

காட்டுக்குள் உள்ள புலிகளை நோக்கி ஏவப்படும் ஷெல்கள் மரங்களில் பட்டு வெடித்துவிடும். அதுதவிர புலிகளின் முகாம்கள் எங்கிருக்கின்றன என்பதும் படையினருக்குத் தெரியாது. எனவே ஷெல் தாக்குதல்கள் நடத்துவது புலிகளுக்குத்தான் வசதி அதிகம்.

'எடிபல' நடவடிக்கை மூலமாக படையினர் இதுவரை முன்னேறியுள்ள பகுதிகளில் புலிகளின் சிறு காவலரண்கள் சில மட்டுமே இருந்தன. வழக்கமாக புலிகள் அப்பகுதிகளில் பெருமளவு இருப்பதில்லை. மேலும் சில பகுதிகள் படைகளும், புலிகளும் நடமாடாத பகுதிகள். 'நோ மேன் ஏரியா' என்றழைக்கப்படுபவை. இப்போது அந்தப் பகுதிகளை எல்லாம் உள்ளடக்கித்தான் இத்தனை கிலோ மீற்றர் முன்னேறிவிட்டோம். புலிகளின் பிரதான பகுதிகளுக்குள் ஊடுருவிவிட்டோம் என்று படைத்தரப்பினர் பிரசாரம் செய்கின்றனர்.


1991ம் ஆண்டிலும் 92ம் ஆண்டிலும் வன்னியில் பல்வேறு படை நடவடிக்கைகள் இலங்கைப் படையினரால் மேற்கொள்ளப் பட்டன.

மணலாற்று (வெலிஓயா) காட்டுக்குள் 'ஒப்பரேசன் மின்னல்', வவுனியாவில் இருந்து 'வன்னி விக்கிரம கட்டம் 1, கட்டம் 2,' மற்றும் 'ஒப்பரேசன் கஜபார' போன்ற பெயர்களில் இராணுவ நடவடிக்கைகள் வன்னியில் மேற்கொள்ளப்பட்டன.

92ல் 'ஒப்பரேசன் கஜபார' நடவடிக்கையின்போது படையினருக்கு பாரிய பின்னடைவு ஏற்பட்டது. 106 மில்லி மீட்டர் டாங்கி எதிர்ப்பு பீரங்கி உட்பட பல ஆயுதங்களை படையினர் புலிகளிடம் இழந்தனர்.

எனவே-வன்னிப் போர் முனையில் படையினர் எந்தளவு தூரம் காடுசார்ந்த பகுதிகளுக்குள் முன்னேறுகிறார்களோ அந்தளவுக்கு ஆபத்தும் உண்டு. எனவே முன்னேற்றம் என்பதை வெற்றியின் அறிகுறியாக கணிப்பிட முடியாது.

## அதிரடி அய்யாத்துரை



திருவானமலை சந்தை குத்தகை விவகாரத்தில் சபைத்தலைவர் தன்மானத்துடன் குத்துக்கரணம் அடிச்சப் போட்டார். குத்தகை எடுத்தவரை வசூல் செய்ய விடாமல் பச்சை உடைத் தரப்பார் குறுக்கே நிண்டவை. குறுக்கே நிண்டுபோட்டு குத்தகைக் காரர் வரி திரட்டவில்லை எண்டு குற்றம் சாட்டினவை. தன்மான சபைத் தலைவரும் அதுக்கு 'ஆமா' போட்டு கரணம் அடிச்சப்போட்டார். திருவானமலையை மீட்கப்போவதாகச் சொல்லித்தானே தேர்தலில் முழங்கினவர். மீட்க வேண்டாம், உள்ளதையும் தூக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கலாமோ?

தலைநகரில் தமிழ்க் கட்சி ஒண்டு போட்டியிடுகிறதாம். திருவானமலையில் உள்ள நகர சபையை ஒழுங்காக நடத்த முடியேல்லை; தலைநகர மாநகரசபையை நடத்திக் காட்டப் போகினமாம். கிடைத்ததை சரியாகச் செய்யாமல், கிடைக்காததுக்கு ஆசைப்பட்டு என்ன புண்ணியம்? எண்டாலும் தோல்வி உறுதி எண்டு தெரிஞ்சும் போட்டியிடுவது பாராட்டப்படவேண்டிய விஷயம்தான்!

"தமிழ்க்கட்சிகள் ஆயுதங்களை அரசிடம் திருப்பிக் கொடுக்க வேணும். அப்போதுதான் அரசுக்கும் புத்திவரும். அட்டகாசமான ஜனநாயகமும் கிட்டவரும்!" வடக்கு-கிழக்கின் முன்னாள் மாகாணசபைக் கட்சியினர்தான் அப்படி ஒரு போடு போட்டவை. அடிசக்கை! எண்டு நானும் பாராட்டிக் கொண்டிருந்தேன். திடீரென்று அதிர்ச்சியான ஒரு தகவல் கிடைச்சது. யாழ்ப்பாணத்தில் ஏ.கே.47 கேட்டு வாங்கி வைச்சிருக்கினமாம். முதலில் கேட்டபோது பச்சைத் தரப்பு மறுத்ததாம். விடாது முயன்றுதான் ஆயுதம் வாங்கினவையாம். தங்களுக்கு பழம் எட்டாமல் போனால் 'சீச்சீ' எண்டு சொல்லுறது. தங்களுக்கும் எட்டினால் ருசிபார்க்கிறது. தமிழ்க் கட்சிகளின் ஸ்ரைலே அதுதானுங்கோ.

தலைநகர மாநகரத்துக்கு லிங்கத்தார்தான் மீண்டும் பிதாவாகப் போகிறாராம். ஏறக்குறைய வெற்றி உறுதியானது மாதிரித்தானாம். தலைநகரில் நீல அணியில் பிரபலமான இரண்டு இஸ்லாமியத் தலைவர்களும் சுறுசுறுப்பாக களத்தில் இறங்குவது லிங்கத்தாருக்கு யானைப் பலம். யானையைவிட்டு விலகிவந்தாலும், யானைப் பலம் கொடுக்க இரண்டு நீல யானைகள் இருக்கிறார்கள். தெம்போடு காணப்படுகிறார் லிங்கத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு தமிழ்க் கட்சிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ளன. ரெண்டு எழுத்தார் சில தந்திரவித்தைகளை செய்யக்கூடும் எண்டு தமிழ்க் கட்சிகளின் சில பிரமுகர்கள் சொல்லுகினம். பருத்தித்துறையில் ஒரு வீட்டில் இளைஞர் கோஷ்டி ஒண்டு கொள்ளையடிச்சிருக்குதாம். பானை சட்டியில் இருந்த சோறு கறியையும் சுத்தமாக வழிச்சு அள்ளிக் கொண்டு போயிருக்கினமாம். "சத்தியமாக அந்தப் பகுதியில் நாங்கள் இல்லவே இல்லை" எண்டு யாழிலுள்ள தமிழ்க்கட்சிகள் சத்தியம் செய்யாத குறையாம். இனித்தான் சனம் குழம்பும் காரியங்கள் நிறைய நடக்கும் போலகிடக்கு.

இதுவரை காலமும் ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள்தான் வானத்தில் இருந்து 'பனங்காய்கள்' பொத்துப் பொத்தென்று விழுந்தன. இனிமேல் பச்சைத் தரப்பாரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள்ளும் 'பனங்காய்கள்' விழும்போலக் கிடக்கு. வவுனியாவில் இருந்து ஒரு நண்பர் தொலைபேசியில் கதைச்சவர். "நிலவரம் எப்படிப் பாரும் இருக்குது?" எண்டு கேட்டனான். மனுசன் சொன்ன பதில் இதுதான்: "இனிமேல் நாங்கள் ஹெல்மேட் போட்டுக் கொண்டுதான் நடமாட வேணும்!"

தலைநகரில் முகவரி தேடி புது இடங்களுக்குச் செல்லுவோர் முதுகில் டின் கட்டிக்கொண்டு செல்வது உத்தமம். ஏன் தெரியுமோ? தரும அடி கிடைப்பது நூறுவீத உத்தரவாதம். போனகிழமை ஒரு வாலிபர் வசமாகச் சிக்கிக் கொண்டாராம். முகவரி தேடி அவர் முழிக்க, ரெண்டு எழுத்தார் இப்படித்தான் முழிப்பினம் எண்டு நினைச்சு ஏரியாச் சனம் ரவுண்டப் பண்ணி பிடிச்சுப் போட்டுதாம். தரும அடியை கொடுத்துப்போட்டு சீருடையினரிடம் ஒப்படைச்சவையாம். தெரியாத இடம் தேடிச் செல்ல வேண்டாம்; சென்றாலும் திருட்டு முழி முழிக்க வேண்டாம்.

இன்று ஒரு வித்தியாசமான கவிதை:

"தாம்பத்தியம்
கணவனுக்குத் தெரிந்தது
மனைவிக்குத் தெரியலாம்....
மனைவிக்குத் தெரிந்தது
கணவனுக்குத் தெரியலாம்....
இருவருக்கும் தெரிந்தது
யாருக்கு தெரியக்கூடாது!"



படிப்பகம்

www.padippakam.com




# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர்

அற்புதன் – எழுதுவது

# இந்தியப் படையின் மனித வேட்டை

## முகாம்மீது டாங்கித் தாக்குதல்

### வேட்டை ஆரம்பம்

யாழ்ப்பாணம் பொதுமருத்துவ மனையின் துயரக்கதை எப்படி ஆரம்பமானது? மருத்துவனை வைத்தியர் ஒருவர் விபரிக்கிறார்.

"நாங்கள் அப்போது கதிரியக்கப் பகுதியில் தேநீர் அறையில் இருந்தோம். அந்த இடம் முழுவதும் மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு நின்றனர். 7ம் நம்பர் வார்டைக் காலிசெய்துவிட்டு வந்த நோயாளிகளும் அங்கிருந்தனர்.

சூட்டுச்சத்தம் எங்களுக்கு அருகில் வந்துகொண்டிருப்பது கேட்டது.

இந்திய இராணுவம் உள்ளே நுழைந்தாலும் அவர்கள் எங்களைச் சோதனையிடுவார்கள், பின் அவர்களுக்கு நாங்கள் விஷயங்களை விளங்கப்படுத்தலாம் என்று நம்பிக்கொண்டிருந்தோம்.

எங்களுடன் இருந்த டாக்டர் கணேசரத்னம் அறையைவிட்டு வெளியே சென்றார். எங்களின் சக ஊழியர்கள் சிலர் இன்னமும் தங்கள் வார்ட்டுகளில்தான் இருந்தனர்.

சூட்டுச்சத்தம் இப்போது மிக மிக அருகில் வந்துவிட்டது. எங்களைச் சுற்றியுள்ள அபாயத்தை உணர்ந்து எல்லோரும் அப்படியே தரையில் படுத்துவிட்டோம்.

சுட்டுக்கொண்டே கதிரியக்கப் பிரிவுக்குள் வந்தது இந்திய இராணுவம். அங்கே நெருக்கியடித்துக் கொண்டிருந்த மக்கள்தான் அவர்கள் கண்களில் முதலில் பட்டனர்.

மக்களைக் கண்டதும் உடனடியாக அவர்கள்மீது சரமாரியாக சுட்டுத்தள்ளத் தொடங்கினார்கள்.

நோயாளிகள் சூடு பட்டு செத்து விழுவதைக் கண்ணால் கண்டோம்.

விரலைக்கூட அசைக்காமல் செத்துப் போனவர்களைப் போலத் தரையில் கிடந்தோம். இறந்து போனவர்களின் சடலங்களை அகற்ற வரும்போது எங்களையும் அவற்றோடு போட்டு எரித்து விடுவார்களோ, சுட்டுவிடுவார்களோ என்று முழுநேரமும் நடுங்கிக் கொண்டிருந்தோம்.

இரவில் மேலும் சில வெடிச்சத்தங்கள் கேட்டன. எங்களுடைய குவார்ட்டர்ஸ் அமைந்திருக்கும் மேல்மாடியில் அவர்கள் நடமாடும் சத்தம் எங்கள் காதுகளில் விழுந்தது.

மறுநாள் காலை 11.00 மணி வரை கிட்டத்தட்ட 18 மணித்தியாலங்கள் நாங்கள் அப்படியே கிடந்தோம்.

### "அம்மாவுக்கு ஆதரவு"

அந்த இடத்திலிருந்து இன்னொருவர் மேலும் விபரிக்கிறார்:

"இந்திய இராணுவம் வெளி கேற் வழியாகப் புகுந்து, தாழ்வாரம் வழியாக வந்து கண்டபடி சுட ஆரம்பித்தது. மேற்பார்வையாளர் அலுவலகத்திற்குள்ளும், வேறு அலுவலகங்களுக்குள்ளும் அவர்கள் கண்மூடித்தனமாகச் சுட்டார்கள்.

என்னோடு பணிபுரிந்த சக ஊழியர்கள் பலர் இறப்பதைக் கண்டேன். இன்னொரு சக ஊழியர் என்னிடம் கிசுகிசுத்தார் "அப்படியே அசையாமல் படுத்துக் கிடவுங்கள்"

அன்றிரவு முழுவதும் இம்மிகூட அசையாமல் அங்கு கிடந்த சடலங்களின் அடியில் படுத்துக்கிடந்தோம்.

ஆஸ்பத்திரி மேற்பார்வையாளராக இருந்த ஒருவருக்கு இருமல் இருந்தது. உரத்து இருமினால் அவர்கள் காதில் விழுந்துவிடும். அதனால் இரவு முழுவதும் முனகியவாறு இருமிக்கொண்டிருந்தார்.

அந்த முனகல் இருமல் கூட ஒரு இந்திய வீரனின் காதில் கேட்டுவிட்டது. ஒரு கைக்குண்டை அவர்மீது வீசி எறிந்தான்.

அந்த மேற்பார்வையாளரும் அவர் அருகில் கிடந்த சிலரும் பலியானார்கள்.

அம்புலன்ஸ் சாரதி இறந்தது எனக்குத் தெரியும்.

இன்னொரு இடத்தில் ஒருவர் தன் கைகளை மேலே உயர்த்தியபடி எழுந்து நின்று உரத்துக் கூவினார்.

"நாங்கள் அப்பாவிகள். நாங்கள் இந்திராகாந்தி அம்மாவுக்குத்தான் ஆதரவு"

அவர் உரத்துச் சொல்லிக் கொண்டிருக்க அவர்மீதும் ஒரு கைக்குண்டை எறிந்தார்கள். அவரும் அவருக்கு அருகில் கிடந்த சகோதரரும் இறந்துபோனார்கள்.

### காலையில்

இரவு கடந்துபோய் காலையாகிவிட்டது. காலை 8.30 மணியளவில் குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் சிவபாதசுந்தரம் மூன்று தாதிமாருடன் தாழ்வாரம் வழியாக நடந்துவந்தார்.

"தாங்கள் யார் என்று அடையாளம் காட்டிக்கொண்டு இராணுவத்திடம் சரணடைந்து விடுவது உசிதமானது என்று அவர்களிடம் அவர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

கைகளை மேலே உயர்த்திக்கொண்டு "நாங்கள் சரணடைகிறோம். நாங்கள் ஒன்று மறியாத டாக்டர்களும் நர்சுகளும்தான்" என்று உரத்துக் கூறியவாறு அவர்கள் நடந்து வந்தனர்.

டாக்டர் சிவபாதசுந்தரம் தமக்கு அருகில் வரும்வரை இந்திய இராணுவத்தினர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் கைகளை உயர்த்திக் கொண்டு அவர்களை நோக்கி நம்பிக்கையோடு சென்றார்.

தமக்கு அருகில் அவர் வந்ததும் இந்தியப் படைகள் அவர்மீது வேட்டுக்களைப் பொழிந்தன.

அந்த இடத்திலேயே துடிதுடித்தபடி செத்து வீழ்ந்தார் டாக்டர் சிவபாதசுந்தரம். அவருடன் வந்த நர்சுகள் சாயமடைந்தனர்.

மருத்துவனையில் சிக்கிவிட்ட குழந்தைகளையும், புதிதாகப் பிறந்த குழந்தைகளையும் காப்பாற்ற வந்த உன்னத மனிதன் டாக்டர் சிவபாதசுந்தரம் இரத்தத்தில மிதந்தார்.

உயிர் பிழைத்திருந்தவர்கள் மறுநாள் காலை பதினொருமணிவரையும் இறந்து போனவர்கள்போல அப்படியே கிடந்தனர்.

இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் ஆஸ்பத்திரி வார்ட் ஒன்றுக்கு வந்தபோது அவரை இடைமறித்து நேர்நின்று வாதாடிய பிறகுதான் தாங்கள் அனைவரும் காப்பாற்றப் பட்டதாக அங்கிருந்தவர்கள் கூறினார்கள்.

அந்த டாக்டர் அதிகாரிக்கு நிலமையை விளக்கிக் கூறினார். தனது இரு கைகளையும் மேலே உயர்த்தியவாறு தன்னுடன் பணி புரிந்தவர்களையும், காயமடைந்து கிடந்தவர்களையும் குரல் கொடுத்து அழைத்தார்.

தங்களின் சக மருத்துவர் டாக்டர் கணேசரட்னம் ஸ்டெதஸ்கோப்புடன் கீழே விழுந்து இறந்துகிடப்பதையும் அவர்கள் கண்டனர்.


### இரத்தக் காலடிகள்

ஆஸ்பத்திரியில் தங்கி இருப்பவர்கள் மேலே தங்களின் அறைகளுக்குச் சென்று பார்த்தபோது முழுப்பகுதியும் சூறையாடப்பட்டிருப்பதைக் கண்டனர்.

தரையில் சிதறிக்கிடந்த அவர்களின் துணிமணிகள்மீது இரத்தம் தோய்ந்த பூட்ஸ்களின் தடங்கள் காணப்பட்டன. அவர்களின் விலைமதிப்புள்ள உடமைகள் யாவும் பறிபோய்விட்டன.

ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த மற்றொரு மருத்துவர் விபரிக்கிறார்:

"கதிரியக்கப் பகுதியில் இருந்து ஓய்வறையை விட்டு விலகிச் செல்லும் நடைபாதைப் பகுதியில் நான் கிடந்தேன். என் கால்கள் வெளியே நீண்டு கிடந்தன.



திறந்திருந்த ஜன்னல் ஒன்றின் வழியாக வந்த மாலைச் சூரியஒளி பட்டுக்கொண்டிருந்தது. பயத்தில் உறைந்துபோயிருந்த நான் என்னிடம் எந்தவித அசைவும் தெரிந்துவிடக் கூடாதே என்பதற்காக மரக்கட்டை போலப் படுத்துக்கிடந்தேன்.

உண்மையிலேயே நான் உயிர்தப்பியது பெரிய அதிஷ்டம்தான். அந்த இராணுவ வீரர்கள் ஒருகைக் குண்டை வீசியெறிந்தார்கள்.

அதனால் என் முன்பாக படுத்துக் கிடந்தவர்கள் எல்லாம் இறந்து போய்விட்டதைக் காலையில்தான் பார்த்தேன்.

அந்த இரவு முழுவதும் விழித்துக் கொண்டே கிடந்தேன்.

பல்வேறு சத்தங்கள், குரலோசைகள், அவ்வப்போது எங்கள் தலைகளுக்கு மேலால் சீறிப்பரவும் துப்பாக்கிவேட்டுக்கள், அல்லது கைக்குண்டுகள் வீசப்படும் அனைத்தும் எனக்குக் கேட்டுக்கொண்டிருந்தன.

### "ராஜீவ் வாழ்க"

"அம்மா டீ டீ டீ" என்று ஒரு குழந்தை அழுவது கேட்டது.

இன்னொரு குழந்தை கதறி அழுதது. ஒருவேளை அதன் தாய் இறந்திருக்கக்கூடும் என்று நினைத்தேன்.

"என் கால்கள் விறைத்துபபோயிருக்கிறது. நன்றாகக் குளிர்ந்துபோயிருக்கிறது. என் கால்களின் மேல் ஒரு பிணம் கிடக்கிறது. தயவு செய்து அதை எடுத்துப் போடுங்கள்!" என்று ஒரு பெண்மணி கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்தப் பெண்மணியின் வலி முனகலை என்னால் பொறுக்கமுடியவில்லை. "யாராவது அவருக்குப் பக்கத்தில் இருப்பவர்கள் அந்தப் பிணத்தை எடுத்துபோட்டால் என்ன? உங்களுக்குக் காது செவிடா?" என்று கத்தினேன்.

அந்தப் பெண்மணி தொடர்ந்து முனகிக் கொண்டிருந்தாள்.... காலையில் அந்தப் பெண்மணி கிடந்த இடத்தில் அமைதி நிலவியது.

அவளும், அவள் அருகில் கிடந்தவர்களும் இறந்துபோயிருந்தனர்.

ஒருவர் சிவபுராணத்தை வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தார். கூடவே 'ராஜீவ் வாழ்க. இந்திரா வாழ்க" என்றும் சத்தமாகக் கூறிக்கொண்டிருந்தார்.

அவரும் ஒரு கைக்குண்டுக்குப் பலியாகி செத்துக் கிடந்தார்.

காலை 10.30 அல்லது 11.00 மணிக்கு எங்களோடு சேர்ந்து தங்கியிருக்கும் ஒரு பெண் டாக்டர், உயிரோடு இருப்பவர்கள் கைகளை மேலே உயர்த்தியபடி எழுந்து நிற்குமாறு கூவியழைப்பதைக் கேட்டோம்.

எங்கள் அறையில் ஆறுபேர் மட்டுமே உயிரோடு இருப்பதாக நான் நினைத்திருந்தேன். ஆனால், அப்போது குறைந்தது பத்துப்பேராவது உயிரோடு இருக்கிறோம் என்று தெரிந்தது.

நாங்கள் எல்லாம் கைகளை மேலே உயர்த்திக் கொண்டு வெளியே வந்தோம். எங்கள் முன்னால் கிடந்த பிணங்கள் மீதெல்லாம் ஏறிக் கடந்தோம்.

அந்தச் சடலங்கள் ஒருமைல் தூரத்துக்கு பரவிக்கிடந்தன போலத் தோன்றியது. இந்தியப்படை எங்களை நெருங்கிவர முடியாமல் பெரும் தடைபோல அந்தப் பிணங்கள் கிடந்திருக்கின்றன. அதனால்தான் நாங்கள் தப்பிப்பிழைத்திருக்கிறோம்.

எங்களில் சிலர் அழ ஆரம்பித்தார்கள். எங்கள் மத்தியில் அப்போதிருந்த ஒரே ஒரு மருத்துவ நிபுணர்தான் எங்களைச் சாந்தப் படுத்தினார்.

"அழாதீர்கள். நாம் அழுதுகொண்டிருக்கும் நேரமல்ல இது. நாம் மிக அதிகமாக இழந்து விட்டோம். ஆனால் நாம் செய்யவேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன. நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அவற்றுக்காக உழைப்போம்" என்று அவர் கூறினார்.

"அவர் மட்டும் அந்த வார்த்தைகளை எங்களிடம் கூறியிருக்காவிட்டால் நாங்கள் நிச்சயம் ஒரேயடியாக இடிந்து போயிருப்போம்."

யாழ் மருத்துவ மனையின் மருத்துவர்கள், தாதிகள் மற்றும் ஊழியர்கள் அடங்கிய இச் சிறு அணியினரின் அபாரமான துணிச்சலும் மகத்தான அர்ப்பணிப்புமே முற்றுகை, பீதி, விரக்தி ஆகியவற்றின் பிடியில் சிக்குண்ட நிலையிலும் இயங்கிக் கொண்டிருந்த மருத்துவ மனைகளில், யாழ் மருத்துவ மனையைத் தனித்துவத்தோடும், பெருமையோடும் நிலை நிறுத்துகிறது.

'முறிந்தபனை' நூலின் ஆசிரியர் குழுவினருக்கு யாழ் மருத்துவ மனை வேட்டையை நேரில் கண்டு அனுபவித்தவர்கள் சொன்ன துயரக்கதைகள் நெஞ்சை உலுக்கக் கூடியவை. என்றும் மறக்கவும் முடியாதவை.

### வெறித்தனம்

மக்கள் யார்? எதிரிகள் யார்? என்று இனம் காணமுடியாத நிலையில் நடைபெற்ற சம்பங்கள் அல்ல இவை.

கைகளை உயர்த்தி மன்றாடிய அப்பாவிகளை நோக்கி கைக்குண்டுகள் வீசப்பட்டன. தரையோடு விழுந்து படுத்தவர்களை நோக்கி கைக்குண்டுகளை உருட்டிவிட்டனர்.

இந்தியாவுக்கு தாம் எதிரிகள் அல்ல என்று வெளிக்காட்டுவதற்காக 'ராஜிவ்காந்தி இந்திராகாந்தி என்ற பெயர்களைச் சொல்லிக் கொண்டனர் சிலர். அந்தப் பெயர்களை தாங்கள் உச்சரிப்பதைக் கேட்டால் இந்தியப் படை வீரர்கள் நெகிழ்ந்து போவார்கள். இரக்கம் காட்டுவார்கள் என்றுதான் அந்த அப்பாவிகள் நினைத்தனர்.

அவர்கள் அப்படி பெயர்களைச் சொன்னதுதான் பிழையாகிப்போனது. உயிரோடுதான் இருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டு சத்தம் வந்த திசையை நோக்கி கைக்குண்டை உருவி வீசினார்கள்.

மருத்துவமனை வளவுக்குள் புலிகள் நடமாடியது உண்மைதான். ஆனால் இந்தியப் படை வெறியாட்டம் நடத்தியபோது புலிகள் யாரும் மருத்துவ மனை வளவுக்குள் நிற்கவும் இல்லை. இந்திப் படையைத் தாக்கவும் இல்லை.

மருத்துவ மனைக்குள் புலிகள் இருக்கக் கூடும் என்று நினைத்து இந்தியப்படை உள்ளே பிரவேசித்த மாதிரியும் தெரியவில்லை.

மருத்துவ மனையின் முன்பக்க வாசல் வழியாகவே இந்தியப் படையினர் உள்ளே புகுந்தனர். மருத்துவ மனையின் பின்வாசல் கதவு திறந்தே கிடந்தது. அந்த வாசல் வழியாகவோ, அல்லது சுற்று மதில்கள் மூலமாகவோ மருத்துவ மனைக்குள் இருந்து தப்பிச் செல்ல முடியும்.

புலிகள் மருத்துவமனை வளவுக்குள் இருந்திருந்தால் கூட இந்தியப் படையால் பிடித்திருக்க முடியாது. மருத்துவமனை முற்றுகையிடப்படவில்லை. புலிகளைப் பிடிப்பதுதான் நோக்கம் என்றால் மருத்துவ மனையை படைகள் முற்றுகையிட்டிருக்கும்.

இந்தியப் படைக்கு அந்த நோக்கமெல்லாம் கிடையாது. கண்ணில்பட்டவர்களையெல்லாம் சுட்டுத்தள்ளும் வெறிபிடித்த படையாகத்தான் அது மருத்துவ மனைக்குள் புகுந்தது.

'மக்களே எதிரிகள், எதிரிகளே மக்கள்' என்று முடிவு செய்துவிட்ட மூர்க்கமான படையாகவே இந்தியப்படை படுகொலை வேட்டையில் இறங்கியது.

### தகவல்களும் கைதுகளும்

யாழ்ப்பாணத்தில் மக்கள் தஞ்சமடைந்த அகதிமுகாம்கள்மீது ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் அங்கிருந்த மக்கள் பீதியுடன்தான் இருந்தனர்.

யாழ்ப்பாணம் நாவலர்வீதியில் அமைந்துள்ள நாவலர் பாடசாலை அகதி முகாமில் நடந்த ஒரு சம்பவம் வேதனையான வேடிக்கை.

அகதி முகாமுக்குள் புலிகளும் இருக்கிறார்களா என்று கண்டறிவதற்காக சிலரிடம் தகவல் சேகரித்தது இந்தியப் படை.

தகவல் கொடுத்து உதவினால் தம்மை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று நினைத்த சிலர் இந்தியப் படை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து உதவினார்கள்.

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்க உரிமையாளர் எஸ்.தியாகராஜா. எஸ்.ரி.ஆர் என்று அழைக்கப்படுவார். தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர். யாழ் மாநாகரசபைத் தேர்தலிலும் போட்டியிட்டவர். பின்னர் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளராக இருந்தார்.

தியாகராஜாவின்மீது கோபம் உள்ள யாரோ ஒருவர் இந்தியப்படைக்கு தகவல் கொடுத்தார். நாவலர் பாடசாலை அகதி முகாமில்தான் தியாகராஜா இருப்பதாக தகவல் சொல்லப்பட்டது.

நாவலர் பாடசாலை அகதி முகாம்மீது ஷெல் விழுந்து அகதிகள் சிலர் பலியாகி இருந்தனர். அதனால் அங்கிருந்த அகதிகள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தனர்.

நாவலர் பாடசாலை முகாமுக்குள் சென்ற படை அதிகாரி ஒருவர் 'தியாகராஜா' என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டார்.

அகதிகள் மத்தியில் இருந்து ஒருவர் எழுந்தார். "யெஸ் ஐ ஆம் தியாகராஜா" என்று சொல்லிக்கொண்டே முன்னால் வந்தார்.

மீண்டும் அதிகாரி கேட்டார்;

"நீர்தானா தியாகராஜா"

"யெஸ் ஐ ஆம் தியாகராஜா"

அவர் சொன்னதுதான் தாமதம், விழுந்தது அடி. உருட்டி உருட்டி அடித்தார்கள்.

நல்லவேளையாக உயிர்தப்பினார் தியாகராஜா. பின்னர்தான் தெரிந்தது அவர் ராஜா திரையரங்க உரிமையாளர் தியாகராஜா அல்ல. பெயர் ஒன்றாக இருந்ததால் வந்த வினை அது.

### கொக்குவில் வேட்டை

அக்டோபர் 25ம் திகதி யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதிக்குள் இந்திய இராணுவம் கவச வாகனங்களுடன் புகுந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அகதி முகாமில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் அகதிகள் தங்கியிருந்தனர்.

கொக்குவில் இந்து மூன்று மாடிக் கட்டிடத்தைக் கொண்டிருந்தது.

கல்லூரி முகப்பில் 'அகதி முகாம்' என்ற அறிவிப்புப்பலகை தொங்கவிடப் பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் ஏனைய அகதி முகாம்களில் ஷெல்லடியால் மக்கள் பலியான விவரம் கொக்குவிலுக்கு எட்டவில்லை.

அதனால் 'அகதி முகாமைக் கண்டால் இந்தியப் படையினர் உதவி செய்வார்களே தவிர, தொல்லை தர மாட்டார்கள்' என்று முகாமில் இருந்தவர்கள் நம்பிக் கொண்டிருந்தனர்.

'ஈழநாடு' பத்திரிகையாளரும், நீதிபதியின் மகனுமான ஆனந்த் பாலகிட்னரும் கொக்குவில் இந்துக் கல்லூரி அகதி முகாமை நிர்வகித்தவர்களில் ஒருவர்.

தொண்டர் நிறுவனமான சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் சீருடையுடன் அகதிமுகாம் வாயிலில் ஆனந்த் பாலகிட்னரும், தொண்டர்களும் அமர்ந்திருந்தனர்.

இந்தியப்படை டாங்கி ஒன்று கொக்குவில் இந்துக்கல்லூரி முன்பாக வந்து நின்றது. அப்போது நேரம் பிற்பகல் இரண்டு மணி.

டாங்கிகளின் ஓசை கேட்டதும் இந்தியப்படை வருகிறது என்பது முகாமில் இருந்த மக்களுக்கு விளங்கிவிட்டது.

இந்தியப்படை எப்படி இருக்கிறது என்று பார்க்கவேண்டும் என்று அகதிகள் பலருக்கு ஆவலாக இருந்தது.

இந்துக்கல்லூரியின் சுவர் ஓரமாக அகதிகள் குழுமி நின்று இந்தியப்படை வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போதுதான் இந்தியப்படை டாங்கி ஒன்று கல்லூரி முன்பாக வந்து நின்றது.

அதன் சுடு குழாய் கல்லூரியை நோக்கித் திரும்பியது.

இந்தியப்படையை காண்பதற்காக ஆவலாடு ஓடிவந்து குழுமிய மக்களை நோக்கி குறிவைத்தது.

பறந்துவந்தன ஷெல்கள்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது- இராஜதந்திரி

# பனங்காட்டிலிருந்து வன்னிக் காட்டுக்குத் தாவும் இராணுவ நடவடிக்கை!

## நீண்ட கெரில்லா யுத்தத்துக்கு அடித்தளமிடும் வன்னி ஊடுருவல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை, 'பனங்காட்டு'ப் பிரதேச இராணுவ நடவடிக்கைகள் என்றே வர்ணிக்கமுடியும். ஏனெனில் திரும்புமிடமெல்லாம் நெடிதுயர்ந்த பனைமரங்கள் காணப்படும் குடா நாட்டுப் பிரதேசத்திலேயே 'சூரியக்கதிர்' என்ற பெயருடன் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆண்டில்- தற்போது வவுனியாவிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள 'எடிபல'- அதாவது 'துணிச்சல் படை' என்ற இராணுவ நடவடிக்கை அடர்ந்த வன்னிக்காட்டுப் பிரதேசங்களை ஊடறுக்கும் நடவடிக்கையின் பரீட்சார்த்த முயற்சியாக அமைந்துள்து.

எனவே 'பனங்காட்டிலிருந்து', வன்னிக்காட்டுக்குத் தாவியதாகவே தற்போதைய 'எடிபல' இராணுவ நடவடிக்கை விளங்கியிருந்தது.

யாழ்ப்பாணக் குடா நாட்டைத் தமது கட்டுப்பாட்டின்கீழ் சுமார் ஐந்து வருட காலம் வரை எல்.ரி.ரி.ஈயினர் வைத்திருந்தனர்.

'சூரியக்கதிர்' இராணுவ நகர்வையடுத்து எல்.ரி.ரி.ஈ.யினரின் பிரதான தளமாகவும், நடமாட்டத்துக்குரிய பிரதேசமாகவும் வன்னி வனாந்தரங்களே இருந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தபோதுகூட வன்னிப் பகுதியை ஒரு முக்கிய கேந்திரப் பிரதேசமாகவே புலிகள் வைத்திருந்தனர்.

ஏனெனில், புலிகளது முக்கிய புகலிடமாகவும், அவர்கள் வளர்ச்சி பெற்ற பெரும் பாசறையாகவுமே வன்னிப்பிரதேசம் இருந்து வருகின்றது.

வன்னியில் கடந்த காலங்களில் பல முக்கிய வெற்றிகளைக்கூட புலிகள் ஈட்டியுள்ளனர்.

ரூபவாஹினியின் அஞ்சல் கோபுரம் அமைந்திருந்த கொக்காவில் இராணுவமுகாமைத் தகர்த்தமை, மாங்குளம், ஒட்டுசுட்டான், மண்கிண்டிமலை படைமுகாம்களைத் தாக்கியழித்தமை என்பன புலிகளுக்குக் கிடைத்த வெற்றிகளாகும்.

இந்திய இராணுவம்கூட வன்னிக் காடுகளை ஊடுருவி, புலிகளது முகாம்களைத் தாக்குவதில் பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ளவேண்டியிருந்தது.

வன்னிப்பகுதியில் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனைப் பிடிக்கும் முயற்சியில் தோல்வி கண்டு, தமது இயலாமையை மறைக்க 'பிரபாகரன் இறந்துவிட்டார்' என்ற 'கட்டுக்கதை'யை இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் கட்டவிழ்த்தும் விட்டிருந்தனர்.

ஆனால் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரன் அப்போது தமது வலக்கரமாக இருந்த மாத்தையா என்றழைக்கப்பட்ட கோபாலசாமி மகேந்திரராஜாவுடனும், எல்.ரி.ரி.ஈ. அரசியல் முக்கியஸ்தர் யோகரட்ணம் யோகியுடனும் வன்னிக்காட்டினுள் 'வீடியோ' கமெரா முன்பாகத் தோன்றி இந்தியப்படையினரின் பிரசாரத்தை முறியடித்தார்.

இலங்கையில் இந்திய இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த லெப்டினன்ட் ஜெனரல் திபீந்தர் சிங் தமது இலங்கை அனுபவம்பற்றி நூல் ஒன்றைக்கூட எழுதியிருந்தார்.

அந்த நூலில், புலிகளுடனான மோதல்களில், வன்னிப்பிரதேசத்தில் இந்தியப் படையினர் எதிர்கொண்ட அனுபவங்களை ஜெனரல் திபீந்தர் சிங் நிறையவே எழுதியுள்ளார்.



யாழ்ப்பாணக் குடாநாட்டை அடைவதற்கு 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்குமிடையே தொடர்பை ஏற்படுத்த 'சத்ஜய' என்ற இராணுவ நடவடிக்கை இடம் பெற்றது.

அடுத்து, கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்குமிடையே தரைவழிப்பாதையைத் திறப்பதே தற்போது இடம் பெறும் 'துணிச்சல் படை' (எடிபல) என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையின் நோக்கமென்று அரசு அறிவித்துள்ளது.

கிளிநொச்சிக்கும், வவுனியாவுக்குமிடைப்பட்டதூரம் சுமார் 45 மைல்களாகும். ஆனால் இரு புறமும் அடர்ந்த காடுகளைக் கொண்டதாகவே கிளிநொச்சிக்கும், வவுனியாவுக்குமிடையிலான நெடுஞ்சாலை காணப்படுகின்றது.

இந்த நெடுஞ்சாலையை அண்டிய பிரதேசங்களில் கடந்த பல வருடங்களாக சனநடமாட்டம் என்பது பெரிதும் குறைந்து போயுள்ளது.

பத்துவருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்குமிடையே வீதிப்போக்குவரத்து மட்டுமல்ல, ரயில் போக்குவரத்துக்கூட வன்னிக் காடுகளூடாக இடம்பெற்றது.

ஆனால் இன்று யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்குமிடையே ரயில் ஓடியதற்கான தடயமே இல்லை.

இந்நிலையில், ஆள் அரவமே அற்ற வன்னிக் காடுகளில் 'புலி வேட்டை'யைப் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

காட்டுப்புறங்களில் மோதல்கள் மிகவும் சிக்கலானவையாகும். இருசாராருமே மறைந்திருந்து தாக்கும் தந்திரத்தையே கானக யுத்தங்களில் மேற் கொள்ளவேண்டியிருக்கும்.

கெரில்லாக்கள் மறைந்திருக்கவும், சண்டையிடவும் காடுகள் மிக வசதியான பின்தளங்களாக உதவுகின்றன.

வியட்நாமில் அமெரிக்காவினால் ஓர் உறுதியான வெற்றியைப் பெற முடியாமல் போனதற்கும் வியட்நாமிய காடுகளே பிரதான காரணமாக இருந்தன.

வியட்நாமியக் காடுகளுக்குள் வியட்கொங் கெரில்லாக்கள் நன்கு திட்டமிட்டுத் தமது தாக்குதல்களை அமெரிக்கர்களுக்கு எதிராக நடத்தியிருந்தனர்.

அமெரிக்கா பெருமளவில் அதிநவீன சாதனங்ளைப் பயன்படுத்திய போதிலும் வியட்கொங் கெரில்லாக்களின் 'காட்டுத் தந்திர'ங்களுக்கு ஈடு கொடுப்பது கடினமாகவே இருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரை புலிகளுடனான மோதல்களின் மூலமே தமது வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் பெற்றுவரும் இலங்கை இராணுவம் புலிகளுக்கெதிராகவே எவ்வளவு தூரம் ஒரு காட்டு யுத்தத்தில் தாக்குப்பிடிக்க முடியும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

வன்னிக்காடுகளை ஊடுருவும் பரீட்சார்த்த நடவடிக்கையை கடந்த 49வது சுதந்திரதின வைபவத்தோடு படையினர் ஆரம்பித்தனர்.

ஆனால் கிழக்கில் பல வருட காலமாகவே படையினருக்கும், புலிகளுக்குமிடையிலான மோதல்கள் காடும், காடுசார்ந்த இடங்களிலுமே இடம்பெற்று வருகின்றன.

இந்த மோதல்களில் படையினரால் கிழக்கில் எல்.ரி.ரி.ஈ.யினரை முழு அளவில் முறியடிப்பது முடியாத காரியமாகவே இருந்து வருகின்றது.

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரை, படைமுகாம்கள் அமைந்திருக்கும் பகுதி, படையினரின் நடமாட்டங்கள் என்பவை பற்றி புலிகள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள்.

இதன் காரணமாகவே அவ்வப்போது படையினரது முகாம்கள் வடக்கிலும், கிழக்கிலும் பெருந்தாக்குதல்களுக்குள்ளாவதையும், ரோந்து செல்லும் படையினர் இழப்புக்களை எதிர்நோக்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆனால் புலிகளின் முகாம்களை முழுமையாக- பெருமளவு வெற்றியுடன்- படையினர் வடக்கு-கிழக்கின் காட்டுப்பகுதிகளுக்குள் கைப்பற்றியமை என்பது மிக மிக அரிதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்கில் ஏற்கனவே தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்கும் பக்குதிகளைப் பாதுகாப்பதோடு காடுகளில் புலிகளைத் தேடியழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது படையினருக்குப் பெரும் நெருக்கடியையே ஏற்படுத்தும்.

வன்னியில் 'துணிச்சல்படை' இராணுவ ஒப்பரேஷனை ஆரம்பித்துள்ள அதேசமயம் வடக்கு-கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவும் அரசு தயாராகின்றது.

எனவே ஒரு புறம் இராணுவ நடவடிக்கையும், மறுபுறம் தேர்தல் பிரசாரங்களும் நடைபெறுவதை அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இலங்கையின் 49வது சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது உரையாற்றுகையில், விரைவில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று காணப்படும், என்று தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி தமது உரையில், சுதந்திர இலங்கையின் ஆரம்பகாலங்களில் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளின் பிரதிபலன்களையே இன்றைய சந்ததியினர் எதிர்நோக்க வேண்டியுள்ளது, எனவும் குறிப்பிட்டார்

சுதந்திரம் கிடைத்தபின்னர் ஆட்சிக்கு வந்தோர் கையாண்ட தவறான அணுகுமுறைகள் இன்று இலங்கையில் பூதாகரமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளன என்பது உண்மையே.

ஆனால் கடந்தகால ஆட்சியாளர்கள் மட்டுமல்ல; இலங்கையில் பதவிக்குவரும் எந்தவொரு ஆட்சியாளருமே இனப்பிரச்சினை விடயத்தில் தவறான அணுகுமுறைகளையே கையாண்டு வருகின்றனர்.

ஒவ்வொரு தடவையும் பதவிக்குவருவோர் நிலைமையை மேலும், மேலும் மோசமாக்கி விடுகின்றனரே தவிர, சுமுகமான தீர்வுகளுக்கு வழிவிடவில்லை.

இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வை அரசியல் ரீதியாகவே காணமுடியும் என்று தாம் உறுதியாக நம்புவதாக ஆட்சியிலிருப்போர் கூறிவருகின்ற அதேசமயம், இராணுவ நடவடிக்கையை தாமாகவே அவ்வப்போது முன்னெடுத்து, 'நீறுபூத்த நெருப்பாக' இருக்கும் நிலைமைகளைக் கூடத் தீப்பிழம்பாக்கி விடுகின்றனர்.

இந்நிலையில் தேர்தல்கள் மூலம் மக்களிடம் ஜனநாயக ரீதியாகப் பெறும் ஆணைகளை, இராணுவ ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்வதே ஆட்சியதிகாரங்களில் இருப்போரின் வாடிக்கையாக இருக்கிறது.

கடந்த தேர்தலில் சமாதானத்தை ஏற்படுத்த நாட்டு மக்களின் ஆணையைப் பெற்றுக்கொண்டனர் இன்றைய ஆட்சியாளர்கள்.

கடந்த கால ஆட்சியாளர்கள் பேச்சு மூலமாக சமாதானத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டனர் என்பதே பொதுஜன முன்னணியினரின் குற்றச்சாட்டாக அமைந்திருந்தது.

ஆனால் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலுக்கு மக்களைச் சந்திக்கும்போது, கடந்த தேர்தலில் மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஆணையை நிறைவேற்ற முடியாதவர்களாகவே ஆட்சியாளர்கள் முகம் காட்டுகின்றனர்.

சென்ற தேர்தலில் சமாதான முழக்கத்துடன் மக்களைச் சந்தித்த பொதுஜன முன்னணியினர் இந்த முறை வடக்கு-கிழக்கில் போர் முழக்கத்தைக் கேட்கச் செய்தபடிதான் மக்கள் முன் செல்கின்றனர். சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள மிகப் பாரிய பின்னடைவையே இவை புலப்படுத்துகின்றன.

# புலிகள் கைப்பற்றிய ஆட்டிலெறிப் பீரங்கி

### கிழக்கில் புலிகள் கைப்பற்றிய ஆட்டிலெறிப் பீரங்கி

### 85 எம்.எம். ஆட்டிலெறிப் பீரங்கி

சோவியத் தயாரிப்பான டி- 44 ரக பீரங்கிகளை ஒத்ததாக சீனாவினால் இவை தயாரிக்கப்பட்டன.

- பீரங்கிக் குழாயின் விட்டம்- 85 மி.மீ.
- பீரங்கிக்குழாயின் நீளம்- 4.693 மீ.
- மொத்த நிறை-1750 கி.கி.
- மொத்த நீளம்- 8.34 மீ.
- அகலம்-1.73மீ.
- உயரம்- 1.42 மீ.
- ஏற்றக் கோணம்-35 பாகை
- குலுக்கான அசைவு- 54 பாகை
- சுடும் வீதம்-நிமிடத்திற்கு 15-20 சுற்றுக்கள்
- வீச்சு (ஆகக் கூடியது) -15.65 கி.மீ.
- இயக்குபவர்கள்- 6-8 பேர்
- இழுத்துச் செல்லக்கூடிய வேகம்- மணித்தியாலத்திற்கு 15 கி.மீ. வேகத்தில் சிறிய ட்ரக் மூலம் இழுத்துச் செல்லக் கூடியது.
- பாவிக்கப்படும் எறிகணையின் நிறை- 12. 5 கி.கி.
- எறிகணையின் நீளம்- 990 மி.மீ.



11/12/96 இல் புலுக்குணாவ முகாமில் புலிகளால் 85 எம்.எம்.ரக ஆட்டிலெறிப் பீரங்கி ஒன்று கைப்பற்றப்பட்டது. அப்பீரங்கிதான் படத்தில் காணப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி - பூலான்தேவி

தருவது 31 ரசிகன்

**சென்றவாரம்**

**பூலான்தேவி கொள்ளைக் கோஷ்டியில் ஒருத்தியாகி விடுகிறாள். தலைவன் விக்கிரம் மல்லாவை பூலான் காதலிக்கிறாள். மல்லா விலகி விலகிப் போகிறான். அவன் உதவியுடன் தனது பழிவாங்கும் படலத்தை நடத்துவதுதான் பூலானின் திட்டம்.**

**இனி.....**

விக்கிரம் மல்லா என்னை கன்னத்தில் அறைந்ததும் நான் கலங்கிப் போனேன். விண் என்று கன்னத்தில் வலித்தது.

ஏன் அடித்தான் என்று நான் ஊகிப்பதற்கிடையில் "அங்கே பார்!" என்று சுட்டு விரலால் தரையைக்காட்டினான் மல்லா.

அவன்காட்டிய திசையில் நான் படுத்திருந்த பாய் சுருட்டி வைக்கப்படாமல் அப்படியே கிடந்தது. அருகில் துப்பாக்கியும் கிடந்தது.

"எனக்கு இது பிடிக்காது"– என்றான் மல்லா கோபமான குரலில்.

நான் கன்னத்தை தடவிக்கொண்டே அவனைப் பார்த்துக்கொண்டு நின்றேன். மல்லா அறைந்துவிட்டானே என்று நினைத்தபோது அழுகை வந்துவிடும் போல இருந்தது.

என்னைப் பார்க்க மல்லாவுக்குப் பரிதாபமாக இருந்திருக்க வேண்டும்.

"உன் படுக்கையை நீதான் சுருட்டி வைக்க வேண்டும்! உன் துப்பாக்கியை நீதான் பத்திரமாக வைத்திருக்க வேண்டும்! துப்பாக்கி கடவுள் மாதிரி; முன்பே சொன்னேன் அல்லவா? கடவுள் மாதிரி, எப்போதும் உன்னுடனேயே வைத்திருக்க வேண்டும்! குப்பை மாதிரி இப்படி துப்பாக்கியை கண்ட இடத்தில் போட்டுவிட்டுச் செல்வது குற்றம்: தண்டனைக்குரிய குற்றம்." மல்லா மளமளவென்று பேசினான்.

இப்போது அவன் குரலில் கோபம் குறைந்திருந்தது. என்னை அறைந்துவிட்டதற்காக வருத்தப்படுகிறான் என்று அவன் குரல் காட்டிக்கொடுத்தது. அதனால்தான் தனது செயலுக்காக அவசரக்குரலில் ஒரே மூச்சில் விளக்கம் சொன்னான்.

நான் ஒன்றும் பேசாமல் போய் பாயைச் சுருட்டி மூலையில் வைத்தேன். துப்பாக்கியை என் கையில் எடுத்துக் கொண்டேன்.

"நானும் இப்படித்தான். இங்கே சேர்ந்த புதிதில் அடிபட்டிருக்கிறேன். எந்த நேரமும் எமக்கு ஆபத்து வரலாம். பொலிஸாரால் மட்டும்தான் ஆபத்து வரும் என்று நினைக்காதே! நமக்கு போட்டியான கோஷ்டிகளாலும் ஆபத்து சூழலாம். எப்போதும் நாம் சண்டையிடத் தயாராக இருக்க வேண்டும்! அதனால் துப்பாக்கி நம் கூடவே இருக்க வேண்டும்! நம்மைக் காக்கும் கடவுள் அதுதான். ஆபத்து நம்மை சூழ்ந்தபின்னர் துப்பாக்கியை நாம் தேடிக்கொண்டிருக்க அவகாசம் இருக்கப்போவதில்லை." சொல்லிவிட்டு தொண்டையைச் செருமிக்கொண்டான்.

மல்லா பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலிருந்தது. அவன் சொல்வது எல்லாமே நியாயமாகவே இருக்கிறது என்று நினைத்தேன். எனது கவனக்குறைவுக்காக இப்போது நான் வெட்கப்பட்டேன்.

மல்லா வெளியே போய்விட்டான். அடுத்த கிராமத்துக்கு செல்வதற்காக எல்லோரும் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

அதற்குள் எனக்குப் புதிய உடை தைக்க அளவெடுப்பதற்காக ஒருத்தனை அழைத்து வந்துவிட்டான் பரத் சிங். அவனை என்னிடம் விட்டுவிட்டுப் போய் விடான் பரத் சிங்.

அந்த ஆள் நடுத்தரவயதுக்காரனாகத் தெரிந்தான். அவன் பார்வையே சரியாக இல்லை. என்னைப் பார்த்து தன் காவிப் பற்கள் தெரியச் சிரித்தான். கையில் ஒரு அழுக்கடைந்த சிறிய பை வைத்திருந்தான். அதற்குள் இருந்து ஒரு நீளமான நாடாவை எடுத்தான்.

என்னருகே வந்து அந்த நாடாவால் என் இடுப்பைச் சுற்றி அளவெடுத்தான். பின்னர் என் தோள்மூட்டில் இருந்து மார்புக்கு மேலாக நாடாவை வைத்து அளவெடுத்தான். எனக்கு கூச்சமாக இருந்தது.

அளவெடுப்பதுபோல நாடாவை பிடித்துக்கொண்டிருந்தவன், விரல்களால் என் மார்பில் தொட்டான். வேண்டுமென்றே அப்படிச் செய்கிறானா என்று உடனே என்னால் தீர்மானிக்க முடியவில்லை.

இப்போது அவன் என் முகத்தைப் பார்த்து இளித்தான். எனக்குப் புரிந்துவிட்டது. இவன் வேண்டுமென்றே வம்பு செய்கிறான்.

நான் இப்போது பழைய பூலான் அல்ல; புதிய பூலான். என்னிடம் முதல் அடி வாங்கப் போகிறவன் இவன்தான்.

"ஏய் குட்டி புதிதாகச் சேர்ந்திருக்கிறாயா?" என்று கேட்டுக்கொண்டே அளவெடுக்கும் சாக்கில் அவன் விரல்கள் மேலும் அத்துமீறிக் கொண்டிருந்தன.

"சட்டை சரியான இறுக்கமாக இருக்கிறது. இந்த இடத்தில்தான் இறுக்கம்!" சொல்லிக்கொண்டே தொட்டுக் காட்டினான்.

என் விளையாட்டை இவனிடம்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.

"உனக்குத் திருமணமாகிவிட்டதா?" என்று கேட்டேன். கேட்கும்போதே சிரிப்பாக வந்தது.

"ஏன் நீ என்னை கட்டிக்கொள்கிறாயா?" என்று கேட்டான்.

"காற்சட்டைக்கு அளவு வேண்டாமா?" என்றேன். மடங்கி குனிந்து காற்சட்டைக்கு அளவெடுத்தான்.

"தூண்மாதிரி இருக்கிறது" என்றான்.

"உனக்கு கல்யாணமாகிவிட்டதா?" என்றேன் மீண்டும்.

அவன் நிமிர்ந்து என்னைப் பார்த்துக் கொண்டே; "என்ன நீ, அதையே திருப்பி திருப்பிக் கேட்கிறாய்? ஆகிவிட்டது. அவள் ஒரு நோஞ்சான். உன்னை மாதிரி ஒருத்தி கிடைத்தால்...."

"கிடைத்தால்?"

"அவளை தாய் வீட்டுக்குத் துரத்தி விடுவேன்."



பூலான்

"அளவெடுத்துவிட்டாயா?"

"உனக்கு எல்லாமே சரியான அளவுதான். நீ எப்படி இவர்களுடன் சேர்ந்தாய்?"

"ஏன் சேர்ந்தாய் என்று கேள்?"

"ஏன் சேர்ந்தாய்?" அவன் கேட்டு முடிப்பதற்கிடையில் சட்டென்று என் கைகளை வீசி அவன் கன்னத்தில் அறைந்தேன்.

"இதுக்குத்தானடா சேர்ந்தேன்!" சொல்லிக்கொண்டே என் காலை மடக்கி உயர்த்தி முழங்காலால் அவன் வயிற்றில் இடித்தேன்.

நான் அப்படிச் செய்வேன் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அந்த அதிர்ச்சியால் அவன் தன்னை தற்காத்துக்கொள்ள முடியவில்லை.

அவன் தயாராகி திருப்பி அடிக்க நினைக்க முன்னர் நான் குரலை அடக்கி அவனை எச்சரித்தேன்.

"ஒரு குரல் கொடுத்தேன் என்றால் விக்கிரம் மல்லா ஓடிவந்துவிடுவர்ன். உன்னைக்கொன்று போட்டுவிடுவான். கூப்பிடவா?"

சட்டென்று அவன் கண்களில் பயம் சூழ்ந்தது. முகம் வெளிறியது. தன் கைகளைச் சேர்த்து கூப்பினான்.

"வேண்டாம். நான் பிள்ளை குட்டிக்காரன். என்னை விட்டு விடு. என் உயிரைக் காப்பாற்று தாயே!"

அவன் மன்றாடுவதைப் பார்க்கச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. கண்ட இடமெல்லாம் தொட்டு விட்டு தாயே என்கிறானே என்று நினைத்ததும் வெறுப்பாகவும் வந்தது.

"நாயே! யாரடா தாய்?" என்றேன். எனக்கு தைரியம் இப்போது அதிகமாகிவிட்டது. நான் என்ன செய்தாலும் இவன் பதிலுக்கு எதுவும் செய்யமாட்டான் என்று தெரிந்துவிட்டது.

இவனைப் போன்ற நாய்கள்தானே நான் தனியாக மாட்டியபோது கடித்துக் குதறின. ஒரு பெண் என்று இரக்கம் பார்த்தார்களா? கருணை காட்டினார்களா? இல்லையே! பாவிகள். பரதேசி நாய்கள்.

நினைக்க நினைக்க சுள்ளென்று கோபம் தலைக்கேறியது. என் முன்னால் நின்றவன் அந்த நாய்களின் ஒருவனாகவே தெரிந்தான்.

அவன் கைகூப்பி மன்றாடுவதை மனதாரப் பார்க்கவேண்டும்போல வெறி ஏற்பட்டது.

அவன் சட்டையில் எட்டிப் பிடித்தேன். "சத்தம் போடாதே!" என்று இரகசியக் குரலில் சொல்லிக்கொண்டே மீண்டும் என் முழங்காலை மடக்கி அவன் வயிற்றில் இடித்தேன்.

"அ...அய்யோ அம்மா!" என்று வாய்க்குள் முனகினான்.

எனக்கு ஆனந்தமாக இருந்தது. நானும் இப்படித்தானே முனகியிருக்கிறேன்.

"நாயே! நான் யார் தெரியுமாடா?" என் வலது கையை காற்றில் வீசி அவன் கன்னத்தில் அறைந்தேன்.

"தெ....அடிக்காதே தா...தாயே! தெரியாது. சத்தியமாகத் தெரியாது....தெ... தெரிந்தால்...நான் பிள்ளை குட்டிக்காரன் தாயே... நீயார் என்று தெரிந்திருந்தால் உன்னை அப்படி.... அப்படி... அய்...யோ..."

நான் இறுதியாக முழங்காலால் இடித்தது அவன் அடிவயிற்றுக்கீழே. அப்படியே கைகளால் பொத்திக்கொண்டு முறிந்த மரம்போல குனிந்து துடித்தான்.

"நான்தானடா பூலான்தேவி!" என்றேன். என் பெயர் அவனுக்கு பெரிதாகத் தெரியவில்லை. என்னிடமிருந்து தப்புவதுதான் அவனுக்குப்பெரிதாகப்பட்டது.

வெளியே மல்லாவின்குரல் கேட்டது. மல்லாவிடம் இவனைப் பற்றி சொல்லிவிடலாமா என்று நினைத்தேன்.

"பிள்ளை குட்டிக்காரன்" என்று அவன் மன்றாடியது நினைப்பில் வந்தது. இந்த நாயை நம்பி எத்தனை ஜீவன்கள் கிடக்கிறதோ தெரியாது.

"உனக்கு எத்தனை பிள்ளைகளடா?" என்றேன் அவசரமாக.

"ஆ...ஆறு பிள்ளைகள். "நாலு பெண் குழந்தைகள்..." பாவம் அந்தப் பெண் குழந்தைகள். இந்த நாயைக் கொன்றுவிட்டால் அந்தப் பெண் குழந்தைகளை எத்தனை நாய்கள் துரத்தும்...?

"போடா! நாயே!" என்றேன். கைகூப்பி விட்டு ஓடாத குறையாக வெளியே போனான்.

அவன் போன பின்னர் மல்லா வந்தான். "நாளைக்கே புதிய உடையைத் தைத்து தந்துவிடுவான். நாளை மாலைக்கே பயிற்சியை ஆரம்பித்துவிடலாம். சந்தோஷம் தானே?" என்றான் மல்லா.

என்னை அறைந்த பின்னர் மல்லா என்னுடன் பேசும் முறையை மாறுபட்டு விட்டது. பரிவுடன் அவன் குரல் ஒலித்தது. தன் செயலுக்காக மல்லா உள்ளூர வருத்தப்படுகிறான் என்பது தெரிந்தது.

தவறு என்மீதுதானே? ஆனாலும் மல்லா வருத்தப்படுவது நல்லதுதான். அப்படியானால்தான் என்னிடம் வலிய வலிய வந்து பேசுவான்!

"புறப்படலாமா?" என்றான். தலையசைத்தேன். எல்லோரும் புறப்பட்டோம்.

மாலையில்தான் அடுத்த கிராமத்தைச் சென்றடைந்தோம். "அஸ்டா" என்பதுதான் அந்தக் கிராமத்தின் பெயர்.

கிராம எல்லையை நெருங்கியதும் மாது சிங்கை முன்னே அனுப்பிவைத்தான் மல்லா. மாது சிங் சென்று நோட்டம் பார்த்துவிட்டு வரும்வரைக்கும் கிராம எல்லையில் ஒரு மறைவான இடத்தில் அனைவரும் காத்திருந்தோம்.

"பொலிசார் யாராவது வந்திருக்கிறார்களா? சந்தேகப்படும்படியான ஆட்களின் நடமாட்டம் தென்படுகிறதா என்று நோட்டம் பார்த்துவிட்டுத்தான் செல்ல வேண்டும். கிராமத்தில் நமக்கு தகவல் தருபவர்கள் இருக்கிறார்கள். மாது சிங் அவர்களையும் சந்தித்துவிட்டுத்தான் வருவான்," என்று என்னருகே இருந்து விளக்கம் சொன்னான் மல்லா.

அவன் என்னை ஒரு பொருட்டாக நினைத்து விளக்கிச் சொன்னது எனக்கு சந்தோஷமாக இருந்தது. அவர்களின் எச்சரிக்கை உணர்வும், நடவடிக்கைகளும் எனக்கும் புல்லரிப்பான அனுபவமாக இருந்தன.

ஏதோ ஒரு புதிய உலகில், யாருக்கும் பயப்பிடவே தேவையில்லாத உலகத்தில் நான் வந்துசேர்ந்துவிட்டது போல இருந்தது.

மாது சிங் வந்துகொண்டிருந்தான். தூரத்தில் வரும்போதே பச்சைக்கொடி ஒன்றைத் தன் கையில் தூக்கிப் பிடித்து அசைத்தபடி வந்தான்.

"பச்சைக் கொடி காட்டினால் பிரச்சனை எதுவும் இல்லையென்று அர்த்தம்," என்றான் மல்லா.

கிராமத்துக்குள் நாங்கள் புகுந்ததும் கிராமத்தவர்கள் பயந்து ஓடப்போகிறார்கள் என்றுதான் நினைத்தேன்.

கிராமத்துக்குள் சென்றதும் என் நினைப்பு தவறாகிவிட்டது. சிறு பிள்ளைகள்கூட எங்களைக் கண்டு ஓடவில்லை. எங்களிடம் இருந்த துப்பாக்கிகளை தங்கள் கண்களை விரித்து ஆசை ஆசையாகப் பார்த்தார்கள்.

அது ஒரு விவசாயக் கிராமம். நாங்கள் வந்த செய்தி பரவியதும் கிராமத்தவர்கள் எல்லோரும் ஓரிடத்தில் திரண்டுவிட்டனர்.

சிறுவர்கள் சிலர் ஓடிவந்து மல்லாவின் கையைப் பிடித்துக்கொண்டனர். நம் ஆட்களின் கையிலிருந்த துப்பாக்கிகளைப் பறித்தனர்.

துப்பாக்கியில் இருந்த ரவைகளை அகற்றிவிட்டு நம் ஆட்கள் சிலர் தமது துப்பாக்கிகளை சிறுவர்களிடம் கொடுத்தனர்.

சிறுவர்கள் மத்தியில் ஒரே குதூகலம். துப்பாக்கியால் சுடுவது போல பாவனை காட்டி விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஒரு சிறுமி எட்டத்தில் நின்று என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். நான் அவளை நோக்கிச் சிரித்தேன். வண்ணாத்திப் பூச்சி மாதிரி ஓடிவந்தாள். எனக்கு நெஞ்செல்லாம் குளிர்ந்தது போலிருந்தது.

ஒரு மரத்தின் கீழ் கிராமத்தவர்கள் கூடியிருந்தனர். ஒரு தடித்த அட்டையை 'ஸ்பீக்கர்' போல சுருட்டி வாயின் முன்பாக வைத்துக்கொண்டு மல்லா பேச ஆரம்பித்தான்.

அவன் பேசிய வார்த்தைகளைக் கேட்டு நான் பிரமித்துப்போனேன். பிரமிப்பை மேலும் அதிகரிக்கும் சம்பவங்கள் அடுத்து ஆரம்பமாகின. **(தொடர்ந்து வரும்)**

## மற்றொரு 'ராகிங்' கொடூரம்

தமிழ்நாட்டில் ஜான் டேவிட் என்னும் மாணவனால் நாவரசு என்னும் மாணவன் கொல்லப்பட்டான். 'ராகிங்' என்ற பெயரால் நாவரசுவை தகாத உறவுக்கு அழைத்தான் ஜான் டேவிட். நாவரசு பணியாததால் அடித்துக் கொல்லப்பட்டான்.

இது பழைய செய்தி. ஆனாலும் அந்த ராகிங் கொடுமையை யாரும் மறந்துவிடமுடியாது. தமிழக அரசு 'ராகிங்' தடைச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்துள்ளது.

இதேவேளை கடந்த மாத இறுதியில் இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் ராகிங் கொடுமை ஒன்று அரங்கேறியிருக்கிறது.

தமிழ்நாட்டிலும் மருத்துவக் கல்லூரியில் தான் ராகிங் கொடூரம் நடந்தது. கர்நாடக மாநிலத்திலும் மருத்துவக் கல்லூரி ஒன்றில் தான் ஆபாச ராகிங் அரங்கேறியது.

கர்நாடக மாநிலத்தில் பீஜப்பூர் மருத்துவக் கல்லூரியின் முதலாண்டு மாணவர்களையும், மாணவிகளையும் மூத்த மாணவர்கள் ராகிங் செய்தனர்.

ராகிங் என்றால் சாதாரண ராகிங் அல்ல. வெளியே சொல்லமுடியாத ஆபாசமான செயல்களை முதலாண்டு மாணவர்களையும், மாணவிகளையும் செய்யச் சொன்னார்களாம்.

இதன் உச்சக்கட்டமாக நடைபெற்ற சம்பவம் தான் அதிர்ச்சிகரமானது.

முதலாமாண்டு மாணவன் ஒருவனையும், மாணவி ஒருவரையும் ஓர் அறைக்குள் வைத்து மூத்த மாணவர்கள் சிலர் சேர்ந்து நிர்வாணப் படுத்தினார்கள். மிரட்டி மிரட்டியே ஆடைகள் அனைத்தையும் களைந்தனராம்.

பின்னர் அந்த மாணவனையும் மாணவியையும் உறவு கொள்ளச் சொல்லி மிரட்டினார்கள். அவர்கள் மறுத்தபோது இருவரையும் தாக்கினார்கள். அப்படியும் அவர்கள் இருவரும் மூத்த மாணவர்களின் தகாத நிபந்தனையை ஏற்க மறுத்துவிட்டனர்.

அதனால் ஆத்திரம் அடைந்த மூத்த மாணவர்கள் தனி அறைக்குள் இருவரையும் நிர்வாணமாகப் போட்டுப் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

ஒருநாள் அல்ல மொத்தம் மூன்று நாட்கள் பூட்டிய அறைக்குள் உணவு, தண்ணீர் எதுவுமின்றி இருவரும் கிடந்தனர். பின்னர் எப்படியோ தகவல் கசிந்து கல்லூரி நிர்வாகம் இருவரையும் அறையில் இருந்து மீட்டெடுத்தது.



அதனையடுத்து விவகாரம் பொலிஸுக்கு போனது. நாலு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பதினொரு மாணவர்களைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

கர்நாடக மாநில மருத்துவக் கல்வி அமைச்சர் சங்கர் நாயக் உடனடியாக விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலும், கர்நாடகாவிலும் நடைபெற்றுள்ள சம்பவங்களால் மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு மாபெரும் தலைகுனிவு ஏற்பட்டுவிட்டது என்று ஏனைய மாணவர்கள் கவலைப்படுகிறார்கள். "உயர்கல்லூரி மாணவ மாணவிகள் மத்தியில் ஏற்பட்டுவரும் ஒழுக்க மீறல்களும் சமுதாயத்துக்கு பெரும் சவாலாக மாறிவருகின்றன." என்று இந்திய சமூகவியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## 'நோ ரன்' - 'நோ விக்கெட்'

பந்தை வீசி வீசியே விக்கெட்டுக்களைச் சரித்த இம்ரான்கானுக்கு தேர்தல் களம் கைகொடுக்கவில்லை.

ரன் எதுவும் எடுக்காமலேயே கிளீன் போல்டாகிவிட்டார். ஒரு தொகுதியில் கூட அவரது நீதிக்கட்சி தப்பிப் பிழைக்க முடியவில்லை.

ஆட்டமிழந்த தன் அணியுடன் களத்தை விட்டு வெளியேறி இருக்கிறார் இம்ரான்கான். கிரிக்கெட் களத்தில் எதிர்த்தரப்புக்கு சிம்ம



சொப்பனமாக இருந்தவர் கப்டன் இம்ரான். ஆனால் தேர்தல் அரங்கில் எதிர்த்தரப்பின் விக்கெட்டுக்களை நோக்கி வீசிய பந்துகள் எல்லாம் விக்கெட்டுக்களை நெருங்கக்கூட இல்லை. எல்லாமே 'நோ போல்'களாகிவிட்டன என்பதுதான் துரதிஷ்டம்.

உண்மையில் இம்முறை ஆட்சியைப் பிடிப்பது இம்ரான்கானின் நோக்கமல்ல. ஏனெனில் பாகிஸ்தான் பாராளுமன்றத் தொகுதிகளில் பாதி இடங்களில்தான் அவரது கட்சி போட்டியிட்டது. எனவே வெற்றி பெற்றிருந்தால்கூட தனியாக ஆட்சி அமைத் திருக்க முடியாது.

ஆனாலும் இப்படியான ஒரு அதிர்ச்சித் தோல்வியை இம்ரான் மட்டுமல்ல, யாருமே எதிர்பார்க்கவில்லை.

இதற்கு என்ன காரணம்? தேர்தல் நேரத்தில் இம்ரான்மீது புகார் சொன்னார் அவரது முன்னாள் காதலி சிட்டா வையிட்.

"சிட்டாவுடன் உறவு இருந்தது உண்மைதான். ஆனால் அவரது கர்ப்பத்துக்கு நான் காரணமல்ல," என்று மறுத்திருந்தார் இம்ரான்.

சிட்டாவையிட் தவிர வேறு பல பெண்களுடன் இம்ரான்கான் உறவுவைத்திருந்தது ஒன்றும் இரகசியமான சமாச்சாரங்கள் அல்ல. இம்ரான்கான் பெண்கள் விஷயத்தில் ஒரு விளையாட்டுப் பிள்ளை என்பது உலகறிந்த சமாச்சாரம். அப்படியிருந்தும் பாகிஸ்தானில் அவருக்கு பயங்கர மவுசு இருந்தது. உலகெங்கும் இளம் பெண்களிடம் மட்டுமல்லாமல் பாகிஸ்தான் பெண்களிடமும் அமோக செல்வாக்கு இருந்தது.

எனவே 'சீட்டா வையிட்' என்ற பெண் சொன்ன புகாரை நம்பி இம்ரான்கானை பாகிஸ்தான் மக்கள் தங்கள் மனதில் இருந்து இறக்கிவைத்துவிட்டனர் என்று நினைப்பது அபத்தம். அதுவும் தேர்தல் நேரத்தில் கூறப்படும் புகார்களுக்கு பெரும் முக்கியத்துவம் இருப்பதில்லை.

அப்படியானால் இம்ரானின் தோல்விக்கு என்ன காரணம்?

முதல் காரணம் இம்ரானின் திருமணம். "பாகிஸ்தான் பெண்ணையே மணப்பேன்" என்று கூறிக்கொண்டிருந்த இம்ரான்கான் இங்கிலாந்து அழகியை மணந்தார். அப்போதே பாகிஸ்தான் பெண்கள் இம்ரான்கானை வெறுக்கத் தொடங்கிவிட்டனர்.

"பாகிஸ்தானில் அழகான பெண் இல்லையென்றுதானே இங்கிலாந்து பெண்ணை நாடினார் இம்ரான்கான்? அவருக்கா உங்கள் வாக்கு?" என்று இம்ரானின் எதிரிகள் பிரசாரம் செய்தனர். அந்தப் பிரசாரம் நல்ல பயன் கொடுத்திருக்கிறது. பெண்களின் வாக்கு வங்கியை இம்ரான்கான் இழந்ததுதான் மிகப் பெரிய தோல்விக்கு முக்கிய காரணம்.

இம்ரானின் மனைவி ஜெமிமாவும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அதுவும் பாகிஸ்தான் பெண்களிடம் இம்ரானின் செயலை நினைவூட்டிக் கொண்டிருப்பதாக அமைந்துவிட்டது.

கிரிக்கெட்டில் விளையாடினார்; பெண்களோடு விளையாடினார்; அரசியலில் விளையாட முடியவில்லை. தோற்றுப் போனார்.

ஆனாலும் இம்ரான்கானின் அரசியல் பாதையின் முடிவாக இதனைக் கருதமுடியாது. நவாஸ் ஷெரீப்பிடம் மக்கள் நம்பிக்கை மீண்டும் பொய்க்குமானால், இம்ரான் மீண்டும் ஆடிப்பார்க்கக் கூடும். அப்போது ஒருவேளை ஆடுகளம் அவருக்கு சாதகமாகவும் இருக்கலாம்.

## நோயாளியைக் கொல்லலாமா?

ஒருவர் பிழைக்க முடியாத கேஸ் என்று தெரிந்தாலும் அவர் மூச்சு நிற்கும்வரை சிகிச்சை செய்வதுதான் வழக்கம்.

பிழைக்கவே மாட்டார் என்று தெரிந்தால் பின்னர் எதற்காக நாளைக் கடத்த வேண்டும்? டாக்டர்கள் ஏன் நேரத்தை விரயம் செய்ய வேண்டும்? நோயாளியையும் ஏன் வதைக்க வேண்டும்? பிழைக்க மாட்டார் என்று தெரிந்துவிட்டால் நோயாளியின் மூச்சை நிறுத்திவிட்டால் என்ன?

பயப்பிடாதீர்கள்! நம்நாட்டில் யாரும் அப்படிக் கேட்கவில்லை. அமெரிக்காவில் தான் அப்படியொரு கேள்வி எழுந்து சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது.

அமெரிக்க உச்சநீதிமன்றத்திலும் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதே நேரம் அமெரிக்க மக்களிடம் கருத்துக் கணிப்பும் சில நிறுவனங்களால் நடத்தப்படுகிறது.

35 சதவீதமானோர் "மூச்சை நிறுத்தலாம்." என்கிறார்கள். 29 சதவீதமானோர் "குடும்ப ஒப்புதலுடன் மூச்சை நிறுத்தலாம்." என்று அபிப்பிராயப்படுகின்றனர். 11 சதவீதமானோர் "வேண்டவே வேண்டாம்: கூடவே கூடாது," என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டனர்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?



படிப்பகம்

www.padippakam.com

# விண்ணில் பறந்த குரங்கு



➡ விண்ணில் ஒரு ரவுண்டடித்துவிட்டு பூமிக்கு திரும்பிய குரங்கார்தான் படத்தில் காணப்படுகிறார்.

'குரங்குக்கு வந்த யோகத்தைப் பாரேன்' என்று பெருமூச்சு விடுகிறீர்களா? வெயிட்! குரங்கு மட்டுமல்ல மூட்டைப் பூச்சிகள், நத்தைகள், கரப்பான் பூச்சிகள் என்று ஒரு பட்டாளமே விண்ணுக்குச் சென்று திரும்பியுள்ளன.

ரஷ்யாவின் பியோன்-11 என்னும் ராக்கெட்டில்தான் குரங்கும் ஏனையவைகளும் விண்வெளியில் ரவுண்டடித்துவிட்டு வந்துள்ளன. பரிசோதனை முயற்சிக்காக இவை அனுப்பி வைக்கப்பட்டன. இரண்டுவாரங்கள் சுற்றிவிட்டு வந்துவிட்டன. ராக்கெட்டுக்குள்ளேயே அவற்றுக்கு உணவும் வைக்கப்பட்டிருந்தது.

ராக்கெட்டின் உள்ளே குழாய் மூலமாக குரங்கார் பழச்சாறு சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். பயணமும் இலவசம். பழரசமும் தாராளம். இதுதான் உல்லாசம். குரங்காருக்கு யோகம்தானே!

# தகவல் பெட்டி

# புகைக்காத வாகனம்

⬇ இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து மனம் உடைந்து வெளியேறியவர்களில் தொழில் நுட்ப வல்லுநர்களும் அடக்கம். திறமைக்கு மதிப்பில்லை. போதிய ஊக்கமில்லை என்பதால் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகள் அவர்களின் மூளையைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

படத்தில் இருக்கிறது பாருங்கள், அது ஒரு புதுவிதமான மோட்டார் சைக்கிள். புகையே விடாத மோட்டார் சைக்கிள். அளவில் சிறியது. ஆனால் துடி துடிப்பான வேகம் கொண்டது. இதனைத் தயாரித்தவர் ஒரு இந்தியர். பெயர்: அனில் ஆனந்த கிருஷ்ணன். அவர் இருப்பது அமெரிக்காவில். ஆனாலும் நாட்டுப்பற்றை இழக்காமல் இருக்கிறார். இதனைத் தயாரிக்கும் தொழில் நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் தமது மூளைசாலிகளை இழக்காமல் இருந்தால் இதுபோல எத்தனையோ சாதனைகளைப் படைத்து உலகை அசத்தியிருக்கலாம்.





# வலை அறுக்கும் மீன்

⬆ தமிழகத்தில் புதுவை கடல் பகுதியில் சிக்கிய மீன்தான் இது.

மீனவர்கள் வீசிய வலையில் இசகு பிசகாக மாட்டிக்கொண்டது இந்த மீன். உடனடியாக உஷாராகி வலையை அறுத்துத் தப்பிக்கொள்ளப் போராடியது. வலை தாக்குப் பிடிக்காமல் அறுந்தது. ஆனாலும் மீனவர்கள் விடவில்லை. அதன் வாலைப் பிடித்து படகுடன் கயிற்றால் கட்டினார்கள். அப்படியே கரைக்கு இழுத்து வந்தார்கள்.

இதன் நீளம் 15 அடி. எடை கிட்டத்தட்ட 10 தொன். ஆனாலும் இந்த மீன் உணவுக்குப் பயன்படும் ரகமல்ல என்பதுதான் சோகமான செய்தி. கரைக்கு வந்தும் கறிக்கு ஆகாமல் போய்விட்டதே!

# யார்போட்ட சட்டை

⬇ இது யார் போட்ட சட்டை? யாரும் போட முடியாது. போட்டால் எறும்புக்கு யானைத் தோல் போட்டமாதிரி இருக்கும். பசுமாட்டுத் தோலில் செய்யப்பட்ட தோல் ஆடைகளில் மிகப் பெரிய ஆடை இதுதான். இதன் உயரம் 10.5 அடி. அகலம் 5.5 அடி. பத்துப்பேர் சேர்ந்து 12 மணிநேரத்தில் இதனை தயாரித்து முடித்தனர். தயாரிக்க மொத்தச் செலவு ஒன்றரை இலட்சம் ரூபாய்கள். தமிழ்நாட்டில் சென்னையில் நடைபெற்ற சர்வதேசச் தோல் கண்காட்சியில் இந்த பிரமாண்ட தோல் ஆடை காணப்பட்டது. ஆர்ஜெண்டினா நாட்டில் இருந்து கொண்டு வந்து காட்சிக்கு வைத்திருந்தனர்.



# கொக்கு ஆசைக் கொக்கு



➡ தமிழ்நாட்டில் சென்னையில் இருக்கிறது வேடந்தாங்கல். ஆண்டுதோறும் வெளிநாடுகளில் இருந்து விதம் விதமான பறவைகள் அங்கு வந்து சேரும். சில வந்ததும் திரும்பிச் சென்று விடுகின்றன. சில பறவைகள் தங்கியிருந்துவிட்டுப் போகின்றன.

இந்த ஆண்டு ஒரு ஆச்சரியம். சாம்பல் நிறக் கொக்குகள் வந்து சேர்ந்துள்ளன. இவை 'கிரே பெலிகன்' என்று அழைக்கப்படுகின்றன.


கிரே பொலிகன் ரக கொக்குகள் 1984ம் ஆண்டுதான் கடைசியாக வேடத்தாங்கலுக்கு வந்து சென்றன. அதன்பின்னர் 13 வருடங்களுக்குப் பின்னர் இப்போதுதான் வந்துள்ளன.

கிட்டத்தட்ட 200 சாம்பல் நிறக் கொக்குகள் 'விசிட்' அடித்துள்ளன. தமிழ் இலக்கியத்தில் 'செங்கால் நாரை' என்று ஒன்று அழைக்கப்படுபவையும் இவைதான்.

சிவந்த கால்களுடன் உடலில் பலவிதமான நிறங்கள் காணப்படும். பர்மா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில்தான் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. படத்தில் இருப்பவை செங்கல் நாரைகள்.

வேடம்தாங்கலில் செங்கல் நாரைகளைக் காண கூட்டம் அலை மோதுகிறது. பாஸ்போர்ட், மற்றும் அடையாள அட்டைகள் இல்லாமல் பறந்து பறந்து விசிட் அடிக்கும் பறவைகளை நினைத்தால் பொறாமையாக இருக்கிறதல்லவா!

# ஐஸ்வைத்த சிற்பி



➡ யாரையாவது புகழ்ந்து தள்ளுவதை, 'ஐஸ் வைப்பது' என்று சொல்வார்கள். ஆட்களுக்கு மட்டும்தான் ஐஸ் வைக்க முடியுமா? ஆல்பிரட் என்ற சிற்பி 97ம் ஆண்டுக்கே ஐஸ் வைத்துவிட்டார். ஆனால் இது உண்மையான ஐஸ். ஆம்! ஐஸ் கட்டிகள் மூலம் 97 என்று சிற்பமாக செய்துள்ளார்.

புத்தாண்டு தினத்தன்று அமெரிக்க பொஸ்டன் நகரில் இச்சிற்பம் பார்வைக்கு வைக்கப்பட்டது. வெயில் பட்டால் கரைந்து போகும் என்பதால் புத்தாண்டுக்கு முதல் நாள் குளிர் பெட்டியில் வைத்து பாதுகாத்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

* சென்ற ஆண்டு சூப்பர் குட் பிலிம்ஸ் ஆர்.பி.சௌத்ரி தெலுங்கிலிருந்து 'அம்மன்' என்ற மொழி மாற்றுப் படத்தைத் தயாரித்தார். இந்த வருடம் கன்னடப்படமொன்றை மொழிமாற்றி 'அக்கா' என்ற பெயரில் வெளியிடவுள்ளார்.

* கே.பாலச்சந்தர் தயாரிக்க அகத்தியன் இயக்கவிருக்கும் 'விடுகதை' படத்தில் ஜெயராம் கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார். கதாநாயகியாக பாலச்சந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட சுருதி நடிக்கிறார்.

* மணிரத்னத்தின் 'இருவர்' படத்தில் நடித்திருக்கும் முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய், அண்மையில் 'அவுர் பியார் ஹோகயா' என்ற இந்திப்படத்தில் நடிப்பதற்காக சுவிட்சர்லாந்து சென்று திரும்பியிருக்கிறார்.

* 'சேதுபதி ஐ.பி.எஸ்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடித்த மீனா, 'உளவுத்துறை' படம் மூலம் மீண்டும் விஜயகாந்துடன் நடிக்கிறார். இப்படத்தில் மீனாவுடன் சங்கவியும் நடிக்கிறார்.

* பொங்கலுக்கு வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'பாரதி கண்ணம்மா' படத்தின் மூலம் இயக்குநராகிய சேரனுக்கு, புதிதாக நான்கு படங்களை இயக்கும் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

* மலையாளத்தில் ஐ.வி.சசி இயக்கத்தில் மோகன்லால்-மீனா ஜோடியாக நடிக்கும் 'வர்ணபகிட்டு' சிங்கப்பூரில் படமாக்கப்படுகிறது. இந்தப்படத்தைத் தமிழில் மொழிமாற்றி வெளியிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

* முன்னாள் கனவுக் கன்னி 'லதா' சுமார் 15 வருடங்களுக்குப் பின்னர் 'பொன்னு விளையற பூமி' படத்தில் நடிக்க ஆரம்பித்தவுடன், புதிதாக 'மனசுக்குள் வரலாமா', 'ரெட்டை ஜடை வயசு' ஆகிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* 'வி.ஐ.பி.' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் சிம்ரான், முதலில் 'சோத்துக்கட்சி' படத்தில் பார்த்திபனுக்கு ஜோடியாக நடிப்பதற்கு ஒப்பந்தமானவர்.

* நெப்போலியன்-குஷ்பு-ஊர்வசி நடிக்கும் 'எட்டுப்பட்டி ராசா' படத்தில் இடம்பெறும் கிராமிய மணம் கமழும் அனைத்துப் பாடல்களையும் இதன் இயக்குநர் கஸ்தூரிராஜாவே எழுதியுள்ளார்

* செல்வா இயக்கத்தில் அண்மையில் வெளியான 'புதையல்' படத்தில் நடித்த மம்முட்டி, அடுத்து நகைச் சுவைக்கு முக்கியத்துவம் கொடுத்து செல்வா இயக்கும் புதிய படமொன்றில் நடிக்கவிருக்கிறார்.

## மினி சினி



நிகல்யா படம்-மாப்பிள்ளைக் கவுண்டர்

பொல்லாத புன்சிரிப்பு;
போதும்! போதும்! உன் சிரிப்பு!
யார் வீட்டுத் தோட்டத்திலே-
பூத்ததிந்த ரோஜாப்பூ?

## அரசியலில் ரஜினி

ரஜினியின் 'அருணாச்சலம்' படப்பிடிப்புக்கள் இரகசியமாக நடந்துவருகின்றன. கதையில் பாதியை சொன்ன குற்றத்திற்காக ஜெயராமையும் படத்தில் இருந்து தூக்கிவிட்டார்கள்.

அப்படியிருந்தும் படத்தில் இடம்பெறும் சில காட்சிகள் வெளியே கசிகிறதாம்.

ரஜினி ஆதரவுடன் தேர்தலில் போட்டியிடுகிறார் ஜனகராஜ். அவரது சின்னம் உருத்திராட்சை கொட்டை. படத்தில் ஜனகராஜின் பெயர் காத்தவராயன். தேர்தலில் வெற்றி பெறுகிறார் காத்தவராயன். இந்தக் காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டுள்ளனவாம்.

"அந்த அருணாச்சலம் சொல்கிறான், இந்த அருணாச்சலம் செய்கிறான்" என்பதுதான் ரஜினி அடிக்கடி பேசும் வசனமாம்.

## "தோழிகளே தேவை"

ரசிகர்களைவிட ரசிகைகள் அதிகமாக இருப்பதைத்தான் இளம் நடிகர்கள் விரும்புவார்கள். பிரசாந்துக்கும் தனது ரசிகைகள் மீது பிரியம் தான். ஆனால் ஒரு வருத்தமாம்.

அதென்ன வருத்தம் பிரசாந்த்?

"உங்கள் படம் பார்த்தேன். நடிப்பு எனக்குப் பிடிக்கிறது என்ற கடிதம் எழுதும் ரசிகைகளும் இருக்கிறார்கள். உங்களை எனக்குப் பிடிக்கிறது என்று எழுதும் ரசிகைகளும் இருக்கிறார்கள். இதில் நடிப்பை ரசிக்கும் ரசிகைகள்மீதுதான் என் விருப்பம். பின்னவர்கள் மீது வருத்தம்தான் வருகிறது" என்கிறார் பிரசாந்த். உண்மையாகத்தான் சொல்கிறீர்களா பிரசாந்த்?



ஜோதிமீனா

## தாயும்—மகளும் நடனம்

'முத்து' படத்தில் ஜோதிலட்சுமியை மீண்டும் நடிக்கவைத்தார் ரஜினிகாந்த். '
சைவக் கொக்கு' பாடலில் தாம்பத்திய உறவின் ரகசியத்தை விளக்கும் பா
ஆடினார் ஜோதிலட்சுமி.

அதன் பின்னர் ஜோதிலட்சுமி மீண்டும் பிஸி. ஜோதில
மகள் தான் ஜோதிமீனா. அம்மாவின் இடத்தை நிரப்ப வந்ததா
சினிமாவில் கவர்ச்சி ஆட்டம் ஆடினார் ஜோதிமீனா. இ
அம்மாவும் ஆடவந்துவிட்டார்.

பல படங்களில் அம்மாவும் மகளும் சேர்ந்து ஹீரே
ஆடுகிறார்கள். வக்கிரமான சிந்தனைதான். பணம் வ
அதனால் இருவரும் சம்மதிக்கிறார்கள். 'வாய்மையே 
படத்தில் ஜோதிலட்சுமியும், ஜோதிமீனாவும் பார்த்திபனிக்கு
எடுத்து விடுகிறார்கள். இயக்குநரின் கற்பனை அபாரம்(?)

## வேகம் விவே

'இளம் கன்று பயமறியாது' என்கிறார்கள் அப்பாஸ் கார் ஓட்டுவதைப் பார்ப்பவர்கள். அத்தனை வேகமாக கார் ஓட்டுகிறார். மணிக்கு நூறு கிலோ மீற்றர் என்பது அப்பாசுக்கு சர்வசாதாரணம்.

வேகமாக கார் ஓட்டுவது பற்றி அப்பாஸ் என்ன சொல்கிறார் தெரியுமா? "வேகம் இருந்தாலும் விவேகம் என்னிடம் இருக்கிறது. அதனால் எப்போது வேகத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்கிறார் அப்பாஸ். கில்லாடிதான் போங்கள்.



## புதிய வரவு

பிரபு நடிக்கும் 'மாப்பிள்ளைக் கவுண்டர்' படம் மூலம் தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமாகிறார் நிகல்யா. யார் அவர்? சற்றுத் திரும்பிப்பாருங்கள். ஒயிலாக போஸ் கொடுக்கிறாரே அவர்தான் நிகல்யா.

கலப்படமில்லாத தமிழ்ப் பெண் என்று சத்தியம் செய்யும் நிகல்யாவுக்கு மும்பை நடிகைகளை ஓரம் கட்டுவதுதான் இலட்சியமாம். பார்த்தால் இலட்சியத்தில் கொடி நாட்டுவார் போலத்தான் தெரிகிறார். நிகல்யாவுக்கு அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.



ராமராஜன்-தேவயாணி
படம்:- விவசாயி மகன்

## சிவாஜி—விஜ

சிவாஜிகணேசன்-விஜய் இருவரும்
படமொன்றில் நடிக்கப்போவதாக செய்தி
அல்லவா. படத்தின் பெயரும் சூட்டப்பட்
என்று பெயர் சூட்டியுள்ளனர்.

விஜய் ஜோடிகளாக இரண்டு நாய
ஒருவர் மந்த்ரா. இன்னொருவர் சிம்ர

வித்தியாசமான கதையை படமா
வழக்கமாக பிள்ளை இல்லாத பெற்றோர்
தத்தெடுப்பார்கள். ஆனால் அநாதைய
தனக்கு ஒரு தந்தை வேண்டும் என்று த
படத்தின் கதையாம்.

தந்தையாக வித்தியாசமான கெட்-அப்
கணேசன் நடிக்கப்போகிறார். பிரபல
ஒருவர் ஜோடியாக நடிப்பார். சிவாஜிகணே
னுக்கு நகைச்சுவை கலந்த பாத்திரம்.

கம்யூட்டர் கிராபிக்ஸ் முறையில் சிவாஜி கணேசனின் இளமையானகாலத் தோற்றங்களை காண்பிக்கும் திட்டமும் உண்டாம்.



## நடிகை என்றால் பொம்மையா? சுகன்யாவின் மனக் குமுறல்

'கோபுரதீபம்' படப்பிடிப்பில் நடைபெற்ற சர்ச்சை மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்வரை சென்றிருக்கிறது. நடிகர் சங்கத் தலைவர் ராதாரவியிடம் புகார் செய்தார் சுகன்யா.

படப்பிடிப்பின்போது தன்னை வேண்டுமென்றே சீண்டினார்கள். கேலி செய்தார்கள் என்று சுகன்யா அழாக்குறையாக குமுறியிருக்கிறார்.

சுகன்யாவின் புகாரை மறுத்து தயாரிப்பாளர் பதில் சொல்லியிருக்கிறார்.

பாடல் காட்சிகளில் சுகன்யா ஒத்துழைக்காமல் பிகு பண்ணினார். அங்கே தொடக்கூடாது, இங்கே தொடக்கூடாது, அப்படி அணைக்கக்கூடாது. இப்படி அணைக்கக்கூடாது என்றெல்லாம் நிபந்தனை போட்டார். அதனால் ஹீரோ ராமராஜன்கூட அடிக்கடி மூட் அவுட்டானார். நடிக்க என்று பணம் வாங்கிவிட்டு நிபந்தனை போட்டால் என்ன அர்த்தம்?" என்று சீறியிருக்கிறார் தயாரிப்பாளர்.

"நான் ஒன்றும் பிகு பண்ணவில்லை. பாடல் காட்சிகளில் திட்டமிட்டே என்னை பழிவாங்கினார்கள். ஒரே டேக்கில் எடுக்கக் கூடிய காட்சிகளை பல தடவைகள் எடுத்தனர். ராமராஜன் ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருந்தார் பின்னர் தயாரிப்பாளரின் சொல் கேட்டு என்னுடன் முரட்டுத் தனமாக நடந்துகொண்டார். நெருக்கமான காட்சிகள் என்றால் பல தடவை ஒத்திகை பார்த்தனர். இதற்கும் மேல் என்னால் விபரித்துச் சொல்ல முடியவில்லை. நடிகை என்றால் பொம்மையாக நினைத்துக் கொள்ளுகிறார்கள்" என்று தன் தரப்பு நியாயத்தைச் சொல்லி இருக்கிறார் சுகன்யா. சர்ச்சை தொடர்கிறது. ஆனால் படம் வெளியாகிவிட்டது.

## நாயகனின் வெட்கம்

பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் மகன் எஸ்.பி.பி.சரண் 'வாண்டெட்' படத்தில் நடிப்பது தெரிந்த செய்தி.

பாடகராகத்தான் சரணுக்கு விருப்பமாம். 'அலெக்ஸாண்டா' படத்தில் இளையராஜாவின் மகனோடு சேர்ந்து ஒரு பாடலும் பாடியிருந்தார் சரண்.

கங்கை அமரனின் மகன் பிரேமின் கட்டாயத்தால்தான் 'வாண்டெட்' படத்தில் நடிக்கச் சம்மதித்தாராம்.

சரணுக்கு கூச்ச சுபாவம். படத்தில் அவருக்கு ஜோடி மந்த்ரா. சரணுக்கு மந்த்ராவைக் கண்டதும் வெட்கம் பிடுங்கித் தின்றுவிட்டதாம். அமெரிக்காவில் படித்தாலும் கூட அங்கு கூட எந்தப் பெண்ணையும் முத்தம் இட்டத்தில்லையாம். அதுவே ஒரு வரலாற்றுச் சாதனைதான்.


படிப்பகம்

www.padippakam.com

## கரணுக்கு 'ஆலயம்'

'நம்மவர்' படம் மூலம் கமலின் கண்டுபிடிப்பாக வில்லனாக நடித்தவர் கரண். அதன் பின்னர் 'காதல் கோட்டை' படத்திலும் ஒரு கலக்குக் கலக்கினார். 'கோகுலத்தில் சீதை' படத்திலும் கரணின் நடிப்பு பாராட்டப்பட்டது.

தனது திறமையை நிரூபித்துக் கொண்டிருந்த கரணுக்கு கதாநாயகன் அந்தஸ்துக் கிடைத்திருக்கிறது.

கரண் முதன் முதலாக கதாநாயகனாக நடிக்கும் படம் 'ஆலயம்'. கரணுக்கு மற்றொரு அதிஷ்டம், படத்தில் அவருக்கு இரண்டு ஜோடிகள். ஊர்வசி, அஞ்சு அரவிந்த் இருவரும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

திரைக்கதை இயக்கம்: சேகர்ராஜா.
இசை: தேவா.
ஒளிப்பதிவு: ரகுநாத ரெட்டி.

## கங்கா கௌரி

அருண்குமார்-சுவலட்சுமி நடித்துள்ள 'காத்திருந்த காதல்' பொங்கலுக்கு வெளியானது. வசூல் நிலவரம் திருப்தியாக இல்லை. அதற்கு முன்னர் வெளியான 'பிரியம்' படமும் தோல்விதான்.

இப்போது அருண்குமார் புதிதாக நடிக்கும் படம் 'கங்கா கௌரி'. தனக்கு ஜோடியாக மந்த்ராவை போடுமாறு ஒற்றைக்காலில் நின்றாராம் அருண்குமார். மந்த்ராவும், சங்கீதாவும் ஜோடிகளாக நடிக்கின்றனர்.

படத்தை இயக்குபவர் புதியவர். பெயர் மகேஸ்வரன். இசை: சிற்பி. பாடல்கள்: பழனி பாரதி.

## இன்ப அதிர்ச்சி

எதிர்பாராத இன்ப அதிர்ச்சியில் இருக்கிறார் பார்த்திபன். 'பாரதி கண்ணம்மா' படம் இந்த ஓட்டம் ஓடும் என்று அவரே எதிர்பார்க்கவில்லையாம்.

முதலில் முரளிதான் கதாநாயகனாக நடிப்பதாக இருந்தது. என்ன காரணத்தாலோ முரளியால் நடிக்க முடியாமல் போனது. அந்த வாய்ப்புத்தான் பார்த்திபனுக்கு கிடைத்தது.

'பாரதி கண்ணம்மா' சக்கை போடு போடுவதால் அந்தச் சூட்டோடு சூடாக 'வாய்மையே வெல்லும்' படத்தை வெளியிடப் போகிறார் பார்த்திபன்.

தொய்ந்துபோயிருந்த பார்த்திபனின் மார்க்கெட்டை மீண்டும் தூக்கி நிமிர்த்தி விட்டது 'பாரதி கண்ணம்மா'.

## 'தொங்கு தசை'

'ரங்கீலா', 'இந்தியன்' படங்களில் கவர்ச்சிப் புயலாக சுழன்றடித்தவர் ஊர்மிளா. இந்திப் பட உலகில் படுவேகமாக சுழன்றடித்துக் கொண்டிருக்கிறார்.

"ஊர்மிளாவுக்கு பணம்தான் முக்கியம். பணம் கிடைத்தால் உடையை மறந்துவிடுவார்" என்று சக நடிகைகள் கிண்டலடிக்கிறார்களாம்.

ஊர்மிளாவின் காதிலும் அந்தக் கிண்டல் விழாமல் இல்லை. "என் உடம்பில் அழகு இருக்கிறது. ரசிகர்களை கவர்கிறது. வேறு நடிகைகளிடம் அது இல்லை. தொங்கு தசையுடன் காட்சி தருகிறார்கள். அதுதான் என்மீது பொறாமைப்படுகிறார்கள்" என்கிறார் ஊர்மிளா.

## உன்னிடத்தில் என்னை...

விஜய் நடிக்கும் புதிய படம் ஒன்றுக்கு நீளமான பெயர் சூட்டியுள்ளனர். 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்'. அதுதான் படத்தின் பெயர்.

'பூவே உனக்காக' படம் சூப்பர் சூப்பர் ஹிட்டானது. அப்படத்தின் வெற்றிக்கு காரணமான இயக்குநர் விக்கிரமன், இசையமைப்பாளர் எஸ்.ஏ. ராஜ்குமார், விஜய் மூவரும் மறுபடி இணையும் படம் இது. ஜனவரி 20ம் திகதி பூஜைபோட்டு முடித்துவிட்டனர். மும்பாய் அழகி ஒருவர் விஜய் ஜோடியாக நடிப்பார்.

## பானுப்பிரியா ஊக்கம்

கிருஷ்ணா என்னும் நடிகர் மலையாளப் படவுலகில் புதுமுகம். ரொம்பவும் இளையவர். அவருக்கு ஜோடி பானுப்பிரியா.

நடிகருக்கு பானுப்பிரியாவை நெருங்கக் கூச்சம். பானுப்பிரியாதான் ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்தினராம்.

நடிகை பத்மினியின் சகோதரி லலிதாவின் பேரன்தான் கிருஷ்ணா.



முரளி-சுபாஸ்ரீ
படம்-கண்டக்டர் மாப்ளே

## ஜெயா - சசிபோல

'பெரியமனுசன்' படத்தில் சத்யராஜுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்கள் அம்பிகாவும் சரளாவும். இருவருக்கும் ஒரே விதமான நகை, உடைகள் அணிவிக்கப்பட்டன. (பார்க்க சென்ற வார சினிவிசிட்) அந்த ஐடியா எப்படி வந்தது தெரியுமா? சோதனையின் போது ஜெயலலிதா வீட்டில் ஒரு புகைப்படம் மாட்டியதல்லவா. ஒரேவிதமான நகை, உடை பூட்டிக் கொண்டு ஜெயாவும் சசியும் போஸ் கொடுக்கும் படத்தைப் பார்த்தாராம் இயக்குநர் குருதனபால்.

உடனே அதே கெட்-அப்பில் அம்பிகாவுக்கும் சரளாவுக்கும் உடை, நகை பூட்டி நடிக்க வைத்துவிட்டார்.



அப்பாஸ்-அஞ்சு அரவிந்த்
படம்-ஆசைத்தம்பி

## தேவயாணி நம்பர் வன்

தேவயாணிதான் நம்பர் வன் என்கிறது கோடம்பாக்கம் வட்டாரம். ரம்பா, நக்மா எல்லாம் சேலை கட்டி நடித்தால் காணாமல் போய்விடுவார்கள். சேலை கட்டாமல் கவர்ச்சி காட்டிக் கொண்டிருந்தாலும் கொஞ்சக் காலம்தான் தாக்குப் பிடிப்பார்கள்.

தேவயாணி நீண்டகாலம் நிலைப்பார். ராதிகா, ரேவதி ஆகியோர் போல தேவயாணியிடமும் நடிப்புத் திறமை இருக்கிறது. ரம்பா கவர்ச்சியில்தான் நம்பர் வன். இளம் நடிகைகளில் நடிப்பில் நம்பர் வன் தேவயாணிதான்" என்கிறார்கள் கோடம்பாக்கம் விமர்சகர்கள்.

அஜித்-தேவயாணி நடித்த 'காதல் கோட்டை' 200 நாட்களைத் தாண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. கல்லூரி மாணவ மாணவிகள்தான் தியேட்டரை நிரம்புகிறார்களாம்.



## சரத்-குஷ்பு-ரோஜா புதிய படம் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

'மக்களாட்சி' படத்தை அரசியலை மையமாக வைத்து எடுத்தவர் ஆர்.கே.செல்வமணி. படம் சூப்பர் ஹிட்.

அந்தச் சூட்டோடு 'அரசியல்' என்ற பெயரிலேயே படம் எடுத்துக் கொண்டிருக்கிறார். மம்முட்டி நடிக்கும் 'அரசியல்' விரைவில் திரைக்கு வரப் போகிறது.

அதனையடுத்து செல்வமணி இயக்கப் போகும் படமும் அரசியல் கலந்த மசாலாதான். படத்தின் பெயர்: 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'. இதே பெயரில் இந்தியாவில் பிரபல ஆங்கிலத் தினசரி ஒன்றும் வெளிவருகிறது.

கதாநாயகன் சரத்குமார். கதாநாயகிகளாக இரண்டு நடிகைகள். இருவரும் இரண்டு இயக்குநர்களின் காதலிகள். ஒருவர்; செல்வமணியின் காதலி ரோஜா. மற்றவர்; சுந்தரின் காதலி குஷ்பு.

படத்தில் குஷ்புவுக்கு உயரதிகாரி வேடம். உளவுத்துறையின் முக்கிய அதிகாரியாக நடிக்கிறார் சரத்குமார்.

இந்தியாவில் கேரள மாநிலத்தில் நடைபெற்ற 'ராக்கெட் ஊழல்' சம்பவம்தான் படத்தின் கதைக் கரு.

இசை: யுவன் சங்கர் ராஜா. கதை, திரைக்கதை, தயாரிப்பு, இயக்கம் ஆர்.கே.செல்வமணி.

## ...ய் 'ஒன்ஸ் மோர்'

...இணைந்து புதிய ...வெளியிட்டிருந்தோம் ...டது. 'ஒன்ஸ்மோர்' ...ள் நடிக்கின்றனர். ...போகிறார்களாம். ...ன் குழந்தைகளைத் ...ஒரு இளைஞன் ...டுப்பதுதான் ...சிவாஜி ...கை

சிவாஜி நடித்து வெற்றிபெற்ற 'ராஜா' 'நீதி', 'வாணி ராணி' உட்பட பல படங்களை இயக்கியவர் சி.வி.ராஜேந்திரன். அவர்தான் இப்படத்தையும் தயாரிக்கிறார். இதற்கு முன்னர் இவர் பிரபு நடித்த 'வியட்னாம் காலனி' படத்தைத் தயாரித்தவர்.

படத்தை இயக்கப்போவது எஸ்.ஏ.சந்திரசேகர். இசை: தேவா.

## சிங்கப்பூர் பயணம்

அடிக்கடி சிங்கப்பூர் சென்று வருகிறார் விசித்ரா. கையோடு சினிமா உலகில் மார்க்கெட் இழந்த நடிகைகளையும் கூட்டிச் செல்கிறார்.

நட்சத்திர நடன நிகழ்ச்சிக்கு செல்வதாக கூறிச் செல்கிறார். சமீபத்தில் விசித்ரா குழுவினர் சிங்கப்பூர் சென்று திரும்பினார்கள். விசாரித்ததில் சிங்கப்பூரில் நடன நிகழ்ச்சி எதுவும் நடத்தியதாகத் தெரியவில்லை. அப்படியானால் அங்கே ஏன் போனார்கள்?

## பிரபு மறுப்பு

பிரபு-நக்மா நடித்த 'பெரியதம்பி' படம் கலகலப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது. மீண்டும் அதே ஜோடியை வைத்து படமெடுக்க அணுகினார்களாம். நக்மாவின் அணுகுமுறைகளால் ஏற்பட்ட கசப்பு பிரபுவிடம் மறையவில்லை. அதனால் 'நோ' சொல்லிவிட்டாராம்.

அடுத்துவரப்போகும் பிரபுவின் படம் 'மாப்பிள்ளைக் கவுண்டர்'. பிரபுவின் வழக்கமான நகைச்சுவை கலந்த படம் தான் அதுவும். 'புதையல்' படத்தில் புதையலாக அறிமுகமான சாக்ஷிதான் கதாநாயகி.

## பாரதியாக கமல்

மேக்-அப்பில் வித்தியாசம் காட்டுவது என்றால் கமலுக்கு அல்வா சாப்பிடுவது மாதிரித்தான். மகாகவி பாரதியார் போல மேக்-அப் போட்டு நடிக்க ஆசைப்படுகிறாராம் கமல். இந்த ஆண்டு அந்த ஆசையை நிறைவேற்றி விடுவேன் என்று நண்பர்களிடம் கூறியிருக்கிறாராம் கமல். பாரதி மேக் அப்பிலும் கமல் வித்தியாசம் காட்ட இருக்கிறார்.

முகப்பில் தேவயாணி அஜித்குமார் முகப்பில்



ராமராஜன்-சுகன்யா
படம்:- கோபுரதீபம்.

## தேவியின் தேவி

இந்திப்பட அதிபரை கைப்பிடித்த ஸ்ரீதேவிக்கு இன்னும் நாலு மாதத்தில் கையில் ஒரு குழந்தை.

குழந்தை ஆணா பெண்ணா என்று 'ஸ்கேன்' பண்ணிப் பார்த்தார்களாம். பெண் குழந்தைதான். பூரிப்பில் இருக்கிறார் தேவி.

## அஞ்சுவுக்கு டும் டும்

ஹீரோவுடன் டூயட் பாடி நடித்துவிட்டு பின்னர் படவாய்ப்புக்கள் இல்லாமையால் தாய்வேஷம் போட்டவர் அஞ்சு. பின்னர் கன்னடப் பட உலகுக்குச் சென்றார். அங்கு பட வாய்ப்புக்கிடைத்ததோ இல்லையோ, காதலர் கிடைத்தார்.

சமீபத்தில் காதும் காதும் வைத்ததுமாதிரி அந்தக் கன்னட நடிகரும், நடிகையும் மாலைமாற்றிக் கொண்டார்களாம்.



பிரபு-சாக்ஷி
படம்-மப்பிள்ளைக் கவுண்டர்



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளத்தை திருடும் உடை

கல்யாண வரவேற்பாகட்டும், விருந்துபசாரமாகட்டும் உங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தித் தனித்துக் காட்டவல்லது எது?

உங்கள் உடைதானே?

உடையலங்காரத்தில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் அந்த வைபவத்தில் முடிசூடா இளவரசி நீங்கள் தான்!



உடையலங்காராங்களில் தான் எத்தனை வகை? சுரிதார், சல்வார் கமீஸ், மாக்ஸி, மிடி, மினி, ஸ்கேர்ட், ஜீன்ஸ், புடவை என எத்தனை எத்தனை வகைகள்? உங்களைக் கவர்ந்த உடை எது எனக் கேட்டால் உங்க

இன்றைக்கு இளம் பெண்களின் விருப்பப்படி வேக வேகமாய் விற்பனையாகும் உடைகள் என்னென்ன?



சுரிதாரும், சல்வார் கமீஸும்.

சுரிதாருக்கும், சல்வார்கமீஸுக்கும் அதிகம் ஒன்றும் வித்தியாசம் கிடையாது. சல்வார் கொஞ்சம் லூஸாக இருக்கும்.

ளின் ஏகோபித்த வரவேற்பு சுரிதாருக்குத் தானே?

சுரிதார் வாங்க நிறைய செலவழிக்க வேண்டுமோ என எண்ணாதீர்கள். கட்டுப் பாட்டு விலையில் அழகான சுரிதார்கள் விற்கப்படுகின்றன.

வாங்கும் போது நிறத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். உங்கள் நிறத்துக்குப் பொருந்துமா எனப் பார்த்து வாங்க வேண்டியது அவசியம்.

அடுத்தது வேலைப்பாடு. முத்து, மணி, எம்ப்ரோய்டரி, கட்வேர்க், சரிகை வேலைப்பாடு, சம்க்கி மற்றும் கண்ணாடி வேலைப்பாடு எனப் பலவகை வேலைப்பாடுகளால் சுரிதாரை அழகுபடுத்தலாம்.

உதாரணமாக இளரோஜா நிறத்தில் முத்துக்கள் பதிந்த சுரிதார், அழகுக்கு அழகூட்டக்கூடியது. இளநீல நிறத்தில் எம்ப்ரோய்டரி வேலைப்பாடு செய்யப்பட்ட சுரிதார் உங்கள் இளமைக்கு மெருகூட்டக் கூடியது. கறுப்பு அல்லது சிவப்பு நிறப் பின்னணியில் பொன், வெள்ளி நிறத்தில் பிரிண்ட் செய்யப் பட்ட சுரிதார்களும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். சரிகை வேலைப்பாடு செய்யப் பட்ட வெள்ளை சுரிதார் உங்கள் அழகை மேம்படுத்தும்.

வேலைப்பாடுகளுடன் கூடிய சுரிதார் மற்றும் உயர்ரக பட்டு சுரிதார்கள் கல்யாண ரிஸப்ஷனில் அணிய ஏற்றவை.

அடுத்து உங்கள் கவனம் எங்கே தெரியுமா? சல்வார் கமீஸ்!

சல்வார் கமீஸ் வாங்கும்போது அந்த ஆடையில் உள்ள வண்ணக்கலவையைக் கவனிக்க வேண்டும். உதாரணமாக சிவப்பு சல்வாருக்கு பச்சை 'யோக்' உள்ள சிவப்பு கமீஸும், கறுப்பு அல்லது பச்சை துப்பட்டாவும் எடுப்பாக இருக்கும்.

ஒலிவ் பச்சைக்கலர் சல்வாருக்கு மஸ்டர்ட் மஞ்சள் 'யோக்' உள்ள ஒலிவ் பச்சை கமீஸும், மஞ்சளில் புள்ளி போட்ட துப்பட்டாவும் ஏற்றவை. கமீஸின் முன் பக்கம் 'அனார்க்கலி ப்ளீட்ஸ்' எனப்படும் மடிப்புக்கள் இந்த உடைக்கு அழகு சேர்க்கும். பக்கவாட்டில் தனியாக டார்க் அல்லது லைட் கலர் துணியை அடுக்கடுக்காக வைத்து 'சரி' முறையில் தைப்பதும் இந்த உடைக்கு அழகூட்டும்.

குட்டையான குர்தா ஒரு வித அழகு என்றால், நீளமான குர்தாவும் ஒரு வித அழகே. லூஸ் குர்தா பருமனாக இருப்பவர்களைக் கூட அழகாகக் காட்டும்.

## பூக்கட்டும் புன்னகை!

★ நாம் மற்றவர்களுடன் அன்புடன் பழகுவதே ஒரு கலை. இதற்குப் பணம், பொருள் தேவையில்லை. நம் உள்ளத்தில் அன்பு என்ற ஊற்று மட்டும் இருந்தால் போதும். சிலர் இயற்கையிலேயே அழகு, படிப்பு, செல்வாக்கு முதலியவற்றால் மற்றவர்களைக் கவர்ந்திருப்பர். ஆனால் இவை எதுவும் இல்லாமல் எல்லோரும் நம்மை விரும்பும்படி நடந்து கொள்வது எப்படி?

1. இதற்கு முக்கியமாகக் குற்றமற்ற சிரிப்புடன் விளங்க வேண்டும். முகத்திற்குச் சிரிப்புத்தான் அழகு. நாம் மற்றவர்களைப் பார்க்கும்போது, புன்னகையை நம் இதழ்களில் தவழவிடுவது நல்ல பலனைத்தரும்; நேசத்தை வளர்க்கும்.
2. நம்மைப் பற்றியே புகழ்ந்து பேசிக் கொண்டிருக்காமல், மற்றவர்கள் தங்கள் பிரச்சனைகளைக் கூறும்போது நாம் கவனமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும்.
3. மற்றவர்களின் குறைகளை அடிக்கடி எடுத்துக்கூறக்கூடாது. இனிமையாகப் பேசும் தன்மை எல்லோராலும் விரும்பத் தக்கது. மற்றவர்களிடம் உள்ள சிறப்பை நாம் மனந்திறந்து தாராளமாகப் புகழ வேண்டும். இதனால் அவர்கள் மகிழ்ச்சி அடைவதோடு நம்மீதும் அன்பு ஏற்படும்.



4. நாம் மற்றவர்களுக்கு மரியாதை கொடுத்துத்தான் மரியாதை பெற வேண்டும். உதாரணமாக பெருநாட்கள், பிறந்த நாட்களில் மற்றவர்களுக்கு வாழ்த்துச் சொல்வது, வெளியே சந்தித்தால் நலம் விசாரிப்பது, இவைகள் மற்றவர்களுக்கு நம்மீது நல்லெண்ணத்தை ஏற்படுத்தும்.
5. நம்மை எல்லோரும் விரும்ப தன்னடக்கம் மிக முக்கியம். தன்னடக்கமும் சிறந்ததொரு பண்பாகும்.
6. கோபத்தை அறவே ஒழிக்க வேண்டும். சிறிய விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சி வசப்படக்கூடாது. ஒரு முறை நாம் மற்றவரிடம் கோபமாகப் பேசினால் அடுத்த முறை அவர்கள் நம்மிடம் பேசத் தயங்குவார்கள்.
7. நாம் பிறருக்கு முடிந்த அளவு உதவி செய்ய வேண்டும். அந்த உதவி சிறியதாயினும் அதன்மூலம் நன்மைகள் விளையும்.
8. பெண்களாகிய நம்மை எல்லோரும் விரும்ப வீட்டை நன்கு பராமரிப்பவராக, சமையலில் கைதேர்ந்தவராக இருக்க வேண்டும். இது மற்றவர்களும் எம்மிடமிருந்து கற்றுக்கொள்ள உதவும். இதனால் மற்றவர்கள் அடிக்கடி நம்மை நாடி வருவார்கள்.

இத்தகைய குணங்களை நாம் வளர்த்துக் கொண்டோமேயானால் நம்மை எல்லோரும் விரும்புவார்கள். இதனால் நம் வாழ்க்கையில் மகிழ்ச்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது– சுகந்தினி

### சிக்கன் மஞ்சூரியன் (சைனீஸ் டிஷ்)

**தேவையான பொருட்கள்:**

புரோய்லர் கோழி– 500 கிராம் (எலும்பு நீக்கியது)
கோதுமை மாவு– 100 கிராம்
பேக்கிங் பவுடர்– 1 தேக்கரண்டி
சோள மாவு– 50 கிராம்
எண்ணெய்– தேவையான அளவு
உப்பு– தேவையான அளவு
வெங்காயம்– 100 கிராம்
பச்சை மிளகாய்– 75 கிராம்
இஞ்சி– 50 கிராம்
பூண்டு– 50 கிராம்
எலுமிச்சம்பழம்– 1
சோஸ்– அளவாக

**செய்முறை:**

கோதுமை மாவையும் பேக்கிங் பவுடரையும் சிறிது தண்ணீர்விட்டுக் கரைத்துக் கொள்ள வேண்டும். கோழி இறைச்சியை ஒரு அங்குல நீளத் துண்டுகளாக வெட்டி, கரைத்த மாவில் நன்றாகத் தோய்த்து, கொதிக்கும் எண்ணெயில் போட்டு சிவக்கப் பொரிக்கவும்.

வேறொரு வாணலியில் எண்ணெயைக் கொதிக்க வைத்து பொடியாக வெட்டிய வெங்காயம், மிளகாய், இஞ்சி, பூண்டு (பூண்டையும், இஞ்சியையும் தட்டிக் கொள்ளவும்) ஆகியவற்றைப் போட்டு வதக்கவும். அதனுடன் ஒரு தேக்கரண்டி சோஸ், ஒரு தேக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு, உப்பு ஆகியவற்றைச் சேர்க்கவும். சோளமாவை தண்ணீரில் கரைத்து ஊற்றிக் கொதிக்க விட வேண்டும். எல்லாம் சேர்த்துக் கட்டியாக வந்ததும், பொரித்த இறைச்சித் துண்டுகளை அதற்குள் கொட்டிக் கிளறவும். பின் சோற்றுடன் பரிமாறவும்.

## தினமும் பத்து நிமிடம்

அழகாய் இருக்க வேண்டும் என்று ஆசைப்படாத பெண்கள் உண்டா?

செயற்கையில் இதனை நீங்கள் உருவாக்கிக் கொண்டால் அழகுக்கு நீண்ட ஆயுள் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

அப்படியானால் இயற்கையில் எப்படி அழகாக ஜொலிப்பது?

அது ஒரே நாளில் நடக்காது. சில வழிமுறைகளைக் கையாளுங்கள்! நீங்கள் நிரந்தர ஆயுளுக்கும் அழகாகக் காட்சியளிப்பீர்கள்.

அன்றாட வாழ்க்கையில் தினசரி தண்ணீர் நிறையக் குடியுங்கள். மேனி எழிலில் தண்ணீர் முக்கிய பங்கு வகிக்கிறது.

சமையல் நேரத்தில் தினசரி ஏதாவது ஒரு சில காய்கறிகளைப் பச்சையாகவே சாப்பிடுங்கள்.

அன்றாட உணவு வகைகளில் தக்காளி, இஞ்சி, பூண்டு, புதினா, கறிவேப்பிலை, மீன், முட்டை ஆகியவைகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இரவில் பால் குடியுங்கள்.

அவ்வப்போது, தோடம்பழம், ஆப்பிள், மாதுளை, திராட்சை, செவ்வாழைப் பழங்களை ருசியுங்கள்.

மாதத்திற்கு ஒரு தடவை தலைக்கு எண்ணெய் தேய்த்து, ஊறவைத்து, சீகைக்காய் கொண்டு குளியுங்கள். தினசரி குளியலில் அவசியம் மஞ்சள்தேவை.



முடிந்த அளவுக்கு தினசரி சில உடற்பயிற்சிகளைச் செய்யுங்கள். குறைந்தது 10 நிமிடம் கூடப்போதும்.

## லேடீஸ் ஸ்பெஷல்


### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### கல்கரன் ஓயா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

க. ஆர்த்திகா,
இல.39 ஸ்ரபற் வீதி, இராகலை, கல்கரன்ஓயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


## பெரிய குடும்பம்

இந்திய அரசியல் தலைவர்களின் குடும்பங்களில் பிரதமர் தேவ கவுடாவின் குடும்பம் பெரிய குடும்பமாகும். இவருக்கு 4 மகன்கள், 2 மகள்கள், 4 மருமகள்கள், 2 மருமகன்கள் மற்றும் பேரன் பேத்திகளைக் கணக்கிட்டால் 30 பேர் உள்ளனர். சமீபத்தில் தேவ கவுடா வெளிநாட்டுக்குச் சென்றபோது இவர்கள் அனைவரையும் தன்னுடன் அழைத்துச்சென்றார். எல்லாம் அரசு செலவுதானாம். எவ்வளவு தொகை செலவானது என்பதை அறிந்த டெல்லியில் உள்ள மற்றைய கட்சித் தலைவர்கள் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்துவிட்டனர்.

இப்படியா அரசின் பணத்தைச் செலவு செய்வது? என்று கூச்சலிட்டனர். ஆனால் தேவ கவுடா எதைக் கண்டும் அசைந்து கொடுக்கவில்லை. தேவ கவுடா வீட்டில் இப்போது உறவினர் கும்பல் நிறையப் பெருகிவிட்டது. அவர்கள் வெளியேறும் போது நிறைய சூட்கேசுகளுடன் வெளியேறுவார்கள் என்று டெல்லியில் கிண்டலும் கேலியுமாகப் பேசிக் கொள்கிறார்கள்.




## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BD

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-02-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-2772, கொழும்பு.


## ...சுகமான தூக்கம்... இதமான படுக்கை

★ படுக்கச் செல்வதற்கு முன் அரைமணி நேரத்திற்கு முன்பே அன்றாட அலுவல்களின் தீவிரத்தை உங்கள் மனதில் இருந்து இறக்கி வைக்கத் தொடங்க வேண்டும்.

★ அவசர அவசரமாகப் படுக்கையில் சென்று விழ வேண்டாம். நிதானமாகச் செயற்படுங்கள். படுக்கச் செல்லும் முன்பு- உடலின் வெப்பநிலைக்குச் சமமான வெதுவெதுப்பான நீரில் குளிப்பது நல்ல ஓய்வு உணர்வையும், இதத்தையும் கொடுக்கும்.

★ சூடான பாதக்குளியலும் நல்லது. அது மூளையில் இருந்து இரத்த ஓட்டத்தைத் திருப்பி மூளையின் செயற்பாடுகளைக் குறைக்கும்.



★ மனதிலே நல்ல எண்ணங்களையும், நகைச்சுவை உணர்வையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

★ பகலில் உடல் உழைப்பில் ஈடுபட்டிருந்தீர்களானால், படுக்கையில் இருந்து கொண்டு எதையாவது படிக்கலாம். படிப்பது மனதிற்கு அமைதியைத் தரும் விஷயமாக இருக்கவேண்டும்.

★ சாதாரணமாகப் படுக்கப்போகும் நேரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் முன்பாகவே படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள். இதனால் உடலுக்கும், மனதிற்கும் நல்ல ஓய்வு கிடைக்கும்.

★ ஆழ்ந்த மூச்சை விட்டுப்பழகி, இரத்த ஓட்டத்தை ஒழுங்கு படுத்தவும், இந்தப் பயிற்சி மனதிலும், உடலிலும் ஏற்பட்ட கொந்தளிப்பை நீக்கும்.

★ படுக்கையில் நல்ல காற்றோட்டம் இருக்கும்படியும், புத்தம் புதிய குளிர்ந்த காற்று வீசும்படியும் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

★ படுக்கை, நீங்கள் தாராளமாகப் புரண்டு படுக்கவும், திரும்பவும் ஏற்ற அளவு நீள, அகலம் உடையதாக இருக்க வேண்டும். படுக்கையின் மேல் போடப்படும் மெத்தை உறுதியானதாகவோ, மிகக் கடினமாகவோ, மிக மென்மையானதாகவோ இராதபடியும் இருக்க வேண்டும். அதிக உயரமோ, கனமோ இல்லாத சிறிய தலையணையை உபயோகிக்கவும்.

## லாராவின் மகள்

உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் லாராவுக்கு சமீபத்தில் பெண் குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தைக்கு 'சிட்னி' என்ற பெயர் வைத்துள்ளனர்.



அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகர கிரிக்கெட் மைதானத்தைத் தன் வாழ்நாள் முழுக்க நினைவில் வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் லாரா தன் மகளுக்கு அந்தப் பெயரை வைத்துள்ளாராம். சிட்னி மைதானத்தில் லாரா 277 ரன்கள் அடித்திருந்தார்.

இந்த இரட்டைச் சதம் காரணமாக மேற்கிந்தியத் தீவு அணி அவுஸ்திரேலியாவுடன் ஆட்டத்தை சமன் (ட்ரோ) செய்தது. அந்தப் போட்டி மறக்க முடியாதது என்பதால் இந்தப் பெயரை வைத்திருப்பதாகக் கூறுகிறார் லாரா.

ஆனால் மேற்கிந்தியத்தீவில் இதை எல்லோரும் கிண்டல் செய்கின்றனர். "நல்ல வேளை... லாரா பாகிஸ்தானில் உள்ள பைசலாபாத்தில் இரட்டைச் சதம் அடிக்கவில்லை", என்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com





## யார் இவர்?

உலகெங்கும் வாழும் பல கோடி மக்களின் அன்புக்குப் பாத்திரமானவர் இவர். நம் நாட்டுக்கும் வந்து சென்றவர். என்ன; யார் என்று தெரிகிறதா? நன்றாகப் பாருங்கள்! விடையைச் சரிபார்க்க பக்கம் 18க்குச் செல்லுங்கள்.



## தேன் கிண்ணம்

### நீயில்லையென்றால்......

காற்றுச் சுடும்!
▫▫
விழிகளோடு
முரண்பட்டு
தூக்கம்–
வெளிநடப்புச் செய்யும்!
▫▫
உன்–
கடித வரிகளை
மேய்ந்து மேய்ந்தே....
ஆயுளில் பாதி
தேய்ந்து போகும்;
நீயில்லையென்றால்....!
▫▫
என் கவிதைகளெல்லாம்
அப்போ–
இறந்தே பிறக்கும்!
▫▫
பசியை துக்கமும்
சந்தோஷங்களை
தனிமையும்
துரத்திக்
கொண்டேயிருக்கும்!
▫▫
உன் சிரிப்புக்களை
கனவுகளாய்
சேமித்து வைத்த–
இதயம்;
அதை–
கண்ணீர்ப் பூக்களாய்
செலவு செய்யும்!
▫▫
அப்போ
சந்தோஷம் என்பது
என் கடந்து போன
சரித்திரப் பக்கங்களில்
மட்டுமே
எழுதப்பட்டிருக்கும்!
▫▫
வாழ்க்கை–
உன்
நினைவுகளாயிருக்கும்!
நெஞ்சு–
உன்
நினைவுகளோடு மட்டுமே
குடும்பம் நடத்திப்
பார்க்கும்!
▫▫
நிலா கூட–
ஒளியை
என்னைத் தவிர்த்து
பொழிவதாகவே
படும் எனக்கு!
▫▫
ஜீவிதம் தூரமாகும்!
இறப்பு மட்டும்
என்னை–
சில சென்ரிமீட்டர்
இடைவெளிகளில்
காத்துக் கிடக்கும்...!
▫▫
நீயில்லையென்றால்......
அறிவு
இரண்டும் இரண்டும்
ஆறு என்று
தப்புத் தப்பாய்
கணக்குப் போடும்!
▫▫
இன்னுமாய்
நானே எனக்கு
அந்நியமாவேன்!
சில வேளைகளில்–
எனதுபிம்பமே
என்னை
விரல் நீட்டி விசாரிக்கும்!
▫▫
இப்படி.... இப்படி.....
எதுவெதுவோ
நடந்து போகும்;
நீயில்லையென்றால்.....!

யூயெல் மப்றூக்–
அட்டாளைச்சேனை.

### நீர்க்கதீயான வாழ்க்கை

நட்சத்திரக் காடுகள்
நாசமாகிப் போயின;
நிலவும் சூரியனும்
நிஷ்டையில் வீழ்ந்தன;
எனது வானம்
ஒளிக்கிரண மொன்றுக்காக
வழிபார்த்து நிற்கிறது!
...
உன் பாசம் எனக்கு
நீர் ஊற்றவும் இல்லை;
உனது பார்வைகள் என்மீது
பூத்தூவவுமில்லை!
...
உனக்காக நான்
காதலைத் தந்தேன்;
கவிதைகள் தந்தேன்– நீ
ஏற்றுக் கொள்ளவில்லை;
எனக்காகக்
காயங்கள் தந்தாய்;
கண்ணீர் தந்தாய்;
கட்டாயப்படுத்தி எனை
ஏற்கும்படி செய்தாய்!
...
நிம்மதியாயிருந்த என்
வாழ்க்கையினூடாக– நீ
புயலாகப் பிரவேசித்தாய்!
...
உன் காதல்
பொய்யாய், கனவாய்ப்
பழங்கதையாய்ப்
போன பின்னரும்,
உன் உறவின்
தடங்களில் வீழ்ந்தழுவதால்
திரும்பி நீ வரப்போவதில்லைதான்!
...
நிரந்தர அழுகையால்
நெஞ்சிலே மூண்டெழும்
சோக வெறி
சிந்திச் சிதறும் போதெல்லாம்,
காதலையும் விதியையும்
கண்ணீரால் திட்டித் தீர்க்கிறேன்!
...
உன்னுடையதைப் போன்றதல்ல,
உண்மையான எனதன்பு!
புயலாகிப் பூகம்பமாகி– உனைப்
பலிவாங்கியிருந்திருந்தால்– உனது
நிம்மதியெல்லாம் இன்று
நடுத்தெருவில் விழுந்திருக்கும்!
...
அன்பின் அடிச்சுவட்டில்
வழிவழியாக வரும்
மௌனத்தின் கரங்களால்– உனது
அநியாயங்களையெல்லாம்
அடக்கிக் கொண்டு
அழிந்து கொண்டிருக்கிறேன்!
...
விலை மதிப்பற்ற முத்து
நீ என்று தான்
நம்பியிருந்தேன்;
அற்ப ஆசைகளுக்காக– நீ
விலைபோன பின்னர் தான்
நத்தையொன்றுக்காக– நான்
ஏமாந்ததையறிந்தேன்!
...
வசந்தம் தொலைந்து போன
வாழ்வின் வெற்றிடத்தை
எந்தப் புன்னகையால்– இனிப்
பூரணப்படுத்துவேன்?
...

செல்வி பஹீமா ஜஹான், தெமடகொல்ல, மெல்சிரிபுர.

### அவளுக்கொரு மடல்

நந்தவனமும்
அறியாத–புது
சுகந்தமே.
இந்தச் குட்டிலும்
உன்– நினைப்புத்தான்
எனக்குச் சுகமான
வருடல்.
***
மனத்தின் கனத்தை
மூச்சின் வழியாக
அனுப்பிக் கொண்டே,
உன்னுடன்
உரையாடுகின்றேன்.
***
நம் இருவர்க்கிடையிலும்
அனுமதிக்காத விதையாய்
விழுந்து–
ஆட்கொல்லி மரமாய்
வளரும்....
காதலுக்கு
உரமூட்டியது
நீயா நானா!
***
காதல் செய்வதும்
செய்யாமலிருப்பதும்
இருவர் கையில் இல்லை,
என்று நீ சொன்னதை
நீயே
மறந்து விட்டாயா?
***
அழுந்தம் என்பதை
உன்னிடமிருந்துதான்
கற்றுக்கொள்ள வேண்டும்!
சிரிப்பாய்...
பேசுவாய்...
குழைவாய்... ஆனால்,
மனதை மட்டும் மறைப்பாய்!
***
உன் நினைப்பு
நாளுக்கு நாள்
வளர்கின்றது மூங்கில்
மாதிரி;
பற்றவைக்கவும் முடியாமல்...
பிடுங்கி எறியவும்
முடியாமல்...
நான்..!
***
உனை எண்ணுகின்ற
போதெல்லாம்
அதிரினல் சுரப்பால்
எனக்குள்
ஏற்படும் மாற்றங்களை
நீ உணர்வாயா?
***
என்னையும்
தனிமையுமாய்
என்னைவொரு–விட்டாத
வாழ்க்கை
எமக்குள்...?
மௌனம் தான்
நீடிக்கின்றது!
***
இதுவரைக்கும்
காதல் பற்றிப் பேசாது
நீ காட்டும்
நிரந்தர மௌனத்தால்,
எனக்குள் நானே
சிதறிப் போகின்றேன்!
***
உன்–இறுக்கமான
இதயத்தில்
இறுகியே நான்
இறப்பதற்கு முன்
எனக்குப்
பதிலிடு..!

ஆதம்லெப்பை
லியாக்கத்ஹான்.



### காவல்

என்னை நான்
தொலைத்துவிட்டேன்...!
0–0
எங்கேயோ?
எப்போதோ?
எப்படியோ?
0–0
தொலைத்தேனா...?
தொலைக்கப்பட்டேனா...?
புரியவில்லை;
தெரியவில்லை.
0–0
என்னை மட்டுமா...?
என் ஊரை....
என் உடன்பிறப்பை...
அனைத்தையும்!
0–0



வீடு வாசலை...
மரம் செடி 'கொடி'யை...
மண்ணை– வேப்ப
மரத்து பனித்துளியை!
0–0
சந்தோஷத்தை...
வேலிச் சண்டை
கவலையை...
பனைமரத்து கள்ளை!
0–0
அனைத்தையும்
இழந்தாலும்,
நம்பிக்கை மட்டும்
லேசாய்
வழியுது!
0–0
எல்லாம்
எனக்கு
என்றோ
மீண்டும் கிடைக்குமென்று!

சுபா வரன்-கண்டி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(16.02.1997 தொடக்கம் 22.02.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன். |
| மீனம் | - சனி, கேது. |
| கன்னி | - செவ்வாய், இராகு. |
| மகரம் | - வியாழன், வெள்ளி. |

★ சந்திரன்– இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பொருள் செலவு, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, தொழில் பேறு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- முயற்சித் தடை, மனக் கசப்பு. | பி.ப. | 3 | மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், இனசனப் பகை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நோக்கம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 3 | மணி |
| சனி- மனக்கிலேசம், குடும்பப்பகை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பொருள் பேறு, தொழில் சிறப்பு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், கௌரவமிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- அந்நியர் பகை, மனக்கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பண விரயம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப | 1 | மணி |
| செவ்வாய்- பலவித பேறு, குடும்ப நன்மை. | பகல் | 12 | மணி |
| புதன்- காரியானுகூலம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 3 | மணி |
| சனி- வீண் முயற்சி, காரியானுகூலத்தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 3 | மணி |
| புதன்- மனக் குறை நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பிரயாணக் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் மந்தம், பயனற்ற செயல். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் பேறு. | பகல் | 1 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செய்தொழில் சிறப்பு. | பகல் | 11 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிடப்பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- கடன்தொல்லை நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, பலவித பேறு. | பி.ப. | 4 | மணி |
| சனி- துயர் நீங்கும், செலவு அதிகம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, பொருள் பேறு. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பி.ப. | 1 | மணி |
| புதன் - தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பணவரவுத் தடை. | பி.ப. | 3 | மணி |
| வியாழன்- குடும்ப சுகம், இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- துயர் அதிகம், வீண் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| சனி- மனக்கிலேசம், செய்தொழில் மந்தம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண் விரயம், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பிரயாணம், பொருள் வரவு. | பகல் | 11 | மணி |
| சனி- காரியசித்தி, பலவித பேறு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- புது முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, தொழில் பேறு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, காரியத்தடை. | பகல் | 12 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, இனசனப் பேறு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பகல் | 12 | மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் தொல்லை. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 3 | மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியானுகூலம், கௌரவக் குறைவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- கடன்தொல்லை நீங்கும், கௌரவம். | பகல் | 12 | மணி |
| புதன்- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- முன்னேற்றமிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- காரியத்தடை, செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| சனி- குடும்ப சுகம், பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## கற்க நீயும் வந்திடு!

கற்க நீயும்
வந்திடு!
கவலை நீங்கும்
கண்டிடு!
காலை வந்து
சேர்ந்திடு!
நூலைப் பிரித்துப்
பயின்றிடு!

மதியம் வந்து
உண்டிடு!
மாலை வந்தால்
சென்றிடு!
அள்ளி அள்ளிப்
பருகிடு!-தமிழைச்
சொல்லிச் சொல்லிப்
பழகிடு!

அறிவை அறிவைப்
பெற்றிடு!
ஆற்றல் மிகவும்
பெற்றிடு!
எறும்பைப் போல
சென்றிடு!
எது வரினும்
வென்றிடு!

–பாமா–

ஒன்றென்று கொட்டு முரசே!- அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!- இந்த
நானில மாந்தருக் கெல்லாம்.

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# புதையல் திருடன்

ஒரு நாட்டை அறிவுள்ள அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். எப்படிப்பட்ட குழப்பமான வழக்காக இருந்தாலும் அவன் எளிதாகத் தீர்ப்பு வழங்கி விடுவான்.

அந்த நாட்டில் வணிகள் ஒருவன் இருந்தான். அவன் திடீரென்று வெளியூர் செல்ல வேண்டி இருந்தது.

தான் வீட்டில் சேர்த்து வைத்த பொற்காசுகளை வீட்டில் வைத்து விட்டுச் சென்றால் திருடர்கள் திருடிவிடுவார்கள். வெளியூர் செல்லும்போது கையோடு எடுத்துச் சென்றாலும் வழியில் பறித்துக் கொள்வார்கள். 'என்ன செய்வது,' என்று வணிகன் சிந்தித்தான்.

அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

'நம் ஊரில் இருக்கும் ஒரே ஒரு அரச மரத்தடியின் கீழ் பொற்காசுகளைப் புதைத்து வைத்துவிட்டால் பாதுகாப்பாக இருக்கும். திரும்பி வந்தவுடன் எடுத்துக் கொள்ளலாம்,' என்று நினைத்தான்.

அதன்படி அன்றிரவு யாருக்கும் தெரியாமல் தன்னிடம் இருந்த பொற்காசுகளை அந்த அரசமரத்தின் வேருக்கு அடியில் புதைத்துவைத்தான்.

அதன் பிறகு அந்த வணிகன் நிம்மதியாக வெளியூர் சென்றான். அவன் சென்ற வேலை விரைவில் முடிந்துவிட்டது. எனவே ஒரு வாரத்திற்குள் தன் சொந்த ஊருக்குத் திரும்பினான்.

திரும்பி வந்தவுடனேயே பொற்காசுகளைப் புதைத்துவைத்த இடத்திற்குச் சென்று தோண்டினான். ஆனால் அங்கே ஒரு பொற்காசு கூட இருக்கவில்லை.

"ஐயோ மோசம் போய்விட்டேனே," என்று அலறியடித்தபடி நேராக அரசனிடம் ஓடினான் வணிகன்.

நடந்தவற்றை விளக்கமாக அரசனிடம் சொன்ன வணிகன்,

"அரசே! நீங்கள்தான் எப்படியாவது



நான் இழந்த பொற்காசுகளை மீட்டுத்தர வேண்டும்!" என்றான்.

அரசன் அவனை இரண்டு நாட்கள் கழித்து தன்னை வந்து பார்க்கும்படி அனுப்பி வைத்தான்.

வணிகனை அனுப்பி வைத்து விட்டு அரசன் நீண்ட நேரம் யோசனை செய்தான்.

'வணிகன் புதைத்த பொற்காசுகளை யாரும் பார்க்கவில்லை. நம் நாட்டில் இருப்பதோ ஒரே ஒரு அரச மரம். அந்த அரச மரத்தின் வேருக்கடியில் புதைத்து வைத்த புதையலை யார் திருடியிருப்பார்கள்?' என்று சிந்தித்த அரசன், தனது வீரர்களைக் கூப்பிட்டு, நாட்டு வைத்தியரை அழைத்து வருமாறு உத்தரவிட்டான்.

நாட்டு வைத்தியர் வந்ததும் அவரிடம்,

"நீர் சமீபத்தில் யாருக்காவது அரச மரத்து வேரை மருந்தாகச் சொன்னீரா?" என்று கேட்டான் அரசன்.

நாட்டு வைத்தியரும் ஆம் என்று கூறி அந்த நோயாளியின் பெயரைச் சொன்னார்.

அரசன் அந்த நோயாளியை அழைத்து விசாரித்ததும், அவன் வணிகனின் பொற்காசுகளை எடுத்ததை ஒப்புக்கொண்டு அவற்றை அரசனிடம் ஒப்படைத்தான்.

## தஜிகிஸ்தான் — வாரம் ஒரு நாடு



தலைநகர் - துஷான்பே
பரப்பு - 1,43,100 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 61 இலட்சம்
மொழி - தட்ஸிக், ரஷ்யன்
சமயம் - இஸ்லாம்
நாணயம் - ரூபிள்
தனிநபர் வருமானம் - 1050 டொலர்

**அமைவிடம்:**

ஆசியாக்கண்டத்தில் அமைந்திருக்கும் தஜிகிஸ்தான் முன்னாள் சோவியத் யூனியனோடு இணைந்திருந்தது.

**வரலாறு:**

முன்னாள் சோவியத் குடியரசு. 1991 டிசம்பரில் தனிநாடானது. 1992 நவம்பரில் பாராளுமன்றக் குடியரசு அமைப்பிற்கு மாறியது. கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களின் ஆட்சி 1993ல் ஏற்பட்டது. இஸ்லாம் தீவிரவாதிகளின் போராட்டம் தொடர்ந்து வருகிறது.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். கால்நடை வளர்ப்பு பெருகியுள்ளது. பலவகைப் பழங்கள் மற்றும் அறுபதுக்கும் மேற்பட்ட பார்லி வகைகள் பயிரிடப்படுகின்றன. சணலும் பயிராகிறது. கனிம வளமும் காணப்படுகின்றது. பெரோ கொங்கிறீட் உற்பத்தியில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

## சாள்ஸ் டார்வின்



"குரங்கிலிருந்து பிறந்தவன்தான் மனிதன்!" என்று சர்வசாதாரணமாகக் கூறுவார்கள். மனிதன் மட்டுமல்ல, உலகிலுள்ள மிருகங்கள், பறவைகள் மற்றும் மரம் செடி கொடிகள் அனைத்துமே ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றமடைந்துதான் வந்துள்ளன. இந்த உண்மையை முதன் முதலில் திட்டவட்டமாக உறுதிப்படுத்தியவர் சாள்ஸ் டார்வின். பல ஆண்டுகள் அயராது பாடுபட்டு, ஆராய்ந்து, அவர் வெளியிட்ட கோட்பாடு 'பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு' என்றழைக்கப்படுகிறது.


கண்களுக்குத் தெரியாத நுண்ணுயிர்க் கிருமிகளிலிருந்தே உயிரினங்கள் படிப்படியாக உருப்பெற்றன என்ற உண்மையை சாள்ஸ் டார்வின் 19ம் நூற்றாண்டின் மத்தியில் வெளிப்படுத்தினார். இப்பரிணாம வளர்ச்சி உடனடியாக ஏற்படுவதல்ல; பல கோடி ஆண்டுகளில் படிப்படியாக ஏற்படும் வளர்ச்சியாகும். இறுதியில் வாலில்லா-மனிதக் குரங்கிலிருந்தே முதல் மனிதன் தோன்றினான் என்பது அவருடைய கருத்து.

டார்வின் 1809ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு மருத்துவர். தன் மகனும் ஒரு மருத்துவராக வரவேண்டும் என்று விரும்பினார். இங்கிலாந்திலுள்ள எடின்பறோ மற்றும் கேம்பிரிஜ் கலாசாலைகளில் பயின்றார். ஆனால் டார்வினின் நாட்டம் இயற்கை மற்றும் புவியியல் துறைகளில்தான் சென்றது.

1831ம் ஆண்டு டிசம்பரில் ஒரு கப்பலில் உலக நாடுகளைச் சுற்றிப்பார்க்கும் வாய்ப்பு டார்வினுக்குக் கிட்டியது. சென்ற இடங்களிலெல்லாம் அந்தந்த இடங்களில் காணப்படும் உயிரினங்கள், தாவர வர்க்கங்களைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்தார். 1836 ஒக்டோபரில் நாடு திரும்பினார். தான் ஆராய்ந்து கண்ட உண்மைகளைத் தொகுத்து 'உயிரினங்களின் தோற்றம்' என்ற நூலை 1859ல் வெளியிட்டார். இவர் வெளியிட்ட கோட்பாடு, அன்றைய நிலையில் பெரும்புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டதாகக் கருதப்பட்டது.

சாள்ஸ் டார்வின் 1882, ஏப்ரல் 19ம் திகதி காலமானார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.02.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 180
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 178

பரிசுக்குரியவர்:
நர்மதா வேல்முருகு,
வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சிம்லா சரிபு, அல்- ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | எச்.எம். சம்சுல் ஹினாயா, அல்முனீறா மகளிர் மகா வித்தியாலயம், ஏறாவூர்-03. |
| ஆர். நிரோசா, ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. | செல்வி ஆ. சாமந்தி, கோட்டமுனை க.வி, மட்டக்களப்பு. |
| மு. சிவகாமி, ஹைலன்ட்ஸ் ம.ம.வி, ஹற்றன். | சூ. மதுரன், வெளிவட்ட வீதி, வவுனியா. |
| செல்வன் முகம்மது வஹ்பீக், எருக்களம்பிட்டி முஸ்லிம் ம.வி. பாலாவி. | எஸ். தர்மேந்திரா, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-14. |
| செல்வி யோகினி திருக்கணேசன், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. | எஸ். சுகந்தினி, ப/ கோணக்கலை த.வி., பசறை. |

## உலக அதிசயங்கள்

உலக அதிசயங்கள் எத்தனை என்று கேட்டால் 7 என்பீர்கள். இது சரியான பதில்தான்; ஆனால் மொத்தம் 21 உலக அதிசயங்கள் உள்ளன. (சரியான கணக்கு 18) உலக அதிசயங்களை மூன்று காலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு காலகட்டத்திற்கும் 7 என்று வகுத்துள்ளனர். அவை புராதன காலம், மத்திய காலம், தற்காலம்.

**புராதன கால அதிசயங்கள்**

கி.மு.2ம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் புராதன கால உலக அதிசயங்கள் விபரிக்கப்பட்டன. அந்தப்புராதன கால 7 அதிசயங்கள் வருமாறு:

1. காபூவில் பிரமிட் (எகிப்து)
2. பாபிலோன் தொங்கு தோட்டம் (கிரேக்கம்)
3. ஜூப்பிட்டர் சிலை (கிரேக்கம்)
4. எபிசஸ் அர்டிமிஸ் தேவாலயம் (துருக்கி)
5. ஹாலிகர் நஸ்ஸார் கல்லறை (துருக்கி)
6. ரோட்ஸ் பேருருவச் சிலை (எகிப்து)
7. அலெக்ஸாந்திரியா கலங்கரை விளக்கம் (எகிப்து)



**மத்திய கால அதிசயங்கள்.**

1. கொலோசியம் கேளிக்கை அரங்கு (ரோம்)
2. அலெக்ஸாந்திரியாவின் குகைகள்-சுரங்கப்பாதைகள் (எகிப்து)
3. சீனப் பெருஞ்சுவர் (சீனா)
4. கற்களால் ஆன வட்டங்கள் (இங்கிலாந்து)
5. போரோஸிலின் கோபுரம் (சீனா)
6. பைஸா நகர சாய்ந்த கோபுரம் (இத்தாலி)
7. ஹசியா-சோபியா அருங்காட்சியகம் (துருக்கி)


**தற்கால அதிசயங்கள்.**

1. எகிப்தின் பிரமிட்கள் (புராதன காலம்)
2. துருக்கியிலுள்ள ஹசியா-சோபியா அருங்காட்சியகம் (மத்திய காலம்)
3. இத்தாலியில் உள்ள பைஸா நகர சாய்ந்த கோபுரம் (மத்திய காலம்)

இம்மூன்றும் இன்னமும் அழியாமல் இருப்பதால் தற்கால உலக அதிசயங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் உள்ள கற்களால் ஆன வட்டங்கள் (மத்திய காலம்) இன்னமும் அழியாமல் உள்ளது. ஆனால் இதை தற்கால அதிசயங்களில் சேர்க்கவில்லை. மற்றவை எல்லாம் அழிந்துவிட்டன.

4. ஆக்ராவில் உள்ள தாஜ்மஹால் (இந்தியா)
5. வோஷிங்டன் நினைவு மண்டபம் (அமெரிக்கா)
6. பாரிஸ் ஈஃபிள் கோபுரம் (ஃபிரான்ஸ்)
7. எம்பையர் ஸ்டேட் கட்டடம் (அமெரிக்கா)

## அதிசயமீன்கள்



ஆழ்கடலில் வசிக்கும் 'போட்டோ கோரினஸ்' என்ற மீன்களில் பெண்மீனைவிட ஆண் மீன் சிறியது. பெண் மீன் போகுமிடமெல்லாம் ஆண் மீனும் ஒட்டிக் கொண்டே செல்லும்.



ஆபிரிக்க கடல்களில் வாழும் 'சிக்லிட்' என்ற வகை மீன்களில் பெண் மீன், தான் இடும் முட்டைகளைத் தனது வாய்க்குள் வைத்துக்கொண்டு குஞ்சு பொரிக்கும். அந்தச் சின்ன மீன்களை தண்ணீரில் நீந்த வைத்துப் பார்க்கும். ஏதாவது ஆபத்து என்றால் அந்த மீன்களை வாய்க்குள் இழுத்துக் கொள்ளும். ஆபத்து இல்லையென்றுதெரிந்த பின்னர் தண்ணீருக்குள் விட்டுவிடும்.



கடல் குதிரைகளின் இனவிருத்தி முறை வித்தியாசமானது. இந்த மீன்களில் பெண் மீன் இடும் முட்டைகளை, ஆண் மீன் தன் வயிற்றில் உள்ள ஒரு பையில் வைத்து அந்த முட்டைகளை அடைகாக்கிறது. குஞ்சு பொரிக்கும்போது குஞ்சுகளுக்கு ஆண்மீன்தான் அம்மா.

## சென்றவாரம்

கணேஷ் விசாரிக்கப்படுகிறான்.
தான் பார்த்ததை விபரிக்கிறான்.
ஏ.எஸ்.பியிடம் அனுமதி பெற்று
எதிர்க்கடையிலிருந்து ஃபோனில்
அனிதாவிடம் தொடர்பு கொள்கிறான்.
பாஸ்கர் கொலையானதை அறிந்த
அனிதா மிகவும் பயப்படுகிறாள்.
கணேஷிடம் 'எல்லாவற்றையும்' சொல்லி விடுவதாகக் கூறுகிறாள்.
மீண்டும் விசாரணைக்கு அழைக்கப் படுகிறான் கணேஷ். அங்கே இன்ஸ்பெக்டர் ராஜேஷ், விசாரணையில், பாஸ்கரை கணேஷ் கொலை செய்யவில்லையெனத் தெரியவே விடுவிக்கப்படுகிறான்.
கணேஷ் தன் காரில் விரைந்து வஸந்த் விஹாரை அடைந்தான்

அங்கே........

# அனிதா இளம் மனைவி

14

நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன்

**சுஜாதா**



"மீனாட்சி!"
"ராம்!"
"ஹலோ!"

-என்று மூன்று விதமாகக் கூப்பிட்டுப் பார்த்தான். பதில் கிடைக்கவில்லை. உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

"மோனிக்கா!"

'ம்ஹூம்!'

மாடிப்படிகளில் நிதானமாக ஏறினான். மற்றொரு மாடி. மற்றோர் அறை சேச்சே, அப்படி நினைக்காதே! "அனிதா, அனிதா!"

அனிதாவின் அறைக்கதவு மூடியிருந்தது. விரல்களால் சன்னமாகத் தட்டினான்.

மறுபடி தட்டினான். கதவு திறந்து கொண்டது, தட்டலின் வேகத்தால். திரைகளை விலக்கி உள்ளே சென்றான்.

தப்பு, தப்பு நடந்திருக்கிறது இங்கே. அறையில் ஏதும் சேதமோ சிதறலோ இல்லை. எப்பொழுதும் போல் அமைந்திருக்கும் பொருள்கள் எப்பொழுதும் போல் இருந்தன. சோபா, படுக்கை, டிரெஸ்ஸிங் டேபிள், அதில் இருந்த மாக்ஸ் ஃபாக்டர், லிப்ஸ்டிக், அழகு சாதனங்கள், எல்லாம். ஆனால், அருகில் இருந்த டெலிபோன் மட்டும் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அனிதா இல்லை.

காலியாயிருந்த வஸந்த் விஹார் வீட்டின் நடுவில் நின்று சற்று நிதானமாக யோசித்தான் கணேஷ். முதலில் ஷர்மா, அப்புறம் பாஸ்கர், அப்புறம் அனிதாவா?

இல்லை இல்லை. அனிதா இருக்கிறாள். நிச்சயம் இருக்கிறாள். எங்கே இருக்கிறாள்? அந்த ஊசலாடும் டெலிஃபோன் என்ன சொல்கிறது. எங்கே தேடுவது அவளை- அவள் என்னிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்றாளே, என்ன சொல்ல நினைத்தாள். கணேஷ் நடந்தான்.

கார் கதவு சாத்தப்படும் சப்தம் கேட்டது. அவன் இதயத்துடிப்பு அதிகமாயிற்று. வாசலை நோக்கி நடந்தான்.

"ஐ ஷுட் ஹேவ் நோன் பெட்டர் வித் எ கர்ல் லைக் யூ...." என்ற மெட்டு உள்ளே வந்தது. உடன் மோனிக்கா கையில் கார் சாவியை உயரப் பிடித்துக் கொண்டு வந்தாள். அவர்கள் மோதிக் கொள்ளவில்லை. "கணேஷ்" என்றாள் சந்தோஷம் கலந்த ஆச்சரியத்துடன். "நான் உன்னைத் தேடிக்கொண்டு அங்கே சென்றேன்."

கணேஷ் சொன்னான்: "மோனிக்கா, பாஸ்கர் இறந்து விட்டான்."

"வாட்!" என்றாள். மிக உண்மையான அச்சம் கலந்த வாட்.

"கொலை செய்யப்பட்டு இறந்திருக்கிறான், அனிதாவைக் காணவில்லை."

"இரு...இரு..... மெல்லச் சொல் கணேஷ். என்ன நடந்தது?"

கணேஷ் நடந்ததைச் சொன்னான், "பாஸ்கர் பாஸ்கர் என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன். பாஸ்கர் நீக்கப்பட்டு விட்டான். அனிதா என்னை உடனே வரும்படி ஃபோன் செய்தாள். சற்றுத் தாமதமாகிவிட்டது. வந்து பார்க்கிறேன், காணவில்லை."

மோனிக்கா எதிரில் போய் உட்கார்ந்தாள். அவள் கண்களில் பயம் தெரிந்தது. நகத்தைக் கடிக்க ஆரம்பித்தாள்.

"வீடு திறந்திருந்ததா?" என்று கேட்டாள்.

"ஆம்."

"இரு. மீனாட்சி, மீனாட்சி!" என்று கூப்பிட்டாள். இருவரும் உள்நோக்கிக் காத்திருந்தார்கள். கடிகாரம் இனிமையாக மணியடித்தது. ஒன்பதா? பதில் கிடைக்கவில்லை.

"மீனாட்சி அவுட் ஹவுஸில் இருப்பாள். இரு பார்த்துவிட்டு வருகிறேன்," என்று கிளம்பினாள்.

கிளம்பியவள் பாதியில் நின்று விட்டாள். "நீயும் கூடவா. எனக்குப் பயமாக இருக்கிறது."

"ஐம் நாட் இன் எ மூட் டு ஸி எனி மோர் பாடிஸ்."

"கணேஷ்! அனிதாவுக்கு ஏதாவது ஆகியிருக்கும் என்று நினைக்கிறாயா?"

"எனக்கு ஒன்றுமே சொல்லத் தெரியவில்லை, மோனிக்கா!"

"அப்படிக் கத்தாதே!" என்றாள். "கணேஷ், இந்த நிமிஷத்திலிருந்து நான் உன்னுடன் வந்து விடுகிறேன். இந்த வீட்டில் நான் இருக்கமாட்டேன். சாப்பாட்டுக்கு இரண்டு ஸ்லைஸ் ப்ரெட் கொடு. தூங்க ஒரு பெட்ஷீட் கொடு. போதும். நான் உன்னுடன் வந்து விடுகிறேன்."

"அதைப்பற்றி அப்புறம் யோசிக்கலாம். இப்போது அனிதாவைக் கண்டுபிடிக்க வேண்டும்."

"இந்த இரவிலா?"

"ஆம்."

திடுப்பென ஓர் அலறல் கேட்டது. மோனிக்கா கணேஷின் அருகில் வந்து நின்று கொண்டாள். "கணேஷ், என்னை விட்டுவிடாதே....."

மீனாட்சி தன் முகத்தைப்புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டு வந்தாள். அவர்களை அருகருகே பார்த்ததும் தயங்கினாள்.

"மீனாட்சி, அனிதா எங்கே?" என்று இருவரும் கேட்டார்கள்.

"மாடியில் இருக்கிறார்கள்," என்றாள்.

"மாடியில் இல்லை."

"வெளியில் எங்கேயாவது சென்றிருப்பார்கள்."

"இது என்ன பதில் மீனாட்சி? நீ அவள் போவதைப் பார்த்தாயா?"

"நான் பார்க்கவில்லை மிஸ்ஸி."

"நேற்று அல்லது இன்று காலை வெளியில் செல்லும் போது பார்த்தாயா?"

"நேற்றுப் பார்த்தேன்."

"தனியாகச் சென்றாளா?"

"இல்லை. பாஸ்கர் அய்யாவுடன் சென்றார்கள். இப்பொழுதுகூட பாஸ்கருடன் தான் போயிருக்க வேண்டும்."

அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். மோனிக்கா ஆங்கிலத்தில், "கணேஷ் நான் அனிதாவை வெறுத்தேன். ஆனால் அவள் இறக்க வேண்டும் என்கிற அளவுக்கு இல்லை." என்றாள்.

"அவள் இறக்கவில்லை," என்றான் கணேஷ் அழுத்தமாக. கொஞ்சம் யோசித்து, "இதுவரை...."என்று சேர்த்துக்கொண்டான்.

"மீனாட்சி நீ வாசலில் இரு. ராம் எங்கே?"

"ராம் டீ சாப்பிடப் போயிருப்பான்."

"நீ வெளியில் இரு."

"என்ன, ஏதாவது தப்பாக நிகழ்ந்து விட்டதா கணேஷ் பாபு?"

"அப்புறம் சொல்கிறேன். மோனிக்கா உன் அப்பாவின் அறையையும் அனிதாவின் அறையையும் மறுபடி பார்க்க வேண்டும். உன் அப்பாவின் அந்தரங்க வாழ்க்கையில் இருக்கிறது சூட்சுமம்."

"அனிதாவை எப்படிக் கண்டுபிடிப்பது?"

"எனக்குத் தலைகால் புரியவில்லை."

"கணேஷ், பாஸ்கர் இறந்துவிட்டானா?"

"சத்தியமாக!"

"எப்படி?"

"சொல்கிறேன். முதலில் உன் அப்பாவின் அறையைத் திறக்கிறாயா? வருகிறாயா?"

"வருகிறேன் வருகிறேன்" என்று அவனுடன் ஒட்டிக்கொண்டாள்.

கணேஷ் அவள் இதயத் துடிப்பைத் தன் முதுகில் உணர்ந்தான். இருவரும் மாடிப்படி ஏறிச் சென்றார்கள்.

ஷர்மாவின் அறை சென்ற தடவை பார்த்த நிலையிலேயே இருந்தது. அதே மேஜை, அதே காகிதங்கள், அதே புகைப் படங்கள், செய்தித்தாள்கள், தூசி.

கணேஷ் அந்தக் காகிதங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தான். குப்பைக் கூடைக்குள் கசங்கி இருந்த காகிதங்களையெல்லாம் சிரத்தையாகப் பிரித்துப் பார்த்தான்.

'ஆக்ஷன் சிட்ஸ் ஹுண்டிஸ் டெபாஸிட்ஸ் அண்ட் ஸேவிங்ஸ் ஸ்கீம்,' என்று ஒரு காகிதம் சொன்னது.

'கமிஷனர் ஆஃப் இன்கம்டாக்ஸ், ஸப்ஜெக்ட் இன்கம்டாக்ஸ் ரிடர்ன் ஃபர் தி ஃபினான்ஷியல் இயர் 69-7....டியர்..ஸார்....

'ரவி, பேப்பர் போர்ட்ஸ், அவென்யூ ரோட், பெங்களூர்'- என்கிற கம்பெனியின் கடிதம், தொடர்பில்லாத காகிதத் துண்டுகள்.

கணேஷ் மேஜையின் இழுப்பறைகளைத் தோண்டினான். அலாரம் கெடிகாரத்தைக் குலுக்கிப் பார்த்தான். கார்ப்பெட்டைத் தூக்கிப் பார்த்தான். நாற்காலிகளை நகர்த்திப் பார்த்தான். சுவரில் படங்களைச் சாய்த்துப் பார்த்தான்.

நடுவில் வந்து நின்று கொண்டு வெற்றுப் பார்வை பார்த்தான்.

"என்ன தேடுகிறாய்?"

"எனக்கே தெரியவில்லை."

அந்த இன்கம்டாக்ஸ் கடிதத்தைப் பார்த்துக் கொண்டே, "உன் அப்பா அத்தனை பணம் எப்படிச் சேர்த்தார் மோனிக்கா?" என்று கேட்டான்.

"சம்பாதித்தார்," என்றாள்.

"பிரகாசமான பதில்! எப்படிச் சம்பாதித்தார்?"

"பிஸினஸ் எக்ஸ்போர்ட் இம்போர்ட், டெக்ஸ்டைல்ஸ் ரா மெட்டீரியல். லெட்டர் ஹெட் கூட இருக்குமே. 'காண்டினெண்ட்டல் காப்பரேஷன்' என்று பெயர். கனாட் ப்ளேஸில் ஆபிஸ் இருந்தது."

"கள்ளக் கடத்தல் ஏதாவது செய்தாரா?"

"கிடையாது- எனக்குத் தெரிந்தவரை. ஏன்?"

"விரோதத்துக்கு சாக்குத் தேடுகிறேன். அகப்படவில்லை."

கணேஷ் சுவாரஸ்யமில்லாமல் மேஜை மேலிருந்த செய்தித் தாள்களை உதறிப் பார்த்தான். அவைகளைத் தள்ளிக் கொண்டே வந்தான்.

சட்டென்று நின்றான். ஒரு செய்தித்தாள் அவனைக் கவர்ந்தது. அதன் முதல் பக்கத்தில் ஒரு சிறிய நீண்ட சதுர அளவுக்கு ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்டு ஓட்டையாக இருந்தது. முதற் பக்கத்தில் வியட்னாம் போர் பற்றிய செய்தி ஒன்று பாதியில் வெட்டப்பட்டு இருந்தது. அந்தச் செய்தித் தாளை தேதி பார்த்து மடக்கிப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

"பக்கத்து வீட்டில் டைம்ஸ் அஃப் இண்டியா வாங்குகிறார்களா?"

"பக்கத்து வீடு அரை ஃபர்லாங்கில் இருக்கிறது."

"சரி, நான் வீட்டுக்குப் போகிறேன்." என்றான் கணேஷ்.

"நான்?"

"நீயும் வருகிறாயா?"

"என்னால் இங்கே தனியாகத் தங்க முடியாது. நான் தரையில் படுத்துக் கொள்கிறேன். உன்னுடன் வந்து விடுகிறேன்."

"நான்தான் தரையில் படுத்துக்கொள்ள வேண்டிவரும். வீட்டை இப்படியே விட்டுவிட்டுப் போவதா?"

"மீனாட்சி இருக்கிறாள். ராம் இருக்கிறான். மேலும் இந்த வீடு எக்கேடு கெட்டுப் போகட்டும். எனக்கென்ன இதில்? சாவின் நிழல் இருக்கிறது. நான் தாங்க மாட்டேன்? கணேஷ், அடுத்தது நானா?"

"புரியவில்லை."

"அப்பா, பாஸ்கர், அனிதா. அப்புறம் நானா?"

"பயப்படாதே! வா."

தன் வீட்டுக்கு வந்ததும் மாடிக்குச் சென்று கதவைத் தட்டினான் கணேஷ். மாடியில் வசிக்கிறவர் ராஜகோபால் என்பவர். நல்ல பட்சி. அவர் உண்டு சுப்ர பாதம் உண்டு. அறுபது மீட்டரில் மெட்றாஸ் வானொலி உண்டு என்று இருப்பவர்.

ராஜகோபால் திறந்தார், பனியன், தோளில் துண்டு. பின்னால் ரேடியோவில் எம்.டி.ராமநாதன் அதல பாதாளத்தில் பாடிக்கொண்டிருந்தார்.

"கணேசா! என்ன இந்த அர்த்த ராத்திரியிலே? யார் குட்டி?"

"என் க்ளையண்ட் ஸார். ஸாரி ஸார். நீங்கள் டைம்ஸ்தானே வாங்குகிறீர்கள்?"

"ஆமாம்."

"5ம் தேதி பேப்பர் வேண்டும்."

"நேற்று ராத்திரி உங்க ரூமில் அடிதடியாமே?" என்றார் மோனிக்காவைப் பார்த்துக்கொண்டு. அவருக்கு மோனிக்காவைப் பிடிக்கவில்லை. அர்த்த ராத்திரியில் இப்படி ஒரு பெண், ஆண்பிள்ளை போல் சொக்காய் போட்டுக் கொண்டு....

"கட்சிக்காரன் பணம் கொடுக்க மாட்டேன் என்றான் ஸார். அதான் தகறார். அதற்காகத்தான் இந்த ஸோலோ வேலை வேண்டாம் என்று பார்க்கிறேன். ஒரு கம்பெனிக்கு லீகல் அட்வைஸர் கேட்டிருக்கிறார்கள். அதற்கான விளம்பரம் 5ம் தேதி பேப்பரில் வந்திருந்ததாம். போட்டும் பார்க்கலாம் என்று ....5ம் தேதி பேப்பர் இருக்கிறதா? ஹிந்துஸ்தான் டைம்ஸ். நான் பேட்ரியட் வாங்குகிறேன்....

"தரச் சொல்கிறேன். விஜி!"

தன் அறைக்கு வந்ததும் மேஜையில் அந்தப் பேப்பரை வைத்தான். அவன் தோளருகே மோனிக்கா எட்டிப் பார்த்துக் கொண்டிருக்க, ஷர்மாவின் அறையிலிருந்து தான் கொண்டு வந்த பக்கத்தின் வெட்டப் பட்ட பகுதியில் என்ன அச்சாகி இருக்கிறது என்று பார்த்தான்.

வரி விளம்பரம் அது. ரியல் எஸ்டேட் என்கிற தலைப்பின் கீழ்-

'நவீன மூன்று பெட்ரூம் பங்களா.

ஷாத்ரா. ப்ளிந்த் பரப்பு 2400 சதுர அடி. வெளிப்பரப்பு 4200. சமீப கட்டிடம். உடனே தயார் விலைக்கு. காண்டாக்ட்; சுந்தர் ஏஜென்ஸில் 440816.'

கணேஷ் டெலிஃபோனை எடுத்து 440816'ஐக் கூப்பிட்டான். வெகு நேரம் அடித்துக்கொண்டிருந்தது. விரக்தியுடன் வைத்தான். மோனிக்கா அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"என்ன விளம்பரம் இது?"

"வீட்டு விளம்பரம். ஷாத்ராவில் இருக்கும் வீடு. உன் அப்பாவுக்கு ஷாத்ராவில் ஏதாவது வீடு இருந்ததா?"

"கிடையாதே?"

கணேஷ் சற்று யோசித்தான். உடனே அனிதாவின் வீட்டுக்கு ஃபோன் செய்தான். ம் ம் ம் என்று 'என்கேஜ்ட்' தொனிதான் கேட்டது. டெலிஃபோன் கீழே ஊசலாடிக் கொண்டிருக்க அப்படியே அதைத் திருப்பி வைக்காமல் வந்து விட்டேனே என்று தன்னைச் சபித்துக் கொண்டான்.

"வீட்டில் ஒருவரும் இல்லையே!" என்றான் சந்தர்ப்பமாக.

"கணேஷ்! அனிதாவுக்காக மிகவும் கவலைப்படுகிறாய் நீ?" என்றாள் மோனிக்கா.

"ஆம், அவளுக்கு என்ன ஆயிற்றோ? ஏன், நீ கவலைப்படவில்லையா? என்னதான் அவளை நீ வெறுத்தாலும் அடிப்படையில் அவள் நல்லவள்...."

"நான் உனக்காகக் கவலைப்படுகிறேன்."

கணேஷ் மௌனமாக இருந்தான். மேலே என்ன செய்யலாம்? அந்த வரி விளம்பரத்துக்கு என்ன அர்த்தம்? ஷர்மாவின் அறையில் இருந்த செய்தித் தாளில் வெட்டி எடுக்கப்பட்ட விளம்பரம் வீடு விற்கும் விளம்பரம். விசாரிக்க வேண்டும். நாளைக் காலைதான் தெரியும். அந்த ஏஜென்ஸி திறக்க வேண்டும். அதுவரை....

"வி வெய்ட்," என்றான் கணேஷ்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே. கோமதயாளன்.
வயது: 18
முகவரி: சென்கூம்ஸ் தோட்டம், தலவாக்கலை.
பொழுது போக்கு: உதைபந்து, பத்திரிகை.



பெயர்: எம். றில்வான்.
வயது: 19
முகவரி: 70/2, அரபு வீதி, பேருவளை.
பொழுதுபோக்கு: வழமையானவை.




பெயர்: எம். உதயணன்.
வயது: 26
முகவரி: POST FACH-3218, 5200 BRUGG, SWITZERLAND.
பொழுது போக்கு: கிரிக்கெட், புத்தகம்.



பெயர்: எல். லுகினா.
வயது: 19
முகவரி: 58/3, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். பஸ்லி.
வயது: 22
முகவரி: 372, அக்பர் ரவுன், வத்தளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம். அலி.
வயது: 24
முகவரி: P.O.BOX-946, DAHARAN, K.S.A.,
பொழுதுபோக்கு: பேனாநட்பு, பத்திரிகை.

பெயர்: எம். நஸார்.
வயது: 20
முகவரி: 373/1, அல்-ஹிலா வீதி, சாய்ந்தமருது-11, கல்முனை.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். அனஸ்.
வயது: 20
முகவரி: 733, மல்வாஹின்ன, அக்குறணை.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: ஆர். குமார்.
வயது: 19
முகவரி: 141, பெர்குஸன் வீதி, கொழும்பு -15.
பொழுது போக்கு: ரீ.வி., கிரிக்கெட்.

பெயர்: ஏ. நாதன்.
வயது: 19
முகவரி: 7, எஸ்.கே.வி.டிவிஷன், பிட்டகந்த, மாத்தளை.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: டி. ஜீவராஜ்.
வயது: 35
முகவரி: 257, CAMROSE AVE, EDGWARE, MIDDX-HA 8 6AH, U.K.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, ரீவி.

பெயர்: றிஸ்வி ஜே. ஆப்தீன்.
வயது: 25
முகவரி: 27, நுவரெலியா வீதி, கம்பளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

www.padippakam.com



# தூக்கு மேடைக் குறிப்பு 16

**ஜூலிஸ் பூசிக்**

**இதுவரை —**

செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.

ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார். தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார். அவரது மனைவியும் கைதாகிறார். பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.

அவர் இறந்து விட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது. பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.

அவளை மட்டும் போலந்துக்கு கடின வேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப்போகிறார்கள். சிறையில் சித்திரவதைகள் மத்தியில் உறுதியோடு தாக்குப் பிடித்தவர்களைப் பற்றி விபரித்த பூசிக், சிறை அதிகாரிகள் பற்றியும் விபரிக்கிறார்.

அவர்களது முரண்பாடான குணங்களை சுவாரசியமாகச் சொல்கிறார்.

இனி....

இங்கு ஒரே ஒரு அப்பாஸ் கொரிபாதான் உண்டு. ஆனால், வேறு அச்சுகளில் வார்க்கப்பட்ட மற்றவர்கள் அவருக்கு எவ்விதத்திலும் குறையாமல் சேவை செய்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் பற்றிச் சித்தரிக்க நான் விரும்பினேன். ஆனால் சிலமணி அவகாசம் தான் இருக்கிறது என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இவ்வளவு காலம் வாழ்ந்த வாழ்க்கையின் கீதம் இவ்வளவு சுருக்கமாகப் பாடப்படுகிறது." ஆகவே, இன்னும் சில பெயர்களைக் குறிப்பிட மட்டுமே-நேரம் இருக்கிறது. அநேகரில் ஒரு சில உதாரணங்களை மட்டுமே-நினைவில் வைக்கவேண்டிய பலரில் சிலரை மட்டுமே-எழுத முடியும்.

**'ரெனக்'-பெயர் லோபைப் டெரிங்கல்,** கஷ்டப்பட்டு உழைப்பவன், கோபக்காரன், தியாக குணம் படைத்தவன். பெட்செக் கட்டிடத்தின் சரித்திரத்துடனும், அதில் நாங்கள் நடத்திய போராட்ட வரலாற்றுடனும் நிறையச் சம்பந்தப்பட்டிருப்பவன். இவனைப் போலத்தான் இவனுடைய இணைபிரியாத, நல்ல மனமுள்ள நண்பன் ஜோபெர் வீடுவும்.

**டாக்டர் மிலோஷ்நெட்வெட்:-** வசீகரமான இளைஞன். குணசாலி. சிறைப்பட்ட தோழர்களுக்கு தினசரி உதவியதற்காக, தன் உயிரையே இழந்தான்.

**ஆர்னாஸ்ட் லாரென்ஸ்-** இவர் தன்தோழர்களைக் காட்டிக் கொடுக்க மறுத்ததற்காக இவருடைய மனைவி தூக்கில் ஏற்றப்பட்டாள். 400-ம் நம்பர் ஏவல் கைதிகளையும், கூட்டு அமைப்பு முழுவதையும் காப்பாற்றும் பொருட்டு ஒரு வருடத்திற்குப் பிறகு இவர் தன் உயிரை அர்ப்பணித்தார்.

**வாஷெக் ரெஸ்கு-** அபூர்வமான ஹாஸ்யப் பேச்சுக்காரர், இவருடைய ஹாஸ்யத்தை அழிக்கவே முடியவில்லை.

**அன்னி விகோவா-** வாய் பேசாமல் விசுவாசத்துடன் வேலை செய்தாள். இராணுவச்சட்டம் அமுல் நடந்தபோது கொல்லப்பட்டாள்.

**ஸ்பிரின்ஜர்-**புத்திசாலி; எப்போதும் சிரித்த முகம். 'லைப்ரரியன்' என்று பெயர். தன் அவசிய காரியத்தைச் செய்ய எப்போதுமே ஏதாவது ஒரு புது வழியைக் கண்டு பிடித்துவிடுவார்.

**பிலெக்-**அழகிய இந்த இளங் காளை.....

இவையெல்லாம் வெறும் உதாரணங்கள்; பெரியவர்களோ, சிறியவர்களோ, நிஜமனிதர்கள்: வெறும் உருவங்கள் அல்ல.

## ஜூன் 9,1943

என் அறைக்கு முன், வெளிச் சுவரில் ஒரு 'பெல்ட்' தொங்குகிறது. அது என்னுடையதுதான். விரைவில் என்னை ஏற்றிச் செல்ல, வண்டி தயாராக நிற்கும் என்பதற்கு அடையாளம். இரவில் எந்த நேரத்திலாவது என்னை இவ்விடத்திலிருந்து கிளப்பி, வழக்கு விசாரணைக்காக ஜெர்மனிக்கு அனுப்புவார்கள்.

என் வாழ்க்கையின் கடைசிப்பருக்கையை, நேரம் கடித்துச் சாப்பிடுகிறது. பான்கிராப்ட்ஸ் சிறையில் நான் வாழ்ந்த நானூற்றுப் பதினொரு நாட்கள் இருக்கின்றன? எப்படிப்பட்ட நாட்கள்? அவற்றை நான் எங்கு கழிப்பேன்?

வேறு இடத்தில் எனக்கு எழுதச் சந்தர்ப்பமே அநேகமாகக் கிடைக்காது. ஆகவே இதுதான் என் கடைசி மரண வாக்குமூலம். சரித்திரத்தின் ஒரு சிறு பகுதியைக் கூறுகிறேன். இந்தச் சிறு பகுதியைப் பற்றி அறிந்த சாக்ஷிகளில் நான் ஒருவன் மட்டுமே தற்போது உயிருடன் இருக்கிறேன். நான் கடைசிச் சாக்ஷி.

**1941,** பிப்ரவரி மாதத்தில், செக்கோஸ்லாவாக்கியா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி முழுவதையும் அவர்கள் கைது செய்தனர்.

நாங்கள் கைது ஆக நேர்ந்தால் உடனே அடுத்தபடியாகத் தலைமை வகிக்கத் தயாராகத் 'தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இரண்டாம் அணித் தலைவர்களும் அப்போதே கைது செய்யப்பட்டனர்.

இத்தகைய எதிர்பாராத பேரிடி, எப்படித் திடீரென்று விழுந்தது என்பதை இதுவரை சரியாகப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. கெஸ்டாபோ அதிகாரிகளைக் கைது செய்து, விவரத்தைக் கக்கும்படி செய்கிறபோது, ஒரு வேளை அது முழுவதும் தெளிவாகும். பெட்செக் கட்டிடத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஏவல் கைதி என்ற முறையில், அந்த இரகசியத்தை அறிய முயன்றேன். ஆனால் முயற்சி பலிக்கவில்லை.

எதிரியின் உளவு வேலைதான் காரணம் என்றாலும், நம் தோழர்களின் அஜாக்கிரதையும் அதற்குக் காரணமாகும். இரண்டு வருடங்கள் வெற்றிகரமாகத் தலைமறைவு வாழக்கையை நடத்தியதால், நம் தோழர்கள் தங்கள் உஷார் பார்வையை மங்க விட்டுவிட்டனர்.

நம் இரகசிய இயக்கம் மிகப் பெரிதாக விரிந்து விட்டது; புதிய ஊழியர்கள் ஏராளமாக இயக்கத்துக்குள் வந்து சேர்ந்தனர்.

முதல் அணிக்கு ஏதாவது நேர்ந்தால், உடனே அதற்குப் பதிலாக இயங்குவதற்கு அவசியமான மேலதிகத் தோழர்களும் கட்சிக்குள் இழுக்கப்பட்டுவிட்டனர். 'செல்'களின் அமைப்பு, சரியாகக் கட்டுப்பாடு செய்ய முடியாத அளவுக்குச் சிக்கலாகி விட்டது.

கட்சி மத்தியக் கமிட்டியைப் பிடிக்க, நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே திட்டமிட்டு, எதிரி ஜாக்கிரதையாக ஆயத்தமாகி வந்திருந்தான் என்பதும், அவன் சோவியத் யூனியன் மேல் பாயத் தயாராக இருக்கும் சமயத்தில், தன் திட்டத்தை நிறைவேற்றி கட்சி மத்தியக் கமிட்டிபேரில் பாய்ந்தான் என்பதும் தெளிவு.

எங்களில் எத்தனை பேரை அவன் மடக்கிச் சிக்க வைத்தான் என்பது முதலில் எனக்குத் தெரியாது. யார் யார் அகப்பட்டனர் என்பது விளங்கவில்லை. ஆகவே அகப்படாமல் மிஞ்சியவர்கள் திட்டப்படி என்னுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வார்கள். என்று நினைத்து, நான் காத்திருந்தேன். ஆனால் நான் எதிர்பார்த்தபடி எந்தத் தோழரும் என்னுடன் தொடர்பு கொள்ள வரவில்லை. ஒருமாதம் கழிந்தபிறகு, சேதம் அசாதாரணமானது என்று விளங்கிற்று. மற்றவர்களிடமிருந்து எனக்குத் தொடர்பு ஏற்படும் என்று நினைத்து நான் காத்திருந்தால், ஒன்றும் நடக்காது என்பது தெளிவாயிற்று. இதனால் நான் மற்றவர்களைத் தேடித் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். மற்றவர்களும் இவ்விதமே தேட ஆரம்பித்தனர்.

நான் சந்தித்த முதல் அங்கத்தினர் தோழர் ஹொன்ஸா விஸ்கோசில் ஆவர். இவர் பொஹீமியா மத்தியப் பகுதிக்குத் தலைவர். முன் முயற்சி செய்து காரியத்தைத் துவக்கும் ஆற்றல் இவரிடம் நிறையவே இருந்தது.

கட்சிக்கு ஒரு பத்திரிகை இல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக, அவர் ஏற்கெனவேயே 'ரெட்-ரைட்ஸ்' என்ற நம் பத்திரிகையை மீண்டும் துவங்கச் சில ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அதன் முதல் இதழுக்கு நான் ஒரு தலையங்கம் எழுதிக் கொடுத்தேன். ஆனால் பிறகு யோசித்து நாங்கள் அந்த முடிவை மாற்றினோம். 'ரெட்-ரைட்ஸ்' என்ற பெயரில் அதை ஒரு தொடர் பத்திரிகையாக வெளியிடுவதற்கு பதில், அப்போது கையில் தயாராக இருந்த கட்டுரைகளை 'மே மலர்' என்ற தலைப்பில் ஒரு தனிப் பிரசுரமாக வெளியிடுவதென்று தீர்மானித்தோம்.

எங்களைப் போலவே மற்றக் கட்சிகளும், அப்போது ஒரே பெயரில் தொடர் பத்திரிகையை நடத்துவதற்குப் பதில், இது போன்ற தனித்தனிப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தன.

அடுத்த மாதங்களில் 'பார்டிஸான்' கொரில்லா வீரர் வேலையில் ஈடுபட்டோம். எதிரிகளின் தாக்குதல் கடுமையானதாக இருந்தபோதிலும், அது கட்சியை அழித்துவிடவில்லை.

கைதான தலைவர்கள் விட்டுச் சென்ற வேலைகளைக் கவனிக்க நூற்றுக்கணக்கான புதிய உறுப்பினர்கள் முன்வந்தனர்.

அவர்களுடைய புதிய முறுக்கும் ஈடுபாடும், இயக்க அஸ்திவாரத்தில் எவ்வித ஆட்டமும் ஏற்படாமல் தடுத்தன.

எவ்விதத் தோல்விமனப்பான்மையும், செயலற்றிருக்கும் போக்கும் தலை நீட்டாதபடி பாதுகாத்தன.

'ரெட்-ரைட்ஸ்' என்ற பெயரில் ஒரு 'பார்டிஸான்' குழு ஒரு பத்திரிகையை வெளியிட்டது. அதன் பிரதி ஒன்று எங்களுக்குக் கிடைத்தது. அதில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒரு அரசியல்கை வேலை செய்வதை நான் கவனித்தேன். அதேபோல், எங்களுடைய 'மே மலரை' அந்தக் குழுவினர் பார்த்தனர். இது மிகவும் சிறந்த முறையில் வெளியாயிற்று என்று கூறமுடியாது. எனினும் தங்களுடன் ஒத்துழைக்க யாரோ ஒருவர் இருக்கிறார் என்பதை, அதில் மற்றவர்கள் பார்த்தனர். இவ்விதம் எங்கள் இரு கோஷ்டிகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ள வழிதேடின.

அது அடர்ந்த காட்டில் யாரையோ தேடுவது போலிருந்தது. எங்கள் காதில் ஒரு குரல் விழும். உடனே அதைக் காண நாங்கள் புறப்படுவோம். பிறகு முற்றிலும் வேறான ஒரு திசையிலிருந்து நிதானமாகக் கேட்கும் சரியான குரல், நமக்கு ஏற்பட்ட பெரு நஷ்டத்தினால், கட்சியில் ஒவ்வொருவரும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள ஆரம்பித்தனர். வலையில் சிக்கிக் கொள்ளாமல் இருக்க நிரம்ப உஷாராக நடந்தனர்.

பழைய மத்தியக் கமிட்டி அங்கத்தினர்கள் இருவர் ஒருவரையொருவர் சந்திக்க விரும்பியபோது, கடுஞ்சோதனைகளுக்கு ஆளாக வேண்டியிருந்தது. அவர்கள் யாரை நம்பினார்களோ, அவர்களே பல வழிகளில் அவர்களைப் பரீட்சித்தனர். பல முட்டுக்கட்டைளைப் போட்டனர். காரணம், இருவரில் எவரும் துரோகியாக மாறிவிடவில்லை என்பதை இரு மடங்கு ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காகத்தான்.

கஷ்டத்திலேயே பெருங்கஷ்டம் என்னவென்றால், நான் சந்திக்கப்போவது யாரை என்பது எனக்குத் தெரியாது. அதபோல அவருக்குத் தான் தொடர்பு கொள்ள முற்படும் நபர் யார் என்பதும் தெரியாது.

கடைசியாக எங்கள் இருவரையும் தெரிந்து கொண்டிருந்த ஒருவரை நாங்கள் கண்டுபிடித்தோம். அவர்தான் டாக்டர் மிலோஷ் நெட்வெட், ஒரு அபூர்வமான இளைஞர். எங்களுடைய முதல் செய்திப் போக்குவரத்து ஊழியர். அவரை நான் சந்தித்தது தற்செயலாக நிகழ்ந்த சம்பவமாகும்.

1941, ஜூன் மத்தியில் நான் நோயுற்றுப் படுக்கையில் படுத்தேன். டாக்டர் நெட்வெட்டை அழைத்துவரும்படி லிடாவை அனுப்பினேன்.


நான் அப்போது ஒளிந்திருந்த பாக்ஸா வீட்டுக்கு அவரை அவள் அழைத்து வந்தாள். அவர் உடனே புறப்பட்டு வந்தார். நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது, அவர் மிக மிக ஜாக்கிரதையாக, வார்த்தையை அளந்து, பேச்சுப் போக்கிலேயே ஒரு விஷயத்தைத் தெரிவித்தார்.

'மே மலரில்' தலையங்கம் எழுதிய ஆசாமியைக் கண்டுபிடித்து, தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்று அவரிடம் கூறப்பட்டிருந்ததாம். நான் தான் அந்த ஆசாமி என்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில், மறுபக்கத்தில் இருந்த எல்லா அங்கத்தினர்களும், கைதானவர்களும் பட்டியலில் என்னையும் சேர்த்து எண்ணிவிட்டனர். நான் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பேன் என்று நினைத்துக்கொண்டிருந்தனர்.

1941, ஜூன் மாதத்தில், ஹிட்லர் சோவியத் யூனியனைத் தாக்கினான். அன்று மாலையிலேயே நானும் ஹொன்ஸாவிஸ்கோசிலும், சேர்ந்து ஒரு துண்டுப் பிரசுரத்தை அச்சிட்டு வெளியிட்டோம்.

செக்கோஸ்லாவாக்கியா மக்கள் அத்தாக்குதலை எப்படிப் புரிந்துகொள்ள வேண்டுமென்று அதில் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம். ஜூன் 30-ம் தேதியன்று, நான் இவ்வளவு நாட்களாய் தேடிவந்த ஆசாமியைக் கடைசியாகச் சந்தித்தேன். நான் குறிப்பிட்டிருந்த விலாசத்தை அவர் தேடி அடைந்தார். ஏனெனில் யாரைச் சந்திக்கப் போகிறோம் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் எனக்கு இன்னும் அவர் யார் என்று தெரியாதிருந்தது. அது கோடை இரவு. மலர் மணம் காற்றில் மிதந்தது. காதலர்களுக்கு உவப்பான நேரம். இருவரும் பேசுவதற்கு முன் ஜன்னலை மூடினோம். விளக்கை நான் ஏற்றியபோது ஒருவரையொருவர் கட்டி அணைத்துக்கொண்டோம். அவர் ஹொன்ஸா ஜிகா.

(தொடர்ந்து வரும்)



கைதான தலைவர்கள் விட்டுச் சென்ற வேலைகளைக் கவனிக்க நூற்றுக்கணக்கான புதிய உறுப்பினர்கள் முன்வந்தனர். அவர்களுடைய புதிய முறுக்கும் ஈடுபாடும். இயக்க அஸ்திவாரத்தில் எவ்வித ஆட்டமும் ஏற்படாமல் தடுத்தன.

---

# நேர்கோடுகள் வளைவதில்லை

" ஓட்டகம்போல நினைவுகளைச் சுமந்து வைத்திருக்கிறேன் கபில். அந்த சுகானுபவத்தில் காலம் கழிப்பேன் கபில்...."

"உனக்கென்ன பைத்தியமா ஆத்மீ?" சகபிலன் கோபமாய்க் கேட்டான்.

"நீயென்னைப் பைத்தியம்னு நினைச்சாலும் அரைக்கிறுக்குன்னு சொன்னாலும் அடங்காப் பிடாரின்னு அபிப்பிராயப்பட்டாலும் நான் அசையப் போவதில்லை கபில்!"

"அவ்வளவு நெஞ்சழுத்தம்! திமிர்!"

"சே... தப்பாப்புரிஞ்சிட்டீங்க மகானே இது காலவோட்டங்களால அழிக்கப்படாத சுவடு. வேதனைகளே வாழ்வின் விழுமியங்களாகிப்போன என்னை இன்னும் சித்திரவதைப்படுத்தாதேன்னு கெஞ்சுற யாசகம்!"

"வாக்ஸன் வருவான்னு இன்னும் நம்பிட்டிருக்கிறியா?"

"என் பெலம் அந்த நம்பிக்கை மட்டும்தான். அதையும் நிர்மூலமாக்கி என்னைப் பெலவீனப்படுத்தணும்னு நினைக்காத கபில், ப்ளீஸ்... அந்த எதிர்பார்ப்பிலும் நம்பிக்கையிலும் நிம்மதியாய் நகர்கிற என் வாழ்வுக்குக்கு கல்லெறிய நினைக்காத கபில்!"

"பைத்தியக்காரத்தனமான- மூடத்தனமான உன் நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் நான் நெய்வார்க்கணும்னு எதிர்பார்க்கிறியா ஆத்மீ?"

"நீ நெய்வார்க்கணும்கிற அவசியமில்ல, ஆனால் திரியையே அணைச்சிட நினைக்காத கபில்!"

"இது தான் உன் முடிவா ஆத்மீ?"

"சர்வநிச்சயமாய்!"

பிரமித்துப் போனான் கபிலன். 'இப்படியும் ஒரு பைத்தியமா....? இப்படியும் ஒரு எதிர்பார்ப்பா' வியந்தான் கபிலன்.

ஆத்மீ பேசாமல் இருந்தாள். இருவர் அகத்திலும் பெரும் போராட்டம். அவள் மௌன நிஷ்டையும் எதிர்பார்ப்பும் தான் என்ன? அவள் எதிர்பார்ப்புகளின் ஆதாரஸ்ருதியே வாக்ஸன்.

✪✪✪

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு ஆனிமாதம் பத்தாம் திகதி அவளிடம் விடைபெற்றுப்போன வாக்ஸன் 'வருவான்' எனும் எதிர்பார்ப்பு. ஆறுவருடங்களுக்கு மேலாகத் தொலைந்து போன வாக்ஷன் இன்னமும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றான் எனும் நம்பிக்கை.

அவளிடம் விடைபெற்று பேராதனை நோக்கிப் பயணப்பட்ட அதே வாக்ஸன் என்றோ மீண்டும் வருவான் எனும் அசைக்க முடியாத நம்பிக்கை.

பேராதனைப்பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவனாயிருந்த வாக்ஷன் முகம் தொலைந்து முகவரி தொலைந்துபோன அந்த உண்மையை ஜீரணிக்கமுடியாது அவள் பட்ட வேதனைகள்: தொண்ணூறாம் ஆண்டோடே அவள் சந்தோஷங்களோடு மங்கலங்களையும் எடுத்துக் கொண்டு போனான் வாக்ஸன்.

வாக்ஸன் எங்கே போனான்? என்ன வானான்? உயிரோடு இருக்கிறானா? எலும்புகளும் மண்ணாகிப்போனதா? எங்காவது ஒரு தடுப்புமுகாமில் அல்லது சிறையில் ஆயுள் கைதியாக வாழ்கிறானா? அல்லது வேதனைகள் ஏற்படுத்திய ஆவேசத்தில் முகம் மாற்றி, முகவரி மாற்றி ஏதேனும் போராட்டங்களில் புதையுண்டு போனானா? அல்லது அந்நியநாடொன்றில் புதிய பிரதியாய் அஞ்ஞாதவாசம் செய்கின்றானா? சாம்பல் மேட்டில் ஒரு பிடிச்சாம்பலாகிப் போனானா?



ஆத்மராஜா ரூக் சந்திரிக்கா

உலகமே அறியாத ரகசியமாய் அவன் வாழ்வும், இருவருக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாய் அவர்கள் நேசமும் காலம் கடத்துகின்றது.

"நீ இன்னமும் காத்திருப்பதில் அர்த்தமேயில்லை ஆத்மீ!" வேதனையாய்ச் சொன்னான் கபிலன்.

விழிகலங்கி ஆகாயத்தை வெறித்துப் பார்த்தாள் ஆத்மீ.

"கபில்! வாக்ஸன் வருவான்.. அந்த நம்பிக்கையிலே, வருவான் எனும் எதிர்பார்ப்பிலே என் எஞ்சிய காலத்தை திருப்தியாய்க் கழித்து விடுவேன் கபில்!"

"யதார்த்தத்திற்கு முரணான வாதம்!"

"நோ... ஒட்டகம் போல நினைவுகளைச் சேகரித்து வைச்சிருக்கிறன் கபில், மாடுபோல அசைபோட்டு அந்த சுகானுபவத்ல காலம் கழிப்பன் கபில். ப்ளீஸ் அனுதாபத்தில அத்திவாரமிடப்படற எந்தவொரு உறவும் நிலையாய் தாக்குப்பிடிக்காது! ப்ளீஸ் கபில் என் நியாயங்களப் புரிஞ்சிடு. என்னைத்தவிர என் நியாயங்கள் தெரிஞ்ச ஒரேயொரு ஜீவன் நீ மட்டும் தான். இந்த உலகமே அறியாத உண்மைகள- உன் பேர்ல கொண்ட நம்பிக்கையில சொல்லிற்றன்! சமுதாய விமர்சனங்களுக்கும் உண்மை நிலைப்பாட்டுக்குமிடையான முரண்பாட்டைப் புரிஞ்சிக்கோ கபில். என் நோக்கம் புனிதமானது, என் வழிமுறையும் தெளிவானது கபில். வாக்ஸன் என்றோ ஒருநாள் மீண்டுவருவான் எனும் என் எதிர்பார்ப்பைச் சிதைக்காமல் காலம் பூராவும் ஒரு உடன் பிறப்பாய் வாழு! அது போதும்!"

கபிலன் தளர்வான புன்னகையோடு எழுந்தான்.

'வாக்ஸா நீ எங்கேயிருக்கிறாய்? ஏன் போனாய் இவளைவிட்டு..? நீ என்றுவருவாயோ அதுவரை நான் உன் ஆத்மீயைப் பத்திரமாய் காத்து உன்னிடம் சேர்ப்பிப்பேன்' அவன் மனம் உறுதியாய் அலறிற்று.



படிப்பகம்

www.padippakam.com

# காதல் நிலா

அ.பர்ஹானா

பேசுவதற்கு நா எழாது விக்கித்து நின்ற நிலாவின் கையில் ஒரு கவரைத் திணித்து....



கட்டிலில் சாய்ந்தவாறு தின முரசுக்குள் மூழ்கிப்போயிருந்தாள் நிலா. "பிள்ளை நிலா! மணி நாலரையாச்சு. இன்னும் க்ளாஸ் போக வெளிக்கிடல்லையோ?" அடுக்களைக்குள்ளிருந்து வந்த தாயின் குரல் அவளைக் கலைத்தது. 'ஓ....ஐந்து மணிக்கு டைப்பிங் க்ளாஸைத் தொடங்கிவிடுவா மிஸ்; தினமுரசோடு உட்கார்ந்தால் நேரம் போவதே தெரியாது,' என்றெண்ணியவாறு வேக வேகமாக ரெடியாகி "அம்மா, போய்ட்டுவாறன்," என்றவள் தாயின் பதிலுக்குக் காத்திராமல் சிட்டெனப் பறந்தாள்.

பாதையில் பவனி வரும் இந்த நிலாவை இப்பொழுதாவது வர்ணித்து விடுவது உத்தமம். இரத்தினச் சுருக்கமாய்க் கூறுவதானால் 'தேவயாணி', 'நிலா' என்று பெயர் வைத்தவர்களின் வாயில் ஒரு பார் 'கண்டோஸ்' திணிக்கலாம்; அத்தனை பொருத்தம். இந்த நிலா உதித்து இன்றோடு 18 ஆண்டுகள், 11 மாதங்கள், 5 நாட்கள். (வர்ணனை போதும் அல்லவா?)

இந்த நிலா டியூட்டரியை அடைய இன்னும் ஒரு தெருவைக் கடக்க வேண்டும். அந்த அரவமற்ற தெருவில்தான் இன்றும் அவன் காத்துக்கொண்டு நின்றான். அவன்- ரவிச்சந்தர். நிலாவை பத்து நாட்களுக்கு முன் இதே தெருவில், இதே நேரத்தில் கண்டது முதல் மனதைப் பறிகொடுத்துவிட்டு பரிதவித்துப் போய், தினமும் நேரந்தவறாமல் தேவி தரிசனத்திற்காய்க் காத்து நிற்கும் காதல் பக்தன்.

இதோ, அவனது இதய நிலா வருகிறாள்....... துணிவைத் துணைக்கழைத்துக் கொண்டு அவளை நெருங்குகின்றான். "எக்ஸ்கியூஸ்மீ.... மிஸ்....கொஞ்சம் நில்லுங்களேன்!" என்றான். இளமை+கம்பீரம் நிறைந்த குரலில் திரும்பிப்பார்த்த நிலாவின் கண்களில் பச்சை மிளகாய்க் காரத்துடன்கூடிய முறைப்பு. "எதற்கு நிற்கணும் மிஸ்டர்?" வார்த்தைகளில் 100 பாகை செல்சியஸ் வெப்பம் தெரிந்தது. "மிஸ், ப்ளீஸ்... கோபப்படாதீங்க; என்னையும் ரோட்டோர ரோமியோக்களில் ஒருத்தனா நினைச்சுடாதீங்க. என் பெயர் ரவிச்சந்தர். பத்து நாட்களுக்கு முன்னால உங்களப் பார்த்தது முதலா நேசிக்கத் தொடங்கி விட்டேன்." அவன் பேசி முடிப்பதற்குள் குறுக்கே புகுந்த நிலா, "என்ன கண்டதும் காதலோ?" அவள் குரலில் கேலி இழையோடியது.

"காதல் என்ன- நாள், நட்சத்திரம் பார்த்தா வரும்? அது எப்போ, யார் மேல வருமெண்டு யாருக்குத் தெரியும்? ஒரு பூ மலர்வது போல என்னோட இதயத்தில உங்கள் மூலமா காதல் பூத்து விட்டது. அது செழிக்கிறதும், செத்து மடியிறதும் உங்க கையிலதான் இருக்கு!" அவனது வார்த்தைகளில் அன்பு பொங்கி வழிந்தது.

பேசுவதற்கு நாவெழாது விக்கித்து நின்ற நிலாவின் கைகளில் ஒரு கவரைத் திணித்து, "இதுல என்னப் பத்தின எல்லா விபரமும் இருக்கு. படிச்சுப் பார்த்திட்டு நெக்ஸ்ட் சட்டர்டே உங்க பதிலக் கூறுங்க. கடைசியா ஒண்ணு மட்டும் சொல்றேன். என்னோட முதல் காதல் இதுதான். என் வசந்தகாலக் கனவுகளை கலைச்சுடாதீங்க!" வார்த்தைகள் ஏக்கத்தில் அடைபட; கண்கள் பனிக்க கூறி முடித்தவன் பைக்கில் ஏறியமர்ந்து அதை உறுமச் செய்தான்.

சூழ்நிலையை அப்போதுதான் உணர்ந்த நிலா ஓட்டமும் நடையுமாய் டியூட்டரியை அடைந்தாள். அன்றையப் பாடத்தில் மனம் ஈடுபடவேயில்லை. விரல்கள் மட்டும் தட்டச்சில் விளையாடிக் கொண்டிருந்தன.

❤ஃ❤ஃ❤

இரவு அந்தக் கவரை பிரித்துப் படித்தாள் நிலா. பயோ- டேட்டாவுடன் கூடிய காதல் மனு. 'காதலன்' பதவிக்கு உரிய சகல தகுதிகளும் பெற்றிருந்தான். இருந்தும் என்ன பயன்? 'இவனுக்குக் கொடுக்கக்கூடிய அளவிற்கு என் உள்ளம் என்ன கோயிலாகவா உள்ளது? இடிந்து சிதிலமடைந்துபோன பாழடைந்த பிரதேசமல்லவா அது!' என்று நினைக்கையிலேயே நிலாவின் கன்னங்களில் இரத்தம் கண்ணீராய்க் கசிந்தது.

கடந்து போன கசப்பான அனுபவம் அவள் மனக் கண்ணெதிரே காட்சியளித்தது.

'வசந்த்...!'

'வசந்தங்களை வாரிக் கொண்டு போன வஞ்சகன். சிரிக்கச் சிரிக்கப் பேசி சிரிப்பையே சிறை வைத்தவன்.'

"நிலா, நீ மட்டும் எனக்குக் கிடைக்கலேன்னா நான் விசராவத்தான் திரியணும். சத்தியமா, நீ என்னோட இணையாயப் போனா என்னையே நான் அழிச்சுக்குவேன் நிலா!" என்று உயிரும் உருகுகிற விதமா வசனம் பேசியவன். ஒரேயொரு வருடத்தில் தன் சுயரூபத்தைக் காட்டியவன். எத்தனை பெரிய துரோகம்! என் கண் முன்னாடியே இன்னொருத்தியுடன் காதல்... எல்லாவற்றையும் விடக் கொடுமை- அவனது கீதா, ராதா, கமலா என்று நீண்டு செல்லும் பட்டியலில் இந்த நிலாவும் ஒருத்தியானது தான்!'

இறந்த காலத்தின் சோகச்சித்திரங்களுக்கு உயிர் கொடுத்த நிலா, மீண்டும் அதை நெஞ்சுக்குழிவைத்துப் பூட்டினாள். நிகழ்காலத்தின் மிகப் பெரிய தற்போதைய கேள்விக்குறி ரவிச்சந்தர்! அவனது உணர்ச்சி மிக்க வார்த்தைகளும், காதல் வரம் கேட்ட கண்களும் நிலாவிற்கு கண்ணாமூச்சி காட்டின.

கண்களை மூடிய நிலா 15 நிமிடங்களை விரயஞ் செய்து தீர்க்கமான ஒரு முடிவுக்கு வந்தாள்; தன் டயறியைத் திறந்து எழுதினாள்:

***புரையோடிப் போன-என்***
***மனக் காயங்களே....!***
***குணமாக வேண்டாம்; நீங்கள்***
***குணம் மாறிவிட்ட***
***அத்துரோகியின் வஞ்சகத்தை***
***நினைவூட்டிக் கொண்டே***
***இருங்கள்;***
***இன்னொரு காதல் முயற்சியை***
***இதயம் ஏற்காதிருக்க!***

# வெண்புறா

கரீமா றாஹில்

"நீயும் இந்த வயசிலே இப்படித்தான் மகன்; உண்ட குணம் புள்ளைக்கிட்ட அப்படியே இருக்கு....."

அந்தக் குழந்தைத்தொட்டில் விழிகளுக்கு மகிழ்ச்சி கொடுத்தது. நாசரின் இதயத்தை வசீகரித்தது. அந்தக் குழந்தை தொட்டில் அவனிடம் வந்து ஒன்றரை வருடங்கள் உதிர்ந்திருந்தன.

நாசரைப் பொறுத்தவரைக்கும் அந்தத் தொட்டில் கோடி ரூபாயைவிடப் பெறுமதியானது. அதற்குள் ஒரு இதயத்தின் கதை குடியிருக்கிறது. இன்னுமொரு கவிதை அதனுள் உறங்கி மகிழ்ந்து விளையாடிய வரலாறு வசித்திருக்கிறது.

அவனின் மகள் ஹனீக்கா அதற்குள் வளர்கிறாள்; வாழ்கிறாள். ஒரு சந்தோச சுவாசம் அவனின் இதயமாகி உயிர் பெற்று எழுந்திருக்கிறது.

"வாப்.ப்.பா..."

ஹனீக்காவின் மழலைக்குள் நாசரின் இதயத்திற்கு மரியாதை கிடைக்கிறது. தந்தை என்ற பதவியை புனிதமாக்கிய ஜீவன் அது.

நாசரின் மனம் அந்த மழலையால் மேன்மையடைந்தது; உண்மையடைந்தது. உலகம் இருப்பதையும் அப்போதுதான் அவன் உணர்ந்தான். தன்வாரிசு தன்னைப் போல் இருப்பதை நினைத்துப் பெருமை பூசிக்கொண்டான். தன்னுடைய மழலைப் பருவத்தைக் கற்பனை செய்து தனக்குத் தானே இலவசமாக விற்பனை செய்தான்.

"நீயும் இந்த வயசில இப்படித்தான்.. மகன்.. உண்ட குணம் புள்ளைக்கிட்ட அப்படியே இருக்கு..."

நாசரின் உம்மா பெருமையோடு கூறுவாள்.

உரிமையோடு அன்பைப் பரிமாறுவாள். தன்னுடைய பேத்தி தன்னுடைய குடும்பச் சாயலில் இருப்பதனால் இன்னும் இன்னும் ஆனந்தம் அவளுக்கு.



"வாப்..பா..வாப்.. பா..த்தத.. த்தத.. தாங்கோ.. தா..ங்..கோ..!

"மகள்.. அது வேணாம்.. மகள்.. கண்ணுல குத்தும்.."

அவன் எழுதிக் கொண்டிருக்கும்போது ஹனீக்கா கேட்பாள். கொடுத்தால்தான் விடுவாள்.

"சரியான பிடிவாதம்.. நெனச்சதச் சாதிப்பாள்.. போலிருக்கு.."

நாசர் மனைவியிடம் வார்த்தைகளை வரைந்தான்.

"அதான் வாப்பாட குணம்.. புள்ளக்கிட்டயும் அப்புடியே இருக்கு..."

"வாப்பாடகுணமா..?. இல்ல உம்மாட குணமா?...."

இதுவும் இன்னொரு சுவர்க்கந்தான்! புதிய சுகந்தான்! குழந்தையை வைத்தே இருவரும் ஊடல் வளர்ப்பார்கள்.

ஹனீக்காவின் மழலைப் பேச்சு. அவளின் குடுகுடு நடை. அங்க அசைவுகள்.. எல்லாம் பார்த்துப் பார்த்து இதயம் இன்பத்தால் வேர்த்துப் போகும்...

"வாப்..பா.. பாட்த்து... பாட்த்து..." றேடியோ போடச் சொல்வாள். அவளாகவே 'கிளாப்' செய்வாள்.

'முஸ்த்தபா முஸ்த்தபா..' பாடல் அவளுக்கு மிகவும் பிடித்தமானது.

"மொஸ்தப்பா.. மொஸ்த்.. தப்பா.. தோன் வொ.றி.. மொஸ்ததப்..பா.."

பாடுவாள். கைகால்களை வீசி ஆடுவாள். பார்த்து மகிழ ஆயிரம் விழிகள் வேண்டும்.

அவளின் செய்கைகளை வர்ணிக்க மொழிகளே போதாது. குழந்தையின் மகிழ்ச்சியில் நாசர் மூழ்கி இருந்தாலும் அவனின் இதயத்துள் சோகம் வசித்துக் கொண்டுதான் இருந்தது. அவனின் உயிரைப் புசித்துக் கொண்டுதான் கிடந்தது. வானொலிச் செய்திகளை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்த்து அவனால் சந்தோசமாக இருக்க முடியவில்லை.

கல்முனை மோதல்......
காத்தான்குடி மோதல்......
காரைதீவு மோதல்......

இந்தப் பிரிவினைச் சக்திகளை நினைத்து இதயத்தால் குருதி சிந்தினான் நாசர்.

* *-* *

துரைமனோகரன் சேர்மீது அவனுக்கு அலாதி விருப்பம். மரியாதை.

மானுட நேசம்பற்றி அவனுக்கு அவர்தான் முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர். துவேசம் துறந்த அறிவு ஞானியான அவரின் அன்பில் ஆனந்தமடைந்திருந்தான் நாசர். காந்தி மீது மிகவும் பக்தியும் மேன்மையும் கொண்டவர். கலாசாலையில் அவரிடந்தான் முழுமையாகத் தமிழ் கற்றான் நாசர். தமிழ் மட்டுமல்ல வாழ்க்கையும் கற்றான் அவன். துரைமனோகரன் சேரின் கற்பித்தல்முறை ஆழமானது. அறிவுபூர்வமானது; கலை இலக்கியத்தின் பாலம் போன்றது. சுவை கலந்து அறிவுவிருந்து படைப்பதில் வல்லவர் அவர். அதனால்த்தான் நாசரின் கற்பித்தலிலும் அவரின் தாக்கம் காணப்படுகின்றது. ஆசிரியத் தொழிலை விருப்பத்தோடு நாசர் தெரிவு செய்ததிற்கும் துரைமனோகரன் சேர்தான் காரணம்.

அவரிடம் அவன் கற்று பட்டம் பெற்று திருமணச் சோலைக்குள் நுழைந்து ஒரு குழந்தைக்கு இன்று தந்தையாகி இருப்பது வரைக்கும் அவனின் மனம் அசைபோடும். அதில் இதயம் நனையும். இனிமை நிறையும்.

துரைமனோகரன் சேருக்கும் ஒரு வாரிசு இருக்கிறது. பலவருடங்களின் உதிர்வில் பல இலட்சங்களின் செலவில் நவீனன் உதித்தான். இப்போது நவீனனுக்குப் பாடசாலை செல்லும் வயது. அவர்களின் வாழ்க்கையே நவீனன்தான். நாசரும் நவீனன் மீது இதயத்தை வைத்திருந்தான். அவரின் ஓய்வு நேரங்களை நவீனன் திருடிக் கொள்கின்றான்.

ஆசிரியர்- மாணவன் என்ற உறவு முறைக்கு அப்பாற்பட்டு நாசர்- துரைமனோகரன் தொடர்பு வளர்ந்தது; ஆல்போல் எழுந்து நின்றது.

நாசரின் மனைவி பிரசவத்திற்காகப் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். தன் உயிரைப் பார்த்துவிட்டு நேராகத் துரைமனோகரனின் 'குவாட்டர்ஸ்'ஸுக்குச் சென்றான். நாசரின் இதயமெங்கும் ஆனந்தம். அவனின் வாழ்வில் இன்னுமொரு உதயம் கிடைக்கப் போவதையிட்டு அவன் சோலையாகக் கிடந்தான். அந்தப் புதிய தென்றலின் வருகைக்காக.

"சேர்.. மிஸிஸ்ஸ ரீச்சிங் ஹொஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்கன்... நாளைக்குத்தான் டேட்.."

"ரொம்ப சந்தோசமான செய்தி... எல்லாம் கடவுள்.. அருளால் நல்லபடியாக முடியும்.. என்னுடைய அட்வான்ஸ் வாழ்த்துக்கள்..."

துரைமனோகரன் சேர் மிகவும் சந்தோசமாகவே தேன் தடவினார்.

"நாசர்.. இன்னுமொரு முக்கியமான விசயம்.. எல்லாம் நல்லபடியா முடியும்... போகேக்க... இங்க ஒருக்கால் வந்துட்டு போவீரோ..?"

அடுத்த விடியலில் ஹனீக்கா கிடைத்தாள். அவனின் இன்னொரு வாழ்க்கை; அவனின் இன்னொரு உதயம் அவனின் வானத்தில் எழுந்தது.

ரிக்கட் வெட்டினான்.

வேன் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி நேராக துரைமனோகரன் சேரின் 'குவாட்டர்ஸ்'ஸுக்குச் சென்றான். அங்கே அந்தப் புனிதமான உள்ளங்கள் அவர்களை வரவேற்றன. வணக்கம் தெரிவித்தன.

"நான் நேசிக்கிற மனிசரில நீரும் ஒருத்தர்.. உந்த 'பேபி கொட்' (தொட்டில்), நவீனனுக்காகப் பயன்படுத்தினதுகள்.. உம்முட பிள்ளை உதுல வளரணும் எண்டு நான் ஆசப்படுறன்..."

"சேர்..ர்..!"

அவன் ஆச்சரியத்தால் மலர்ந்தான்.. அவரின் பெறுமதியான பேபி கொட்டில் ஹனீக்கா வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றாள்.

நாசரைப் பொறுத்தவரையில் அந்த 'பேபிகொட்' அன்புச்சின்னம் மட்டுமல்ல; இன்னுமொரு வெண்புறா. ■

# எல்லை

யாழ்-மு.கலை

கீதாவுக்கு மதிய உணவு தொண்டைக்குள் இறங்க மறுத்தது. இந்த எல்லையைத் தாண்டுவதற்காக பட்ட அசௌகரியங்கள் அவள் நினைவில் வந்தன.



"கீதா, நாங்கள் இந்த முகாமுக்கு வந்து நாற்பத்திரண்டு நாள் ஓடிட்டுது. இன்னும் எங்களை வெளியிலை விடேல்லை. இனியும் வெளியிலை விடுவாங்கள் மாதிரித் தெரியேல்லை. நாங்கள் திரும்ப வன்னிக்கே போகலாம் போலை இருக்கு." என விரக்தியின் விளிம்பில் நின்ற மங்களம் சொன்னாள்.

"என்னம்மா, எவ்வளவோ கஷ்டங்களை அனுபவிச்சு கடைசியிலை கோழிக் கூட்டுக் காம்புக்குள்ளை வந்திட்டம். இனித்திரும்பப் போறதெண்டால் இவ்வளவுநாளும் நாங்கள் பட்ட கஷ்டமெல்லாம் வீண்தானே?" இன்னும் பொறுமையுடன் இருந்த கீதா தாய்க்குச் சொன்னாள்.

"இவ்வளவு நாள் பொறுத்திட்டியள். இன்னும் ஒரு கிழமை பொறுங்க. ஆனந்தன் வந்து எப்பிடியும் எங்களை வெளியிலை எடுக்கும்!" தொடர்ந்தாள் கீதா.

வன்னியிலிருந்து வவுனியா வருகின்ற பயணிகள் பன்னிரண்டு இடைத்தங்கல் முகாம்களில் தடுத்து வைத்திருந்து, வடக்கிற்கு திரும்பச் சென்றாலும் சரி, அல்லது யாழ் செல்வதற்காக திருமலைக்கும் நாட்டின் ஏனைய தென்பகுதிகளுக்கும் செல்வதற்காக அனுமதிக்கப்படும்போது இந்தக் கோழிக் கூட்டு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டு இங்கிருந்தே வெளியில் செல்ல அனுமதிக்கிறார்கள்.

வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இந்த நிலப்பகுதியில் கோழிப்பண்ணை ஒன்றை நடாத்தி வந்தார்கள். முன்பு கோழிக்கூடுகளாக அமைந்திருந்த கட்டிடமே இப்போது மக்கள் தங்குவதற்கான மண்டபங்களாக உருமாற்றம் பெற்றுள்ளன. இதனாலேயே பொதுவாக பொதுமக்களால் இந்த முகாம் 'கோழிக்கூட்டு முகாம்' என அழைக்கப்படுகின்றது.

இடைத்தங்கல் முகாம்களுக்குள் வந்தவர்கள் எவரும் இங்கு வராமல் வெளியில் செல்ல முடியாது. இது கடுமையாக கடைப்பிடிக்கப்படுகின்ற ஒரு நியதியாக உள்ளது.

பல அசௌகரியங்களையும் கடுமையான விசாரணைகளையும் சந்தித்து இந்த முகாமுக்கு வந்து சேர்பவர்கள் வடபகுதிக்கு வெளியே செல்வதென்பதும் இலகுவான காரியமல்ல. போக விரும்புகிற இடத்தில் வதியும் நெருங்கிய உறவினர் வந்து இவர்களைக் கூட்டிச் செல்லவேண்டும். உறவினர்கள் போக விரும்புகிற இடங்களிலிருந்து இவர்களை அழைத்துச் செல்ல வராவிட்டால் திரும்ப இவர்கள் வன்னிக்கே அனுப்பி வைக்கப்படுவார்கள்.

ஆனந்தனைத்தவிர கீதாவுக்கு வடக்குக்கு வெளியே உறவினர்கள் என்று எவருமில்லை. ஆனந்தன், கீதாவை திருமணம் செய்து கொள்ள யாழ்ப்பாணத்திலையே பெற்றோர்கள் நிச்சயித்திருந்தனர். ஆனந்தன்- வேலை இடமாற்றம் திருமலைக்குக் கிடைத்து வந்த வேளையில்தான் கீதா குடும்பம் வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்திருந்தது. "அங்கை பார்பிள்ளை! ஆனந்தன் தம்பிவருகுது!" மங்களம் காட்டிய திசையில் ஆனந்தன் வந்து கொண்டிருந்தான். தம்மை எப்படியாவது ஆனந்தன் வெளியில் எடுத்துவிடும் என்ற நம்பிக்கை கீதாவின் முகத்தில் தெரிந்தது.

முகாம் பொறுப்பதிகாரியிடம் மூவரும் சென்றனர்.

"நீங்க திருகோணமலைக்குப் போறதுக்கு அனுமதி கேக்கிறீங்க. ஆனால் உங்களுக்கு நெருங்கிய உறவுக்காரங்க எவரும் அங்கை இல்லை. எப்படி நாங்கள் பாஸ் கொடுக்கிறது?" பொறுப்பதிகாரி கேட்டார்.

"நான்தான் இவவைக் கலியாணம் செய்யப்போறன். அதாலை என்னுடைய பொறுப்பிலை இவங்களை நீங்கள் அனுப்பலாம்," என்றான் ஆனந்தன்.

"நீங்கள் கலியாணம் செய்யப்போறியள் எண்டு சொல்லுறதை நாங்க எப்படி நம்புறது? அத்தோடை நீங்க திருமலையின் நிரந்தர வதிவாளர் இல்லை. வேலை நோக்கமாகத்தான் அங்கை இருக்கிறியள். அதாலை இவங்களை வெளியிலை விட முடியாது!" என பொறுப்பதிகாரி உறுதியாகவும் இறுதியாகவும் சொன்னார்.

கீதாவுக்கும் மங்களத்திற்கும் மனந்தளர்ந்துவிட்டது. ஆனந்தன் மனந்தளராமல் நிலமைகளை விளக்கினான். ஆனால் பொறுப்பதிகாரியின் முடிவில் மாற்றமிருக்கவில்லை.

வெறுப்புடன் வெளியில் வந்தனர்.

"எப்பிடியும் உங்களை வெளியிலை எடுப்பன். ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம்!" நம்பிக்கையுடன் சொன்னான் ஆனந்தன்.

"எப்பிடி...?" ஆச்சரியத்துடன் கேட்டாள் கீதா.

"யோசித்தால் ஏதாவது வழி கிடைக்கும். நான் இப்பபோய் பின்னேரம் மூன்று மணிக்கு வாறன். நீங்கள் வெளியிலை தற்காலிகமாக போய்வருவதற்கான இரண்டு மணித்தியாலப் பாஸை எடுத்து வையுங்க" என்று ஆனந்தன் ஒரு தீர்மானத்துடன் அவசரமாக வெளியேறினான்.

"திரும்பவும் வன்னிக்கே போக வேண்டியதுதான் போலை!" பெருமூச்சுடன் சொன்னாள் மங்களம்.

கீதாவுக்கு எஞ்சியிருந்த கொஞ்ச நம்பிக்கையும் போய்விட்டது. கோழிக்கூட்டு முகாமிலிருந்து பயணிகள் வெளியேறிச் செல்வதென்பது கல்லில் நார் உரிப்பது போன்ற ஒரு காரியமாகவே உள்ளது.

கீதாவுக்கு மதிய உணவு தொண்டைக் குழிக்குக்கீழே இறங்க மறுத்தது. இந்த எல்லையைத் தாண்டுவதற்காக அவர்கள் பட்ட அசௌகரியங்களே அவள் நினைவில் மீண்டும் மீண்டும் வந்தன.

நாடுகளின் எல்லைகளைத் தாண்டும் போதுதான் விசாரணைகள், சோதனைகள் இடம்பெறும். ஆனால் ஒரே நாட்டின் எல்லைகளைத் தாண்டும் போது விசாரணைகள், சோதனைகள் நடாத்தப்படும் நிலை இங்கு மட்டுந்தான் உண்டு.

மூன்று மணியளவில் ஆனந்தன் மீண்டும் வந்திருந்தான். கீதா இரண்டு மணித்தியாலங்கள் வெளியே சென்றுவருவதற்கான அனுமதியைப் பெற்று வைத்திருந்தாள்.

வவுனியா நகரப்பகுதியில் உள்ள ஆனந்தனின் நண்பனின் வீட்டுக்கு மூவரும் வந்து சேர்ந்தனர்.

நண்பனின் மனைவி எல்லோரையும் உபசரித்தாள்.

அவர்களின் சம்பாஷணை பலவற்றையும் பற்றியதாக இருந்தது.

நாற்பத்திரண்டு நாட்களாக ஒரே ஆட்களுடன் பழகிய கீதாவுக்கு இன்றையச் சந்திப்பு வித்தியாசமான உணர்வையே ஏற்படுத்தியிருந்தது.

சம்பாஷணையின் நடுவில்,-

"நான் ஏன் உங்களை இங்கை கூட்டி வந்தேன் தெரியுமா?" என்ற ஆனந்தனின் வினா கீதாவையும் மங்களத்தையும் ஆச்சரியமடைய வைத்துவிட்டது.

ஏன்? என்ற கேள்விக்குறியுடன் ஆனந்தனைப் பார்த்தனர்.

"உங்களை வெளியிலை எடுப்பதற்காக, உங்களையும் கேட்காமல் ஒரு முடிவை எடுத்திட்டன். அதற்கான ஆயத்தங்களையும் செய்திட்டன்," என்று மெதுவாகச் சொன்னான் ஆனந்தன்.

"என்ன முடிவு?" எனக் கீதா கேட்பதற்குள், "வாங்க ஐயா... வாங்க..." என ஆனந்தன் அங்கு வந்திருந்த பெரியவரை உபசரித்தான்.

"இவர் யார் தெரியுமா கீதா? திருமணப் பதிவாளர்," என்ற ஆனந்தனை கீதாவும் மங்களமும் வியப்புடன் நோக்கினர்.

ஆனந்தன் தொடர்ந்து பேசினான்,

"உங்களுக்கு வடக்குக்கு வெளியே இருக்கிற எவரையும் தெரியாது. நானும் நிரந்தரமாக திருமலையில் வசிப்பவன் இல்லை. அதனாலை உங்களுக்கு வெளியிலை போக பாஸ் தரமாட்டார்கள்; என்பது தெரிந்துவிட்டது." எனப்பேச்சை நிறுத்தி மீண்டும் தொடர்ந்தான்.

"நாங்கள் திருமணம் செய்வது பற்றி எப்பவோ முடிவெடுத்ததுதானே? நாங்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்து அத்தாட்சி காட்டினால்தான் இனி உங்களை வெளியிலை விடுவாங்கள்."

கீதாவுக்கும் மங்களத்துக்கும் நிலமை விளங்கிவிட்டது.

"சொந்தபந்தம் எவரும் இல்லாமல், வந்த இடத்திலை திடீரென இப்படிச் செய்ய வேணுமோ? என்று யோசிக்கிறியளா? ரெஜிஸ்ரேஷன் தானே? கல்யாணத்தை எல்லோருக்கும் சொல்லிப் பிறகு செய்வம். நீங்கள் வெளியிலை வரவேணுமென்றால் இதைத்தவிர வேறு வழி எனக்குத் தெரியவில்லை," என ஆனந்தன் நிலமையினை விளக்கினான்.

"தம்பி நீங்க சொல்லுறபடியே செய்யுங்க!" என மங்களம் அனுமதி வழங்கினாள்.

இடைத்தங்கல் முகாமிலிருந்து சில நாட்களில் விடுதலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் திருமணப்பதிவுத்தாளில் கீதா ஒப்பமிட்டாள். ●



படிப்பகம்

www.padippakam.com

# என்றும் நிரந்தரம்



முகத்தாமரை வாடியிருக்கும்
கண்மலர்கள் காய்ந்து கிடக்கும்
செவ்விதழ்கள் சோர்ந்து கிடக்கும்
பொன் உடலும் சோம்பி இருக்கும்
என்றுதான் நினைத்து வந்தாள் முத்துநகை.

தேவகியோ புன்னகை சூடியிருந்தாள்
கண்களுக்குள் காவியம் காட்டியிருந்தாள்
செவ்விதழ்களில் ஈரம் காயாதிருந்தாள்
பொன் உடலில் அழகு குலையாதிருந்தாள்
முத்து நகை ஆச்சரியக் கடலில் விழுந்தாள்.

காதலனை பிரிந்துவிட்டால் சோகம் சூளும்
காதலியின் கைவளையல் கழன்று வீழும்
தோள் மெலியும், இடைதுவளும் நடைதளரும்
கால் மெலியும் கண் ஓரம் வாடிக் கறுக்கும்
பால் பொழியும் முக அழகு பாழாய்ப் போகும்
வாள் விழியில் எப்போதும் சோகம் முட்டும்
என்றுதான் நினைத்திருந்தாள் முத்து நகை.
இன்றுதான் அந்த நினைப்பு பொய்யோ
என்று நினைக்கலானாள் முத்து நகை.

மஞ்சத்தில் மதன கோலத்தில் சாய்ந்திருந்த
அழகு ரதம், பவள முகத் தேவகியோ
முத்து நகை வியப்பைப் பார்த்து
கொத்து நகை இதழால் தந்தாள்.

"என்னடி முத்துநகை-உன்
கண்ணடி வீச நானென்ன காளையோ?"
தேவகி நகைத்தாள்- முத்துப்பல் காட்டினாள்!

கல் எறிபட்ட குள ஓசைபோல
களுக் என்று சிரிக்கும் தோழியைக் காண
சுள் என்று மறுபடி அதிர்ச்சி அடித்தது!

"சோகமே இல்லையா தோழி? உன்
கோலமே மாறவில்லையே தோழி?"
வியப்பைப் பூசிய வினா விசினாள்

"சோகமா எனக்கா? ஏனடி
கேட்கிறாய்? காரணம் யாதடி?
இதயம் நொருங்கிடும்
விடயம் ஏதும் நடந்ததோ?"

"கண்மணி என்று உன்
கண்ணுக்குள் இருந்தவர்- மண்முதல்
விண்வரை காதல் வளர்த்தவர்-உன்
கண் வரை எட்டாத தூரம் போனார்.
பெண் மனம் தாங்குமோ தோழி-உன்
கண் மலர்தான் தூங்குமோ சொல்லடி."

முத்து நகை தொடுத்த வினாவால்
தத்து நகை ஒன்று இதழில் தவழ்ந்தது.

"பிரிவும் ஒரு வரம்-பிரிவும் ஒரு தவம்
நாட்களின் பிரிவு வாரங்களாகும்
வாரங்கள் பிரிந்தால்தான் வருடங்களாகும்
காலையைப் பிரிந்தால்தான் மாலையாகும்
நாளிலும் பொழுதிலும் பிரிவு நிரந்தரம்
பிரியாதிருப்பது மட்டுமே நிரந்தரமற்றது"

சலனமே இல்லாமல் தோழி சொல்ல
வதனமே வியக்க முத்துநகை முறைத்தாள்.

"பிரிவுக்கு விளக்கமா? ஏனடி
பரிவே உன் மனதில் இல்லையா?"

"காலடிச் சுவடுகளை கால்கள் பிரிந்தால்தான்
வாழ்க்கைப் பாதையில் பயணம் நடக்கிறது.
கருவறையில் இருந்து பிரிவதில் தானே
நம் வாழ்க்கைப் பயணமே ஆரம்பமாகிறது."

தத்துவம் பேசும் தோழியை-தன்
விழிகளால் குத்தினாள் முத்துநகை!

"வேறென்ன உதாரணம்
வைத்திருக்கிறாய்?"

"உதடும் உதடும்
ஓரளவுக்கு மேலே ஒன்றாயிருந்தால்
முத்தம் இனிக்காது!
உரசி உரசி பிரிந்தால்தான்
முத்தம் கசக்காது!"

"ஓஹோ! அனுபவம்
உதாரணமாகிவிட்டதோ?"

"நம் மனம் என்றும் நம் வசமிருந்தால்
காதல் பிறக்காது.
மனங்கள் பிரிந்து இடம்மாறாவிட்டால்
காதல் இனிக்காது!"

"பிரமாதமான உதாரணம்
நீயொரு அறிவுக் கடலடி!"

"கண்ணும் இமையும்
பிரியாதிருந்தால் பார்வையிருக்காது!
பல்லும் பல்லும் பிரியாமலிருந்தால்
உண்ணவும் முடியாது!
வில்லும் அம்பும் பிரியாமலிருந்தால்
போரில் வெல்லவும் முடியாது!
ஆணும் பெண்ணும் என்றும் சேர்ந்தேயிருந்தால்
அதில் சுகமுமிருக்காது, சுவையுமிருக்காது!"

தோழி உதாரணங்களை தொடுத்தாள்.
முத்து நகை மெய் மறந்து ரசித்தாள்.
ஆயினும் வாதம் செய்யும் ஆசை வந்தது.

"இலக்கியக் காதலில் பிரிவு சோகம்-உன்
இலக்கணம் அதற்கு மாறாய் உள்ளதே?"

"சீதையும் இராமனும் இடையில் பிரிந்தனர்
இருவரும் வாழ்ந்தனர், மறுபடி சேர்ந்தனர்
இராமாயணம் இலக்கியம் இல்லையா?
இராமனும் சீதையும் சேர்ந்தே இருந்தால்
இராமாயணம் சுவைத்தா இருக்கும்?"

"பிரிவை வசைபாடும் காதலர் மத்தியில்-நீ
பிரிவை வரவேற்கும் புதுமைப் பெண்ணடி!"

"எடுத்ததுக்கெல்லாம் புதுமை என்று
பொய்யைப் பூசாதே!
வாழ்க்கையின் வழமை
உறவும்-பிரிவும்!
ஒரு நாள் என்பது
இரவும்-பகலும்!
உயிர் வாழ்க்கை என்பது
உறவும் பிரிவும்!
பிரிவு இல்லாமல்
பேரின்பம் இல்லை!
பிரிவே நிரந்தரம், பிரிவு ஒரு வரம்!
பிரிவைக்காதலி- உறவு இனிக்கும்"

"கவலை வாள்வீச-பிரிவை.
காதலிப்பது எப்படி?"

"கவலை ஏனடி? கலக்கம் ஏனடி?
பிரிந்தவர் வருவாரோ என்று
ஏங்கும் மனதில் கவலை தோன்றலாம்.
நம்பிக்கை வெளியேறிய மனதில்
தும்பிக்கை நீட்டும் கெட்ட சோகம்.
வருவார், தருவார்-மறுபடி
வாழ்வோம் உறவினில் கலப்போம்
பிரிவொரு வெய்யில்-மறுபடி
உறவு மழையெனப் பெய்யும்!
வெய்யிலில் காய்வோம்-நாம்
மீண்டும் மழையிடை குளிப்போம்
என்று நாம் நினைத்தால்
பிரிவென்ன செய்யும்?-கொடும்
பிரிவென்ன செய்யும்?"

"மனதில் உறுதி வேண்டும்
என்கிறாய்!- காதல் நினைவில்
நம்பிக்கை பிறக்கும் என்கிறாய்!"

"உறுதி பாதி- உயிர் உறவால்
உருவாகி நிற்கும் செருக்கு மீதி."

"செருக்கா? செருக்கு
தகுமோ?"

"காதலில் வென்றவர் மனதில்
களிப்பினில் ஒரு கர்வம் இருக்கும்.
நம்மை யார் வெல்வார்?
கர்வம் நிமிர்ந்து வினா தொடுக்கும்.
குறுக்கிடும் பிரிவைக் கண்டதும்
கர்வம் எழுந்து உறுதியுரைக்கும்:
மீண்டும் சேர்வோம் மீண்டும் வாழ்வோம்!
ஆகவே தோழி கர்வம் வேண்டும்.
காதலில் பிரிவை கடுகு போல் எண்ண
மனதில் கர்வம் வேண்டும், வேண்டும்!"

தேவகி உறுதியாய் சொல்லி முடிக்க
முத்து நகையும் முகம் மலர்ந்தாள்.
வள்ளுவர் தந்த குறளிலும்
தேவகி சொன்னதின் பொருள் உண்டு.

"விழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு."

அதிகாரம்:120. குறள்:1193

## இலக்கிய நயம்

தருவது ரசிகன்

* பிறரை முட்டாள்களாக நினைப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

வ. மகேந்திரன், மட்டக்களப்பு.

ஒருத்தன் கழுதை மேலே ஏறி சவாரி செய்துகொண்டிருந்தான். எதிரே ஒருத்தன் அழகான குதிரைமேலே ஏறிவந்தான்.

கழுதையில் சவாரி செய்தவன் இறங்கி நின்று குதிரைக்காரனை மறித்தான். குதிரைக்காரன் "என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"என் கழுதையை எடுத்துக்கொண்டு உன் குதிரையைத் தருகிறாயா?" என்று கேட்டான்.

உடனே குதிரைக்காரன் அவனை முறைத்தபடி; "இப்படிக் கேட்கிறாயே, நீ என்ன முட்டாளா?" என்று கேட்டான்.

அதற்கு கழுதைக்காரன் சொன்னான்: "நான் இல்லை, ஒருவேளை நீ அப்படி இருக்கலாம் என்று நினைத்தேன்."

பிறர் முட்டாள்களாக இருபபார்கள் என்று நினைப்பதுதான் சிலரது புத்திசாலித்தனமாக இருக்கிறது.

* சன் ரி.வி., ராஜ் ரி.வி. இரண்டில் எது கலக்கல்?

எஸ். ஜெயஸ்ரீ, நீர்கொழும்பு.

தற்போதைக்கு இரண்டுமே குழப்பல்தான். உதாரணமாக, 'செய்திகள் சுவாசிப்பது சோ' என்ற தலைப்பில் ராஜ் ரி.வி. போடும் நிகழ்ச்சியை 'கட்' பண்ணிவிட்டு இங்கே பாடல் போடுகிறார்கள். அதுபோல சன் ரி.வி.யில் ஒளிபரப்பாகும் தரமான நிகழ்ச்சிகளும் இங்கே முழுமையாகக் காண்பிக்கப்படுவதில்லை. ஏதோ 'ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை' என்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்!

* பெண்ணுக்கு அடக்கம் வேண்டும் என்றால். ஆணுக்கு என்ன வேண்டும்?

திருமதி சோதி நல்லையா, வவுனியா.

அந்த அடக்கத்தை அடிமைத்தனமாக நினைக்காத பண்பு வேண்டும்.

* வாய் இருந்தால் சாதிக்கலாம் என்கிறார்களே? உண்மைதானா?

சே. செந்தில்குமார், குருநாகல்.

வாய் மட்டும் இருந்தால் போதாது; நாக்கும் வேண்டும். நாக்கு மட்டும் இருந்தால் போதாது. அந்த நாக்கை உபயோகிக்க அறிவும் வேண்டும். ஒரு குட்டிக் கதை:

ஒரு ஏழை வாலிபனுக்கு ஒரு பணக்கார வியாபாரியின் பெண்மீது காதல். பெண்ணின் அப்பா சம்மதிப்பாரோ மாட்டாரோ என்று அவனுக்குப் பயம். தன் நண்பனான சட்டத்தரணியின் உதவியை நாடினான்.

சட்டத்தரணி திறமைசாலி. ஆனால் ஒரு பிரச்சனை. அவர் பொய் சொல்ல மாட்டார்.

தானும் பொய் சொல்லக்கூடாது; தன் நண்பனையும் பணக்காரர் ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டும். எப்படி என்று யோசித்தார் சட்டத்தரணி.

தன் நண்பனைப் பார்த்துக் கேட்டார்,

"ஜேம்ஸ், நான் உனக்கு ஒரு இலட்சம் டொலர் தருகிறேன். நீ உன் மூக்கை வெட்டித் தருவாயா?" என்று கேட்டார்.

"தரமாட்டேன்!" என்றான் நண்பன்.

"நல்லது. நாளை அந்தப் பணக்காரர் வீட்டில் ஒரு விருந்து நடக்கிறது. நானும் போகிறேன். உன்னைப் பற்றிப் பேசுகிறேன்," என்றார் சட்டத்தரணி.

மறுநாள் விருந்தில் அந்தப் பணக்காரரிடம் தன் நண்பன் அவர் மகளைக் காதலிப்பது பற்றிச் சொன்னார் சட்டத்தரணி.

அதற்கு பணக்காரர்,"உங்கள் நண்பனின் பொருளாதார வசதி பற்றிச் சொல்லுங்கள்!" என்று கேட்டார்.

சட்டத்தரணி சொன்னார், "அவனிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவனிடம் உள்ள ஒரு சொத்தை ஒரு இலட்சம் டொலர்களுக்கு தருவியா, என்று கேட்டேன். அவன் மறுத்துவிட்டான்." என்றார்.

பணக்காரர் உடனடியாக திருமணத்துக்கு சம்மதித்துவிட்டார்.

* 'பாரதி கண்ணம்மா' படத்தில் மீனாவின் நடிப்பு எப்படி. சிந்தியா?

செல்வி இ. தமிழினி, தெகிவளை.



நடிப்பில் முதிர்ச்சி. காதல் துடிப்பில் இளமை.

* சமீபத்தில் ஹிட்டாகியுள்ள பாடல்களில் முதலிடத்தில் இருப்பது யாதோ?

பா. ஜெயந்தன், மன்னார்.

'இருவர்' படப் பாடல்கள்.

* ரஜினியின் 'அருணாச்சலம்' எப்போது வருகிறது?

எல்.எம். அஸ்வர், கல்முனை.

சித்திரைப் புத்தாண்டில்.

* செல்லச்சாமி ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடுகிறாரே! என்ன நினைக்கிறீர்?

மா. பூபாலசிங்கம், பதுளை.

பொ.ஜ. முன்னணிக்கு முன்னால் சென்ற செல்லாவை பின்னால் சென்ற தொண்டா விரட்டிவிட்டார். வெற்றி தொண்டாவுக்குத்தான்!

ஸ்போர்ட்ஸ்

## மீண்டும் மோதும் மலைகள்



கடந்த வருடம் இவான் ஹோலிஃபீல்டிடம் உலக சாம்பியன் பட்டத்தைப் பறிகொடுத்த மைக் டைசன், அவருடன் மீண்டும் மோதவுள்ளார்.

வரும் மே மாதம் 3ம் திகதி லாவேஜஸ் நகரில் இருவருக்குமிடையிலான குத்துச் சண்டைப் போட்டி நடைபெறுகின்றது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற உலகச் சாம்பியன் பட்டத்திற்கான போட்டியில் 30 மில்லியன் டொலர்களை பரிசாகப் பெற்றிருந்தார் மைக் டைசன். பட்டத்தைக் கைப்பற்றிய ஹோலிஃபீல்டிற்கு ஒரு மில்லியன் டொலர்கள் மட்டுமே கிடைத்தது.

இதற்குக் காரணம், டைசனின் நட்சத்திர அந்தஸ்து அப்போது உச்சத்தில் இருந்தது தான்.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழ். மே மாதப் போட்டிக்கு, டைசனின் ஒப்பந்தத் தொகை 20 மில்லியன் டொலர்கள். ஹோலிஃபீல்டிற்கு 35 மில்லியன் டொலர்கள்.

## "நோ–நோபோல்"

அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகத் தொடர் கோப்பைப் போட்டியில் பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் விளையாடின. பாகிஸ்தான் உலகத் தொடர் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தப் போட்டிகளின்போது நடந்த சம்பவம் இது....

ஜனவரி 16ம் திகதி பாகிஸ்தானுக்கும், அவுஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற போட்டியில், அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ருவட்டின் பந்தில், லெஹ்மனிடம் காச்சானார், பாகிஸ்தானிய வீரர் அமீர் சொஹைல்.

ஆட்டமிழந்ததாக நடுவரால் கூறப்பட்ட போதும் சொஹைல் ஆடுகளத்தை விட்டு வெளியேறவில்லை.

நடுவர்கள் டெரில் ஹெயர் மற்றும் பீட்டர் பார்க்கர் வலியுறுத்தியபோதும், அது 'நோ போல்' என்று வார்த்தை மோதலில் ஈடுபட்டார். ஒரு கட்டத்தில் உணர்ச்சிவசப்பட்டு நடுவர்களைக் கெட்ட வார்த்தைகளால் திட்டினார் சொஹைல்.

பின்னர் பந்தய நடுவர் தலையிட்டு சொஹைலை வெளியேற்றினார். அத்துடன் உலகத் தொடரின் முதல் இறுதிப் போட்டியில் பங்கேற்கக்கூடாது என்று தடையும் விதித்துவிட்டார்.

## இவர்தான் அவர்



பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்

## மறுபடி சித்து

இந்திய அணி தென் ஆபிரிக்கா சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு மார்ச் 6ந் திகதி மேற்கிந்தியத்தீவுக்குச் செல்கிறது.



இது பற்றி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சங்கத் தலைவர் துங்கார்பூர் கூறியபோது,

"மேற்கிந்தியத்தீவு செல்லும் இந்திய அணியில் 3 அல்லது 4 வீரர்கள் மாற்றப்படுவார்கள். தற்போது இருப்பது போல் ஒரு நாள் போட்டி- டெஸ்ட் போட்டிக்குத் தனித் தனி அணிகள் இருக்காது.

நவ்ஜோத் சிங் சித்து, ராஜேஷ் சௌகான் ஆகிய இருவரையும் அணியில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மாநிலங்கள் அடிப்படையில் இந்திய அணிக்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட மாட்டார்கள். தற்போது நடைபெற்றுவரும் உள்ளூர்ப் போட்டிகளை இந்தியக் கிரிக்கெட் தேர்வுக் குழுவினர் தீவிரமாகக் கண்காணித்து வருகிறார்கள்." என்று குறிப்பிட்டார்.

## சிந்தியா பதில்கள்

* உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் அரசியல் தீர்வு வருமா?

ஆர். கேசவன், கொழும்பு-06.

கேசவன், நீங்கள் ரொம்ப ஆசைப்படுகிறீர்கள். தேர்தல்களில் தீர்வுகள் பற்றிய பேச்சுக்கள் வரும்; தீர்வு வராது. மீண்டும் தேர்தல் வரும்.

* இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தமிழக முதல்வரின் தற்போதைய நிலைப்பாடு என்ன?

வி. பரமநாதன், வவுனியா.

மத்திய அரசின் நிலைப்பாடுதான் தனது நிலைப்பாடும் என்று சொல்லிவிட்டாரே கலைஞர். அதாவது ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பது.

* குமார் பொன்னம்பலம் இம்முறை ஏன் தேர்தலில் போட்டியிடவில்லை?

என். சார்ஜகான், கொட்டாஞ்சேனை.

அவருக்கு வோட்டுக் கேட்டுச் சலித்துவிட்டது. அதுதான் வேட்டுச் சத்தங்களை இரசித்துக் கொண்டிருக்கிறார்.

* உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன முன்னணி தோல்வி கண்டால் என்னாகும்?

சிவ.கணேசமூர்த்தி, திருமலை.

அப்படி நடக்கும் என்று தோன்றவில்லை. நிலம் அறிந்து விதை போடுவது போல, நேரம் அறிந்துதான் தேர்தல் அறிவிப்பை வெளியிட்டது ஆளும்தரப்பு.

* ஸிம்பாப்வே அணியிடம் இந்திய அணி தோல்விகண்டு விட்டதே? ஸிம்பாப்வே அணி எப்படி?

செல்வி கே. ஆனந்தி, மொனறாகலை.

ஸிம்பாப்வேயுடன் மொத்தம் மூன்று போட்டிகள். ஒன்றில் வெற்றி தோல்வியின்றி தப்பிக் கொண்டது இந்திய அணி. இரண்டாவது போட்டியில் நெத்தியடியான தோல்வி. மூன்றாவது போட்டியில் எங்கிருந்து உற்சாகம் வந்ததோ தெரியாது; துள்ளி எழுந்து தூள் பண்ணிவிட்டது இந்திய அணி. வெற்றிக்காக எப்போதாவதுதான் இந்திய அணி சீறியெழுகிறது. ஸிம்பாப்வே அணி வெற்றிபெற வேண்டும் என்ற வேகத்துடன் போராடிக் கொண்டிருக்கும் அணி. இங்கிலாந்து அணியையும் மண் கவ்வச் செய்தது அல்லவா ஸிம்பாப்வே அணி? நல்ல எதிர்காலம் இருக்கிறது. இலங்கை அணியிடம் முன்பிருந்த உற்சாகம் ஸிம்பாப்வே அணியிடம் இடம்பெயர்ந்திருக்கிறது.



படிப்பகம்

# இராமாயணம் அங்கம் 70

இராமதூதனாக இலங்காபுரியை அடைந்த அனுமன், தனக்கு இராமபிரானால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையில் பாதியை நிறைவேற்றிவிட்டார். சீதாப்பிராட்டியார் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டறிந்து வந்து சொல்லுவதே அவருக்குரிய பணி. பிராட்டியார், இலங்கைவேந்தன் இராவணனால் அசோகவனத்தில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார் என்பதனைக் கண்டறிந்துவிட்டார். தனக்குரிய கடமையில் முன்பாதியான- பிராட்டியார் இருக்குமிடத்தைக் கண்டறிதல்- முடிந்துவிட்டது. அடுத்து, அத்தகவலை ஓடிச்சென்று இராமபிரானிடம் சொல்லி விடவேண்டியது. பிராட்டியாரைப் பிரிந்து தவிக்கும் தன் பிரபுவுக்கு உரிய நல்லசேதியை வேகமாக ஓடிச்சென்று சொல்லாமல், அரக்கர் படையினை வதம் செய்யும் பணியில் ஏன் காலத்தைச் செலவிட வேண்டும்?

அனுமன் தெய்வீகத் தன்மை கொண்டவர்

செய்ய முடியாதென்பதனால், இந்திரசித்து பிரம்மாஸ்திரத்துக்கான ஆராதனையை மானசீகமாகவே செய்கிறான் என்பது புலவரின் கூற்று.

**பூக்களையும் வெண்ணிறப்பூக்கள் போன்ற அன்னத்தையும் படைத்து, நறுமணம் பொருந்திய தூபமும் தீபமும்- மாசற்ற மனத்தினால் சமர்ப்பித்து, சர்வ உலகங்களையும் தெய்வங்களையும் படைத்த பிரம்மதேவனையும் துதித்து, அப்பிரம்மதேவனுடைய அஸ்திரத்தை தன் வலிமை மிக்க கரத்தில் ஏந்தினான்.**

## தரையில் சாய்ந்த ஆஞ்சநேயர்

பிரம்மாஸ்திரத்தை நாணில் ஏற்றி, மலை போல் நின்றிருந்த ஆஞ்சநேயரின் தோளினைக் குறிவைத்து ஏவினான் இந்திரசித்து. அவ்வஸ்திரம் வில்லிலிருந்து புறப்பட்டபோது பூகம்பம் தோன்றியது போல் உலகமே நடுங்கியது.

மாடங்கள்மீதும் நின்றிருந்த அரக்க ஆடவரும் பெண்டிரும் ஆஞ்சநேயர் மீது வசை பாடினர். கிண்டலும் கேலியும் தொடர்ந்தபோதும் எதனையும் பொருட்படுத்தாது ஆஞ்சநேயர் சாதுவைப் போன்று இழுபட்டுச் சென்றார்.

இராவணனுடைய அரண்மனைக்கே தான் கொண்டு செல்லப்படக்கூடும் என்று கருதிய அனுமன், இராவணனை அங்கு நேருக்கு நேர் காணலாம் என்று எண்ணினார். அமைதியாக நடந்து சென்றார். மனதளவில் இராமநாமத்தை ஜெபித்துக்கொண்டார். அதனால் இவரைப் பார்த்துக் கிண்டலும் கேலியும் செய்தவர்களின் வார்த்தைகள் எதுவும் அவர் காதில் விழவில்லை. ஆஞ்சநேயருடன் போர் புரிந்து மாண்டு மடிந்து போனவர்களின் உறவினர்கள் பலர் தூஷணை வார்த்தைகளினால் ஆஞ்சநேயரை வைதனர். அது மட்டுமல்லாமல் கற்களை எடுத்து அவர்மேல் வீசி எறிந்தனர். வேறு சிலர் ஈட்டிகளினாலும் அவரைக்குத்திக் காயப்படுத்தினர்; சவுக்குகளினாலும் அடித்தனர்.

# பிரம்மஸ்திரத்தால் வீழ்த்தப்பட்ட இராமதூதன்



என்பது உண்மைதான். இராமபிரான் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்பதும் மறக்க முடியாத உண்மை. தெய்வம் மனிதனாக வந்து பிறந்தாலும்- தெய்வீகத் தன்மையுடன்- மனிதருக்குரிய குணாம்சங்களும் கூடவே இணைந்துவிடும். அனுமனும் தெய்வாம்சம் பொருந்தியவராக இருந்தபோதிலும், வானரமாகப் பிறந்தமையினால், அந்தப் பிறப்புக்குரிய சேட்டைகளும் அவரிடம் காணப்படவே செய்யும். இதனால்தான் ஆஞ்சநேயர் தனக்குரிய கடமை முடிந்தபின்னர், கடுகதியில் இராமபிரானிடம் ஓடிச்செல்லாமல் அரக்கர்களிடம் 'சேட்டை'விட்டுப் பார்க்க முற்பட்டார். அத்துடன் சீதாப்பிராட்டியாரை இராமபிரானிடமிருந்து பிரித்து, இருவரையும் துன்பக்கடலில் மூழ்கடித்த இராவணனுக்கு, இராமபிரானின் மகிமையைக் கொஞ்சம் காட்டவும் அவர் முற்பட்டார். 'இராமதூதனுக்கு இத்தகைய வீரம் இருக்குமானால், இராமபிரான் எத்தகைய பராக்கிரமம் உடையவராக இருப்பார்!' என்று இராவணன் ஊகிக்கட்டும், என்ற எண்ணமும் ஆஞ்சநேயரிடம் இருந்திருக்கிறது. வானரத்துக்குரிய இயல்பான குணமும், இராவணனை எச்சரிக்கும் நோக்கமும் இணைந்தமையினால் அரக்கர் படையை அழித்தொழிக்கும் பணியில் ஈடுபட்டார்.

## பிரம்மாஸ்திரம்

மிகச் சாதாரணமாகவே அனுமனால் ஆரம்பிக்கப்பட்ட 'வீர விளையாட்டு' அரக்கர் படைக்குப் பெரும் வினையாகவே முடிந்தது. இராவணனின் இளைய மகனே இந்த விளையாட்டில் பலியானார். இப்பொழுது அரக்கர்க்கரசன் இராவணேசனின் மற்றொரு மகன்- வீராதி வீரன் இந்திரசித்தனே ஆஞ்சநேயருடன் போரிடப் பெரும் படையுடன் வந்து சேர்ந்தான். அத்தனை படைவீரர்களையும் பறிகொடுத்துவிட்டு தனிமரமாக அனுமனின் முன் நின்றான். இந்திரசித்தை அவனுடைய இரதத்துடன் தூக்கி வானில் எறிந்தார் ஆஞ்சநேயர். வானில் மிக உயரம்வரை சென்று மீண்டும் அவன் பூமியை அடைந்தான். அப்போதுதான், தான் சாதாரண குரங்காகக் கருதிய அனுமன் அதிபராக்கிரமம் உள்ள ஒரு ஜீவன் என்பதனை மனதார ஒப்புக்கொண்டான்.

இத்தகைய சக்தி படைத்த வானரத்தை இலகுவில் வெல்ல முடியாது என்று தீர்மானித்த இந்திரசித்து, அனுமன் மீது தன்னிடமுள்ள தெய்வீக அஸ்திரமான பிரம்மாஸ்திரத்தை ஏவத் திட்டமிட்டான். அந்த அஸ்திரத்தை ஏவுவதானால் அதற்கெனத்தனிப் பிரார்த்தனை செய்ய வேண்டும்; மந்திரத்தை உச்சாடனம் பண்ணி சாட்சாத் பிரம்ம தேவனின் ஆசியைப் பெற வேண்டும். அத்தனைகிரியைகளையும் தன் மனத்தாலேயே செய்து முடித்துவிட்டு வில்லினை எடுத்து நாணைப் பூட்டினான்.

இக் கட்டத்தினை கவிச்சக்கரவர்த்தி விபரிக்கும் பாங்கினைப் பார்ப்போம்:

**பூவும் பூ நிற அயினியும்**
**தீபமும் புகையும்**
**தாவுகில் பாவனையால் கொடுத்து**
**அருச்சனை சமைத்தான்;**
**தேவு யாவையும் உலகமும்**
**திருந்திய தெய்வக்**
**கோவில் நான்முகம் படைக்கலம்**
**தடக்கையில் கொண்டான்.**

(சுந்தரகாண்டம்-1036)

பொருள்: போர்முனையிலே பிரார்த்தனைக்குரிய கிரியைகளை வெளிப் படையாகச்

அத்தகைய அஸ்திரம் ஏனைய கணைகளைப் போல் அல்லாது மிகவும் வலிமையும் சக்தியும் உடையது. திரண்ட பருத்த தோள்களையுடைய அனுமனை அவ்வாயுதம் தாக்கியதும் அனுமன் தரையில் சாய்ந்தார். அவரை அவ்வாயுதம் தளர்வடையச் செய்ததே அன்றி தன்னிலை இழக்கச் செய்யவில்லை. தன்னைத் தாக்கியது பிரம்மாஸ்திரம் தான் என்பதனை அனுமன் நெடிப்பொழுதில் உணர்ந்துகொண்டார். அத்தகைய அஸ்திரத்தின் தாக்குதலிலிருந்து விடுபட அவர் எத்தனிக்கவில்லை. அது தெய்வ நிந்தனையாகி விடலாம் என்று கருதி கண்களை இறுக மூடியவண்ணம் தரையில் கிடந்தார்.

அனுமன் பிரம்மதேவனிடம் பெற்ற ஒரு வரத்தின்படி, பிரம்மாஸ்திரம் ஒரு முகூர்த்த நேரம் மட்டுமே அவரைத் தாக்கிக் கட்டுப்படுத்தி இருக்கும். (ஒரு முகூர்த்த நேரம்- இன்றையக் கணக்கின்படி ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம்.) இந்த நினைவு வந்தபின்னரும் கூட அனுமன் பொறுமையுடன் இருந்தார். இந்திரசித்தின் பாணத்தால் ஆஞ்சநேயர் அடிபட்டு விழுந்துவிட்டார் என்று அரக்கர் படையில் எஞ்சியிருந்த ஒரு சில வீரர்கள் கருதினர். அனுமனுக்கு அஞ்சி ஓடி ஒளிந்துகொண்ட வீரர்களும், அனுமன் வீழ்ந்த செய்தி அறிந்து ஓடோடி வந்தனர். அனைவரும் ஒன்று திரண்டு அனுமனைச் சுற்றி நின்று ஆரவாரம் செய்தனர். இந்திரசித்தை வாழ்த்தினர்.

## அமைதியே உருவானார்

பிரம்மாஸ்திரம் கொடிய சர்ப்பவடிவில் சீறிப் பாய்ந்து சென்று ஆஞ்சநேயரைச் சுற்றிக் கட்டிக்கொண்டது. அரக்கருடைய கண்களுக்கு அது கயிறாகவே தென்பட்டது. அக்கயிற்றைப் பிடித்து நூற்றுக் கணக்கானோர் சேர்ந்து இழுத்து அனுமனைத் தூக்கி நிறுத்தினர். பின்னர் இலங்காபுரியின் வீதிகள்வழியாக அவரை இழுத்துச் சென்றனர். அவர்களுடைய ஆட்டத்துக்கெல்லாம் விட்டுக் கொடுத்தவராக ஆஞ்சநேயர் நடந்தார். அவர் கொண்டு செல்லப்பட்ட வீதிகளின் இருமருங்கிலும்,

கண்களை இறுக மூடிக்கொண்ட வண்ணம் சகல இம்சைகளையும் 'இராமார்ப்பணம்' என்று ஏற்றுக்கொண்டு நடந்தார்.

* * *

ஆஞ்சநேயர் இந்திரசித்து ஏவிய பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டு கைதியாகி விட்டார் என்ற செய்தியை காவலர் ஒருவன் ஓடிச்சென்று, சிம்மாசனத்தில் கொலுவீற்றிருந்த இலங்கேஸ்வரனிடம் கூறினான். இதனைக் கேட்ட இராவணன் பெருமகிழ்வடைந்தான். தன்னுடைய அகன்ற மார்பினைத் தழுவிக்கிடந்த மாணிக்க மாலையைக் கழற்றி அக்காவலனுக்குப் பரிசாக அளித்தான். "அக்குரங்கைக் கொன்று விடாமல் உயிருடன் என்னிடம் கொண்டு வந்து சேர்க்கும்படி இளவரசரிடம் சொல்!" என்று அக்காவலனிடம் இராவணன் கூறி அனுப்பினான்.

## இராஜகுமாரன்

'நான் பிடிபட்டாலும் என் ஒருவனாலேயே அரக்கர் பெரும்படை அழிந்திருக்கிறது என்பதனால் அரக்கர்க்கரசன் இராவணன், என் தலைவனின் பெருமையையும் பேராற்றலையும் உணர்ந்தே இருப்பான். இராமபிரானுடன் பொருதி வெற்றிபெற முடியாது என்பதை நான் நேரடியாக இராவணனிடம் எடுத்துச் சொன்னால் நிச்சயம் அவன் நம் வழிக்கு வருவான். பிராட்டியாரை விடுவித்து விடுவான்,' என்று ஆஞ்சநேயர் கருதினார். இராவணனிடமிருந்து வந்த காவலன் இந்திரசித்துக்குக் கொண்டு வந்த செய்தியை ஆஞ்சநேயரும் செவிமடுத்தார். இதனால் தான் நினைத்த காரியம் சுலபமாக ஈடேறப்போகிறது என்று ஆஞ்சநேயர் களிப்படைந்தார்.

'இராவணனை- அவன் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் கோலத்தைப் பார்ப்பேன். அரசவையிலுள்ள அமைச்சர்களையும் தளபதிகளையும், அறிவுரை கூறும் அறவோரையும் அங்கே ஒரே இடத்தில் பார்ப்பேன். என்னுடைய வீரபராக்கிரமச் செயல்கள் பற்றி அவர்கள் கூறும் விமர்சனங்களைக் கேட்பேன். தூதுவன் என்ற அந்தஸ்துடன், அந்த அரசவையில் என் எஜமானனான இராமச்சந்திர மூர்த்தியின் ஆற்றல்களை எடுத்துரைப்பேன். சமாதானமான முறையில் சீதாப் பிராட்டியாரை விடுவித்து, இராமபிரானிடம் மன்னிப்புக் கேட்கும்படி இராவணனிடம் கோருவேன். என் கோரிக்கையினை ஏற்கா விட்டால் அரக்கர் இனமே அடியோடு அழித்தொழிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுப்பேன்!' என்று ஆஞ்சநேயர் பலவாறாகச் சிந்தித்த வண்ணம் நடந்தார்: இராவணனின் அரசவையின் நுழைவாயிலை அடைந்தார்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 68**

**சரியானவிடை:- கிங்கிரர் படை**

1. எம்.எஃப்.என். பாத்திமா. ஸ்டேஸ் வீதி, கொழும்பு-14.
2. தெ. பராளசிங்கம். கட்டிடப் பகுதி, புகையிரத திணைக்களம், மட்டக்களப்பு.
3. செல்வி முருகமூர்த்தி ஜஜிதா. தேற்றாத்தீவு-01, களுவாஞ்சிக்குடி.
4. பி. மணிவாசகம். லெஜார் வத்த, கந்தே கெதர போஸ்ட், பதுளை.
5. மு.தா.மு. அமீன்., இல 31/2, தபாலலுவலக வீதி, ப/ ஹாலி-எல.

**போட்டி இல. 70** கேள்வி- **பிரம்மாஸ்திரம் எந்த வடிவில் சீறிப்பாய்ந்தது?**

பெப்ரவரி. 22 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி- இல.70, தினமுரசு வாரமலர், த.பெ.இல- 1772, கொழும்பு.**

# யமலோகத்தில் ஆள்மாறாட்டம்

காதிலை பூ கந்தசாமி

யமதர்மன்: சித்திரகுப்தா! யார் இந்த மானிடன்? கண்கள் குளமாக, கண்ணீர் வழிந்தோட, கவலை நிழலாட காட்சியளிக்கிறானே?

சித்-குப்: அதுதான் பிரபு எனக்கும் புரியவில்லை. அடையாள அட்டையை தொலைத்துவிட்டு செக் பொயிண்ட்டில் மாட்டிக்கொண்ட இலங்கைத் தமிழன்போல முழிக்கிறான்.

யமதர்மன்: மானிடா! உன் மனக் கவலை என்னப்பா?

மானிடன்: ஆள் மாறாட்டம் நடந்துவிட்டது பிரபு!

யமதர்மன்: குப்தா! என்ன இது புதுக்குழப்பம்?

சித்-குப்: மானிடா! பூலோகத்தில் உன் பெயர் என்னப்பா?

மானிடன்: பெற்றோர் இட்ட பெயர் விசுவலிங்கம். என் பெண்டாட்டி இட்ட பெயர் விஸ்.

யமதர்மன்: பெண்ணாட்டி உமக்கு பெயர் இட்ட காரணம்?

மானிடன்: அது செல்லப் பெயர் பிரபு.

யமதர்மன்: குப்தா! நமக்கு வேண்டிய ஆள் இந்த மானிடன்தானா? கம்யூட்டரை தட்டிப்பார்த்து சொல்லும் மிஸ்டர் குப்தா!

சித்-குப்: *(கம்யூட்டரை தட்டிப் பார்க்கிறார்)* பிரபு! இந்த மானிடன் பொய் சொல்கிறான். இவனது பெயர் விசுவலிங்கமே அல்ல. வெற்றிவேலு! மானிடப் பதரே! பொய் சொல்லாதே!

மானிடன்: ஐயகோ பிரபு! நான் பொய் சொல்லவில்லை. சந்தேகம் இருந்தால் நீதி விசாரணைக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். அதுவும் முடியாவிட்டால் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

யமதர்மன்: மிஸ்டர் குப்தா! இந்த மானிடன் என்ன கேட்கிறான்? என்ன சொல்கிறான்?

சித்-குப்: அதொன்றுமில்லைப் பிரபு. பூலோகத்தில் அரசியல்வாதிகள் விடும் அறிக்கைகளைப் படித்து படித்து இவன் புத்தி பேதலித்துவிட்டது.

யமதர்மன்: என்ன சொல்கிறீர், அரசியல்வாதிகள் அறிக்கை விடுக்கிறார்களா?

சித்-குப்: பூலோகத்தில் கலந்தே இருப்பது அரசியல் வாதிகளும்- அறிக்கைகளும்! வெற்றுக் காகிதங்கள் அவர்களால்தான் வீரம் பெற்றுக் கொண்டிருக்கின்றன பிரபு!

யமதர்மன்: இராமரின் கால் பட்டதால் கல் பெண்ணானது.

மானிடன்: நம் அரசியல்வாதிகளின் கைபட்டால் காகிதங்கள் கணையாகிவிடும்.

யமதர்மன்: ப்பூ.. ஹா ஹா ஹா காகிதக் கணை!

சித்-குப்: ஆமாம் பிரபு! அவர்கள் அகிம்சை வாதிகள். யாரையும் காயப்படுத்த கனவிலும் நினைக்க மாட்டார்கள். அதுதான் காகிதக் கணை விடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யமதர்மன்: காகிதத்தில் கப்பல் செய்து கடல் நடுவே ஓடவிட்டால் கரை சேருமா மிஸ்டர் குப்தா? ரெல்மீ குப்தா! ரெல்மீ!

மானிடன்: பிரபு! நம் அரசியல் வாதிகள் தாங்களும் கரைசேரமாட்டார்கள். நம்மையும் கரைசேர விடமாட்டார்கள்.

யமதர்மன்: பொலிட்டிக்ஸை பொலிட் ரிக்ஸ் ஆக்கிவிட்டார்கள் என்று சொல்கிறாய்! சபாஷ்! மிஸ்டர் குப்தா! இந்த மானிடன் சுயநினைவுடன் தான் பேசுகிறான் என்று நினைக்கிறேன். இவனை எங்கே பிடித்தீர்கள்?

சி.குப்: இவன் பிறந்தது யாழ்ப்பாணத்தில். இவனை நாம் பிடித்தது மொஸ்கோவில்! நமது ஆட்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு பெற்றோல் பவுசர் ஒன்றுக்குள் இவன் தலைமறைவாக இருந்தானாம் பிரபு.

மானிடன்: அபாண்டம்! அபாண்டம்! நான் டிமிக்கியும் கொடுக்கவில்லை, துமுக்கியும் தூக்கவில்லை.

யமதர்மன்: அது என்ன துமுக்கி?

மானிடன்: தூய தமிழில் துமுக்கி என்பது லேட்டஸ்ட் தமிழில் துப்பாக்கி.

யமதர்மன்: ஏனப்பா மானிடா, இப்போதெல்லாம் மானிடர்கள் வாள் பிடிப்பதே கிடையாதா?

மானிடன்: வாள் பிடிப்பது பழைய பாஷன் பிரபு. அதனால் யாரும் வாள் பிடிப்பதில்லை. வேண்டுமானால் வால் பிடிப்பார்கள்.

யமதர்மன்: நல்ல பழக்கம்! தொடர்ந்து சொல்!

மானிடன்: பெற்றோல் பவுசருக்குள் நான் ஒளித்திருந்தது உண்மைதான் பிரபு.

சித்-குப்: பார்த்தீர்களா பிரபு! அவனே உண்மையை ஒப்புக்கொண்டுவிட்டான். கையில் ஏதோ ஒரு ஆயுதம் வைத்திருந்தானாம். கிட்டத்தட்ட நம் கதாயுதம் மாதிரி இருந்ததாம்.

மானிடன்: அது கதாயுதமல்லப் பிரபு! ஒட்சிசன் சிலிண்டர்! பெற்றோல் பவுசருக்குள் இயற்கை வாயுவைச் சுவாசிக்க முடியாது என்பதால் நான் வைத்திருந்த செயற்கை வாயு.

யமதர்மன்: பெற்றோல் பவுசருக்குள் மானிடன் ஏனப்பா மறைந்திருந்தாய்?

மானிடன்: ஏஜென்சிக்காரன் செய்த ஏற்பாடு!

யமதர்மன்: அவனும் உன்னுடன் கூடவந்தானா?

மானிடன்: இல்லைப் பிரபு. அவன் ஹோட்டல் றூமில் காபரே பார்த்துக் கொண்டிருந்தான்.

யமதர்மன்: மிஸ்டர் குப்தா? அது என்ன காபரே?

சித்-குப்: அது ஜொள்ளுச் சமாச்சாரம் பிரபு

யமதர்மன்: ஜொள்ளுத்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது என்ன ஜொள்ளு? புதிதாகப் பூலோகத்தில் உற்பத்தி செய்கிறார்களா?

சித்-குப்: அது நிலத்தில் உற்பத்தியாவதில்லைப் பிரபு. உதட்டில் உற்பத்தியாவது. மேலும் விபரங்களுக்கு பூலோகச் சினிமா பாடலாசிரியர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும்!

யமதர்மன்: மானிடா! பவுசருக்குள் சுருண்டு நீ எங்கே போய்க்கொண்டிருந்தாய்?

மானிடன்: மொஸ்கோ எல்லையைத் தாண்ட வேண்டுமானால் உயிரைக் கையில் பிடித்தபடிதான் செல்லவேண்டும் பிரபு.

யமதர்மன்: திரை கடல் ஓடித் திரவியம் தேடிய தமிழர்கள், பெற்றோல் பவுசருக்குள் என்ன தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?

மானிடன்: எங்காவது பொலிட்டிக்கல் அசைலம் கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருக்கிறோம் பிரபு.

யமதர்மன்: அது என்ன பொலிடிக்கல் அசைலம்?

சி.குப்: அதுதான் பிரபு தப்பியோடும் தமிழர்களின் ஒரே நம்பிக்கையான வார்த்தை. அதன் பொருள் அரசியல் தஞ்சம்!

யமதர்மன்: கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்த குடியல்லவா?

சித்-குப்: அந்த வாளைத் தொலைத்துவிட்டுத்தான் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

யமதர்மன்: நம் ஆட்களை அனுப்பி கண்டுபிடித்துக் கொடுத்துவிடலாமா குப்தா?

சித்-குப்: வேண்டாம் பிரபு!

யமதர்மன்: ஏன் வேண்டாம் என்கிறீர்?

சித்-குப்: தங்களுக்குள்ளேயே அடிபட்டு அழிந்து போவார்கள். நாம் அழைக்க முன்னரே இங்கு வந்து இட நெருக்கடியை ஏற்படுத்தி விடுவார்கள் பிரபு!

யமதர்மன்: என்னப்பா வம்பாக இருக்கிறது! ஒற்றுமை என்ற வார்த்தையே அவர்கள் அகராதியில் கிடையாதா?

சித்-குப்: வார்த்தையை மறக்கவில்லை. அதன் அர்த்தத்தைத்தான் மறந்துவிட்டார்கள்.

யமதர்மன்: காரணம்?

சித்-குப்: தமிழ் பேசும் மக்கள் பொதுநலமாக சிந்திக்கும் பரந்த மனது படைத்தவர்கள். தாம் ஒன்றுபட்டுவிட்டால் ஏனையோர் எங்கே நொந்து போய்விடுவார்களோ என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள். எல்லோருக்கும் கையளவு மனசுதான்! ஆனால் அவர்களுக்கோ கடலளவு மனசு!

யமதர்மன்: மானிடா! உன் கதை சோகமாய் இருக்கிறதப்பா! ஆனாலும் என்ன செய்யலாம்? உன் தலைவிதிப்படி உன் ஆயுள் முடிந்து விட்டதே! தலைவிதியை திருத்த முடியாது அப்பனே! எந்த அழிரப்பராலும் அழிக்கவும் முடியாது! ஸ்ரோங்காக அல்லவா எழுதிவிடுகிறான் மிஸ்டர் பரமன்.

மானிடன்: தவறு தலை எழுத்தில் அல்ல பிரபு!

யமதர்மன்: வேறு எந்த எழுத்தில்?

மானிடன்: பாஸ்போட்டில் தலைமாற்றியதில்தான் தவறு பிரபு தவறு.

யமதர்மன்: *(இருக்கையை விட்டு திடுக்கிட்டு எழுந்தபடி)* உன் உடம்பில் இருப்பது சொந்தத் தலையில்லையா? மிஸ்டர் குப்தா, என்ன நடக்கிறது பூலோகத்தில்? தலையைக்கூட மாற்றும் அளவுக்கு மானிட விஞ்ஞானம் கிசுகிசுவென்று வளர்ந்துவிட்டதா? தலை எழுத்து சூப்பராக உள்ள தலைகளை அவனவன் விலைகொடுத்து வாங்கி மாட்டப்போகிறான் குப்தா!



மானிடன்: மன்னிக்க வேண்டும் பிரபு. தலையை மாற்றியது உடம்பில் அல்ல. பாஸ்போட்டில்! மிஸ்டர் வெற்றிவேலுவின் பாஸ்போட்டில் நான் பயணம் செய்தேன் பிரபு!

யமதர்மன்: அது என்ன விந்தை?

மானிடன்: சிம்பிள். வெற்றிவேலுவின் புகைப் படத்தை கழற்றி கடாசிவிட்டு, என் புகைப் படத்தை 'கம்' போட்டு ஒட்டிவிட்டார்கள். தலை மாற்றுவது என்று சொல்வது அதனைத்தான். தட் இஸ் 'கோட்வேட்'.

யமதர்மன்: அப்படியானால் குழப்பம் எப்படி நடந்திருக்கிறது மானிடா?

மானிடன்: மொஸ்கோவில் பெற்றோல் பவுசருக்குள் ஏற்றுவதற்கு முன்னர் கடவுச் சீட்டு கைதவறிவிட்டது பிரபு. கடவுச் சீட்டை கண்ணுற்ற உங்கள் ஆட்கள் நான்தான் வெற்றிவேலு என்று கடுகதி வேகத்தில் முடிவு செய்துவிட்டார்கள்.

யமதர்மன்: புரிகிறது புரிகிறது! பூலோகவாசிகளின் மோசடி வேலைகளால் நம் தொழிலைக்கூட ஒழுங்காகச் செய்ய முடியாமல் இருக்கிறது. மிஸ்டர் குப்தா! இந்த மானிடனை உடனே ரிலீஸ் பண்ணிவிடும். வெற்றிவேலுவை உடனே அரெஸ்ட் செய்து கொண்டு வாரும்.

('அவன் எந்த பாஸ்போட்டில் எந்த பவுசருக்குள் இருக்கிறானோ' என்று முணு முணுத்தபடியே செல்கிறார் சித்திர குப்தர்)




படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# அங்கும் அப்படித்தான்





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


↑ படத்தில் இருப்பது அமெரிக்க விமானப் படை விமானம். இதன் பெயர்: ஜெனரல் டைனமிக்ஸ் எவ்-111. குண்டுளை முட்டையாகப் போடும்போது எடுக்கப்பட்ட படம் இது. குண்டுகளின் பின்பக்கத்தில் பாரசூட் போன்று அமைக்கப்பட்டுள்ளது. இலக்கை நோக்கி மெதுவாக கீழ் நோக்கி நகர்ந்து கச்சிதமாக விழுவதற்கு இந்த ஏற்பாடு. மற்றொரு பலனும் உண்டு. போடப்பட்ட குண்டு மெதுவாகவே கீழ் நோக்கி செல்லும். எனவே குண்டு இலக்கில் விழ முன்னர் குண்டைவீசிய விமானம் வெகுதூரம் சென்றுவிடலாம். குண்டு விழுந்த சத்தம் கேட்டு எதிரி விழிப்பாகி விமான எதிர்ப்பு ஆயுதங்களால் குறிவைக்க முன்னர் விமானம் பறந்து போய்விடும். அமெரிக்காவில் உள்ள விமானங்களில் மிகப் பழமையானது இது. இப்போதும் இது பயன்பாட்டில் உள்ளது. வியட்நாம் யுத்தத்தில் குண்டுவீச அதிகம் பாவிக்கப்பட்டது இதுதான்.

வியட்நாமுக்குள் குண்டுவீசச் சென்ற 'ஜெனரல் டைனமிக்ஸ்' விமானங்கள் ஆறு சண்டையில் விழுந்து நொருங்கின. நான்கு வாரத்துக்குள் ஆறு 'ஜெனரல் டைனமிக்ஸ்' விமானங்கள் பொத்துப் பொத்தென்று விழுந்து நொருங்கின. நம் நாட்டில் மூன்று வாரத்துக்குள் மூன்று விமானங்கள் விழுந்தது போலதல்லவா.

ஆறு விமானங்களை தொடர்ச்சியாக இழந்த பின்னர் 'ஜெனரல் டைனமிக்ஸ்' விமானத்தின் தொழில் நுட்பம் புதுப்பிக்கப்பட்டது. அதன்பின்னர் இதே ரக விமானங்கள் மூலம் கிட்டத்தட்ட 4 ஆயிரம் தடவைகள் வியட்நாம்மீது குண்டுகள் வீசப்பட்டன. 825 இறாத்தல் எடையுடைய 50 குண்டுகளை இது காவிச் செல்லும்.


லிபியாவுக்கு எதிராகவும், வளைகுடா யுத்தத்திலும் இந்த விமானங்கள் குண்டுத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டன.

↓ கீழே இருக்கும் பிரமாண்டமான கப்பல் இத்தாலியில் உள்ள பாடசாலை மாணவர்களால் தயாரிக்கப்பட்டது.

இதன் நீளம்- 13 மீட்டர். அகலம் 8.5 மீட்டர். உயரம் 2.5 மீட்டர். பாய்மரக்கப்பல் போல வடிவமைத்துள்ளனர். ஆனால் ஒரு விஷயம், இந்த பாய்மரக் கப்பலைக் கடலில் விட்டால் கரைந்துபோகும். ஏன் தெரியுமா? இதனை முழுக்க முழுக்க சொக்கலேற்றுக்களால் தயாரித்துள்ளனர். முறைக்காதீர்கள். இது ஒரு உலக சாதனை.

இந்தச் சொக்கலேற் கப்பலை செய்து முடிக்க 4 ஆயிரம் கிலோ கிராம் (8818 இறாத்தல் 6 அவுன்ஸ்) சொக்கலேற்றுக்கள் பயன்படுத்தப்பட்டன. பெப்ரவரி 1991ல் இத்தாலியில் நடைபெற்ற 'உணவுக் கண்காட்சி' ஒன்றில் இந்த சொக்கலேற் கப்பல் பார்வைக்கு வைக்கப்பட்டது. இனிப்புப் பிரியர்களை கிட்ட நெருங்க விடவில்லையாம். கடித்துத் தின்றுவிடலாம் என்று பயம். 'ராகிங்' போன்றவற்றில் ஈடுபடாமல் இப்படியான சுவையான சுவாரசியமான முயற்சிகளில் மாணவர்கள் இறங்குவது நல்லதுதானே!

# இனிப்பான கப்பல்



# நீருக்குள் சீறும்



தனது மஞ்சள் நீர்மூழ்கியுடன் போஸ் கொடுப்பவர் வில்லியம் ஸ்மித். உலகில் மிக மிகச் சிறிய நீர்மூழ்கி இதுதான். நீளம் 2.95 மீட்டர். (9.6 அடி). இரண்டு வருடமாக தனது கராஜ்ஜில் சொந்த முயற்சியால் இந்த நீர்மூழ்கியை உருவாக்கினார் வில்லியம் ஸ்மித்.

நீருக்குள் 80 அடி ஆழம்வரை இந்த குட்டி நீர்மூழ்கி செல்லக்கூடியது. 1991ல் உருவாக்கப்பட்ட இந்த நீர்மூழ்கி 1993ல்தான் வெள்ளோட்டம் விடப்பட்டது. 4.8 குதிரைவலு கொண்ட எஞ்சின் இதில் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது சசெக்ஸ் கடற்கரையில் அமெரிக்க படையினரால் இது பாவிக்கப்படு... நீர் மூழ்கிக் கப்பலும் இதுவும் ஒன்றல்ல. நீர்மூழ்கிக்கப்பல் பிரமாண்டமானது. நம்நாடு போன்ற ஏழை நாடுகளுக்கு அதனை வாங்கக் கட்டுப்படியாகாது.

ஆனால் இவ்வாறான சிறிய நீர் மூழ்கிகளை புலிகள் தயாரிக்கக்கூடும் என்றுதான் சந்தேகம் நிலவியது. வதந்திகளும் பரவியது. அவை வெறும் வதந்திகள்தான்.

# ஆறில் ஆறு

↓ ஒரு ஓவரில் ஆறு பந்துகள். ஆறு பந்துகளில் ஆறு சிக்ஸர்கள். அடிமேல் அடி. செம சாத்து! அப்படி சாத்துப்படி நடத்தியவர் பெயர்: காரி சோபர்ஸ். மேற்கிந்திய வீரர். முதல் தரப்போட்டி ஒன்றில் 1968ல் அந்த உலக சாதனையைப் படைத்தார். அதன்பின்னர் 1985ல் இந்திய வீரர் ரவிசாஸ்திரி முதல் தரப் போட்டி ஒன்றில் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர் அடித்தார். முதல் தரப் போட்டியில் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர் அடித்த வீரர்கள் இதுவரை அவர்கள் இருவர் மட்டும்தான். எனினும் டெஸ்ட் மற்றும் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இதுவரை எவரும் ஒரு ஓவரில் ஆறு சிக்ஸர் அடிக்கவில்லை.

காரி சோபர்ஸின் மற்றொரு சாதனை டெஸ்ட் போட்டியில் 365 ரன் குவித்து அவுட்டாகாமல் திரும்பியது. 1958ல் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அச் சாதனையைப் படைத்தார். 36 வருடங்களாக காரி சோபர்ஸின் சாதனையை யாரும் முறியடிக்கவில்லை 1994ல் மற்றொரு மேற்கிந்திய வீரர் லாராதான் முறியடித்தார். அவர் குவித்தது 375 ரன்கள்.



# வளரும் நட்சத்திரம்



← இந்திய கிரிக்கெட் அணியில் வளர்ந்துவரும் நம்பிக்கை நட்சத்திரம் ராகுல் திராவிட். கடந்த வருடம் இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்த இந்திய அணியில் ராகுலும், கங்குலியும் புதுமுகங்களாகச் சேர்க்கப்பட்டனர். கங்குலி முதல் டெஸ்ட்டில் சதம் அடித்தார். ராகுல் 95 ரன் குவித்தபோதும் சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

இங்கிலாந்துக் குளிரில் இந்திய அணியின் மூத்த வீரர்கள் சுருண்டுபோக, ராகுல் திராவிட்டும் கங்குலியும் சளையாமல் போராடினார்கள். அதன் பின்னர் இடம் பெற்ற பல ஆட்டங்களில் ராகுல் திராவிட் நம்பிக்கை நட்சத்திரமானார்.

தென்னாபிரிக்காவில் சமீபத்தில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 148, 81 என்று ரன் குவித்த ராகுல் திராவிட் 'மேன் ஒவ் த மட்ச்' ஆக தெரிவுசெய்யப்பட்டார்.

ஒருநாள் போட்டிகளில் துவக்க ஆட்டக்காரராகவும் ராகுல் திராவிட்டை களத்தில் இறக்கியிருக்கிறார் கப்டன் டெண்டுல்கர். 24 வயதான ராகுல் திராவிட் புதிய இரத்தம் தேவைப்படும் இந்திய அணிக்கு கிடைத்த நம்பகமான வீரர்.

இந்தியாவில் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ராகுல் திராவிட் "என் முதல் காதலி கிரிக்கெட்தான்" என்கிறார்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**முஹம்மது வக்கீல்**
**97.02.10**

ஓட்டமாவடி, மக்கள் வங்கி
ஹுசைன்-சபீக்கா தம்பதிகளின்
செல்வப் புதல்வன் முஹம்மது வக்கீல்
தனது முதலாவது பிறந்த தினத்தை
97.02.10ல் மாஞ்சோலை வீதி
செம்மண்ணோடை இல்லத்தில்
அமைதியாக கொண்டாடினார்.
இவரை உற்றார் உறவினர் அனைவரும்
அல்லாஹ்வின் அருளுடன் பல்லாண்டு
வாழ்கவென வாழ்த்துகின்றனர்.